விலை ரூபா 2-00 ★ 20 பக்கங்கள்

ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர்:25 மார்கழி 10 ரபி-அவ் 19 இதழ் 313

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 25-12-83

## அகதிகள் குடும்பங்களுக்கு ரூ. $2\frac{1}{2}$ லட்சம் நிதிஉதவி!

[ஏ. வி. மாணிக்கம்]

வடபகுதியிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்து வெளியேறிய 180 குடும்பங்களுக்கும் 2 லட்சத்து 55 ஆயிரத்து 500 ரூபா சமூக சேவைப் பகுதியால் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள 8 முகாம்களிலிருந்து 35 குடும்பங்களும், குருநகர் முகாமிலிருந்து 48 குடும்பங்களும், பன்னை முகாமிலிருந்து பதின்மூன்று குடும்பங்களும், மாதகல் முகாமிலிருந்து 9 குடும்பங்களும், கரணவாய் முகாமில் இருந்து இரு குடும்பங்களும், புங்குடுதீவு சர்வோதய முகாமிலிருந்து 11 குடும்பங்களும் வெளியேறியுள்ளன

அகதிகளாக முகாமிலிருந்த தனிப்பட்டவர்களுக்கு 500 ரூபாவுக்குள்ளும், குடும்பஸ்தர்களுக்கு 1500 ரூபாவுக்

(20-ம் பக்கம் பார்க்க)

● தமிழர் கூட்டணி நம்பிக்கை

# வடக்குகிழக்கு இணைப்பு: பெரும்பான்மை ஆதரவு!

| எஸ். எஸ். குஹநாதன் |

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து தனியானதொரு மாநில சபை நிறுவ வேண்டும் என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைக்கு சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள கட்சிகளின் ஆதரவு கிடைக்குமென தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புகிறது.

தமிழர் பிரச்னை தீர்வுக்கு வழிகாணும் நோக்கோடு அடுத்த மாதம் 10 ம் திகதி ர்வ கட்சி மகாநாடு ஆரம்பமாகிறது. இந்திராவின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி ஜனவரி 3-ம் திகதிக்கும் 10-ம் திகதிக்குமிடையில் கொழும்பு வருவார் என்றும் நம்பிக்கையான செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி முதல் வாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பல்வேறு கட்சிகளையும் சந்தித்து, வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவர்.

சர்வகட்சி மகாநாட்டில் வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கை ஏற்கப்படுகிற பட்சத்தில் இரண்டு மாகாண மக்களினதும் அபிப்பிராயம்பெறப்படும்.

வடக்கு கிழக்கு இணைப்புக் குறித்து தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலத்திடம் கேட்டபோது, தனது கட்சியும் இதனையே வலியுறுத்துவதாகவும் ஏற்கனவே ஜனாதிபதியைச் சந்தித்தபோதும் இதனை தெரிவித்ததாக தெரிவித்தார்.

''இன ரீதியாக பார்க்காமல் மொழிரீதியாகவே இதனை அணுக வேண்டும். இரு மாகாணங்களிலும் தமிழ் பேசும் மக்களே 90வீதம் இருக்கிறார்கள் என திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியும் சம சமாஜக் கட்சியும் சுயநிர்ணய உரிமையுடன் பிரதேச சுயாட்சி வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்திவருகின்றன. அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. பீட்டர் கெனமனும் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்பதையே தமது கட்சி வலியுறுத்திவருவதாக தெரிவித்திருந்தார்.

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானிடம் இதுபற்றிக் கேட்டபோது, இணைந்து வாழப்போகிற மக்கள்தான் முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

எனவே மாநாட்டுக்கு

(20ம் பக்கம் பார்க்க)

## ஜூலை கலவரங்கள் ஜனாதிபதி வாக்குறுதிக்கு என்ன நடந்தது?

(இ. கந்தசாமி)

ஜூலை இனக்கலவரங்கள் குறித்து ஆணைக் குழு ஒன்று நியமித்து விசாரணை செய்யப்படும் என்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுடன் அவர்களது சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அதே மாதம் 29-ம் திகதி ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறினர். இன்று ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் என டிசம்பர் மாதமும் வந்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. ஜனாதிபதி வாக்குறு

(20-ம பக்கம் பார்க்க)




அனைவருக்கும்
எமது நத்தார் - புதுவருட நல் வாழ்த்துக்கள்
கே. எஸ். பீ. டுவர்ஸ்
உறங்கலிருக்கை வசதியுள்ள
பிரயாணச் சேவை
டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

| கொழும்பில் | யாழ்ப்பாணத்தில் |
| --- | --- |
| செல்வராஜா அன் கம்பனி<br>இல. 204, காள் வேக்ஸ்வீதி,<br>கொழும்பு 11<br>போன்: 32107 | கே. செல்வராஜா<br>அன் பிறதர்ஸ்<br>37, கஸ்தூரியார்வீதி,<br>யாழ்ப்பாணம்<br>போன்: 23517 |
| டைமன் ஸ்ரோர்ஸ்<br>184, காலிவீதி, கொழும்பு 6<br>போன்: 32978 | விநாயகர் றேடிங் சென்ரர்<br>6 A, நவீனசந்தை,<br>யாழ்ப்பாணம்<br>போன்: 23403 |
| சதானந்தபவான்<br>25, செட்டியார் தெரு,<br>கொழும்பு 11<br>போன்: 28552 | இன்ரநெசனல்<br>ட்றேடிங் கொம்பனி<br>கண்டிறோட், கிளிநொச்சி<br>போன்: 303 |
| றும்ஜிலொஜ்<br>361, 363, காலி வீதி,<br>கொழும்பு 4<br>போன்: 589045 | லிங்கம் ஸ்ரோர்ஸ்<br>168, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்<br>போன்: 23576 |

புதுவருடத்திலிருந்து புதிய பஸ்களை காலை சேவையில் ஈடுபடுத்துகின்றோம்.

K. S. B. TOURS
354, Sri Sangaraja Mawatha,
COLOMBO - 10.
போன்: 31182 - 85316

(10761)

## சமாதானம் நிலவ உழைப்போம்!

இலங்கை ஆயர்மன்றம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

''எம் மத்தியில் சமாதானம் நிலவ வேண்டுமென விரும்புவதோடு அமையாது சமாதானத்தை ஏற்படுத்தும் மகத்தான பணிக்கு உள்ளத் தூய்மையோடு தீவிரமாக உழைக்க முன்வரவேண்டும்.''

இலங்கை ஆயர் மன்றம் விடுத்துள்ள கிறிஸ்மஸ் செய்தியில் மேற்கண்டவாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆயர் மன்றத் தலைவர், சிலாபம் ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ, துணைத்தலைவரும் யாழ். ஆயருமான பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை உட்பட நாட்டிலுள்ள சகல ஆயர்களும் கூட்டாக விடுத்துள்ள கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

''எமது நாடு என்னும் மாபெரும் குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வதிலே தான் அன்பானது வெளிப்படுகின்றது.

''நாம் எமது மனங்களிலும் இதயங்களிலும் இருந்து எவ்வகையான வெறுப்பு, சுயநலம், வன்செயல் ஆகிய தீய உணர்வுகளை அழித்து நல்லுணர்வுகளை வளர்த்துக்கொண்டால் மாத்திரமே சமாதானம் சாத்தியமாகும். (கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நான்கு அறைகள் கொண்ட வீடு ஒன்று சகலவசதிகளுடன் விற்பனைக்குண்டு 10/7, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. 10613

புதிய 26'' Telefunken கலர் T. V. யும் (German) Philiphs கசற் றேடியோவும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: ஐ. ஸ்ரீஸ்கந்தராஜா பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. 10717

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ் குடும்பமொன்றுக்கு 20-40வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் ரூபா. 1500/- சாப்பாடு தங்குமிடவசதி உண்டு. போக, வரிக்கற் இலவசம். ஆங்கில அறிவு இருத்தல் நன்று. தொடர்புகொள்ளவும். N. தருமலிங்கம் ''ரட்ணகிரி'' கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 10705

யாழ். நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதியதமிழ்ப்படங்கள் வெளிவந்துள்ளன. உங்களை அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10593

கொழும்புத்துறை மேற்கு காணி 3 பரப்பு கூடிய கேள்விக்கு விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10695 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10695

கொக்குவில் கிழக்கு கோணவளை ஒழுங்கையில் சிறிய வீட்டுடன் ஐந்துபரப்புக்காணி விற்பனைக்குண்டு. சி. துரைராஜா, கோணவளை ஒழுங்கை கொக்குவில்கிழக்கு. 10730

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (10252)

அரியாலை பிரதான வீதியில் [கண்டி றோட்] சென் யூட் சிலைக்கு முன்னால் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் தொழிற்சாலை அமைக்கவும் உகந்தது. தொடர்பு: 33, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். 10610

மானிப்பாய் ஆனைக்கோட்டையில் மூத்தவிநாயகர் கோவிலுக்கு அண்மையில் 3 பரப்பு வீடுகட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 33, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். 10611

Simens (German 12.5 cu-ft இரண்டு கதவுகள் கொண்ட புத்தம் புதிய குளிர்ச்சாதனப் பெட்டி 9/4, துரையாப்பா ஒழுங்கை, ஈச்சமட்டை றோட், சுண்டிக்குளி 10647

Fiat 1100 9 ஸ்ரீ 6556 கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு Dr திருமதி வளர்த்தி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை. 10731

எங்களிடம் தரமான கடைச்சல் மெசின் விற்பனைக்குண்டு. T. சண்முகலிங்கம், 7/5, 1-ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். 10740

## விற்பனைக்கு

சங்கானை பழைய தபாற்கந்தோருக்கு அருகில் வீடு கட்ட சுமார் 3¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கந்தசாமி 89 (139) கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 10727

84 Sri தொடரிலக்கமுள்ள மோட்டார் சயிக்கிள் (Kawasaki 200) விற்பனைக்குண்டு. பொன்னம்பலம் மிசன் பாடசாலைக்கு அருகாமை வல்வெட்டித்துறை. 10735

நல்ல இன தென்னங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். அண்ணா பாம் இணுவில் அல்லது அண்ணா பாம், குரும்பசிட்டி. 10736

Bairaha Farm நல்லின ஒருநாள் இறைச்சிக்கோழிக்குஞ்சு விற்பனைக்கு உள்ளது. கையிருப்பில் சொற்பமே இருக்கின்றது விபரம் எஸ். சுவாமிநாதன் உடையார் ஒழுங்கை, பழம் றோட், கந்தர்மடம். 10741

யாழ். கொன்வென்ற் வீதியில் 2½ பரப்புக் காணியுடன் சகல வசதியும் கொண்ட 4 அறை வீடும், கஸ்தூரியார் வீதியில் மேல்மாடியுடனான கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு மகிரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி] யாழ்ப்பாணம். 10750

சுண்ணாகம் தெற்கு பூதராயர் கோயிலடியில் விவசாயக் காணி (வீடுகட்ட உகந்தது) பரப்பு 10, 12 விற்பனைக்குண்டு. S. P. சிவஞானம், இலங்கைவங்கி ஒழுங்கை, சுண்ணாகம் தெற்கு. 10708

சிறந்த இன அல்சேசன் நாய் உடன் விற்பனைக்கு உண்டு. வயது 1 வருடம் தொடர்பு வை. சுரேஷ்குமார் உடையார் லேன், பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு கொக்குவில். 10755

புடவைக் கடைக்கு ஏற்ற புத்தம் புதிய தளபாடங்கள் கண்ணாடி அலுமாரி உட்பட உடனடியாக விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். பார்வையிடும் திகதி 26 - 12 83 கப்பி ரெக்ஸ், தனங்கிழப்பு வீதி, சாவகச்சேரி. தொடர்பு; க.க தியாகராசா, ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி. 10758

## தேவை

நற்குணமுள்ள ஒழுங்கான கார்ச்சாரதி தேவை. தொடர்புகொள்ளவும். அ. சுப்பிரமணியம் சட்டத்தரணி 6/2 மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணம். 10678

மணமகன் தேவை. யாழ்ப்பாணம் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் டாக்டர் சகோதரர்கள் 35 வயதுடைய தமது சகோதரிக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். சீதனம் ஒரு லட்சம் ரூபாவும், யாழ்ப்பாணத்தில் வீடு வளவும் கொடுக்கப்படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10625, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10625

4 பரப்பில் வீடு அல்லது வீடு கட்டுவதற்கு காணி வடமகாாணத்தில் வீதியோரத்தில் தேவை, ராசவீதியில் விரும்பத்தக்கது. இம்பீரியல் றவல், 51, 1ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. 10666

## தேவை

உள்ளூரில் சேவை செய்வதற்கு நல்ல அனுபவமும் நற்பழக்க வழக்கமும் உள்ள லொறி சாரதியும் கிளீனரும் தேவை. விபரங்களுக்கு: செல்வராஜா, 216 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 10739

றபர்சில் வேலைசெய்வதற்கு கொம்போசிங் பழகிய ஆண்கள் தேவை. றபர்சில் வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர் — யுவதிகள் தேவை. மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். தரன் ஸ்ரூடியோ, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 23858 (10742)

மானிப்பாயிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நிர்வாகத் திறமையுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட பெண் குமாஸ்தா தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10737 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10737

பளை, தென்னந்தோட்டத்திற்கு ஒரு கணக்கர் தேவை. சம்பள விபரம் நேரில், முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:- 10696 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10696

## சேவை

கட்டிட நிர்மாணித்தல் படங்கள் வரைதல் மதிப்பிடுதல் போன்ற வேலைகள் ஒப்பந்த முறையில் செய்து கொடுக்கப்படும். அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர் இ. ந. செல்வராசா உடையாமணல் வீடு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறையில் ஜெமினி பான்சி பலஸில். 10709

சகலவிதமான மருந்துவகைகளும் நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும். ஸ்ரீராம்ஸ் மெடிக்கல்ஸ் கோப்பாய் வீதி, உரும்பிராய் சந்திக்கு அண்மையில். 10733

## வகுப்புகள்

Pianoவும், Accordianனும் சனி, ஞாயிறு உட்பட திருமதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, இல்லாலை. (மகளிர் மட்டும்). 8914

புதிய பிரிவுகள் ஆரம்பம் 4-1-84 Telex Operators (International) 5-ம் பிரிவு Prticals-Professional telex Machines மற்றும் எலக்ரோனிக்ஸ் (3-ம் பிரிவு) ரெலிவிஷன் (3-ம் பிரிவு) எலக்றிக்கல் வயறிங் 4 ம்பிரிவு) டிப்ளோமா பயிற்சிவகுப்புகள் பிரதான பொறியியலாளர்;- Mr. S Kumarasamy (Electronics Engineer) Keen Institute மணியம்ஸ் கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10759

## WANTED

Bride wanted:- Well comected Jaffna Tamil catholic mother seeks for son 42, residing in West Germany holding staff position with the United States Government- At present holidaying in Sri Lanka, A Suitable Bride with view of early marriage Should be willing to live abroad. Dowry negotiable All details in first letter with recent photograph which will be returned. Correspondence confidential. Apply to: Advt. No. 10688 C/o Eelanadu, Jaffna. 10688

## WANTED

Brahmin Indian professor requires educated skilled fair skin brahmin virgin. Air mail photo biodata. Professor, 3167, South Green, Chicago, Illinois 60608, U. S. A. 10693

## மணமகள் தேவை

கல்வி, பண்பு நிறைந்த இந்து வேளாள குடும்பத்தைச் சார்ந்த அழகும் நிறமும் உடைய முப்பது வயதிற்குட்பட்ட சாதகக் குற்றங்களற்ற மணமகளை, நற்பழக்க வழக்கங்களை யுடையவரும், யாழ். நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசாங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றில் மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளம் பெறுபவருக்கு அவரின் குடும்பத்தினர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். வீடு, வளவு யாழ். நகரில் விரும்பத்தக்கது. முதற் கடிதத்திலேயே சகல விபரங்களையும், குறிப்புகளையும் விரைவாக அனுப்பவும். தரகர் வேண்டாம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10438, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10438

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஏலவிற்பனை

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.
பாவித்த லொறி டயர்கள்
பாவித்த இசுசு லொறி எஞ்சின் உதிரிப்பாகங்கள்
பாவித்த ரிம்கள்
இவ் ஏலவிற்பனை எதிர்வரும் 4-01-84 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கக் காரியாலயக் கட்டிடத்தில் நடைபெறும்.

பொது முகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்,
10743

## விளம்பரம்
## வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 3000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவுள்ளன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/-செலுத்திப் பெற்ற விண்ணப்ப படிவங்களில் முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 29-12-83 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுசாக்கிற்கான கேள்விப் பத்திரம் எனக்குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பணவைப்பு ரூபா 500/-ஆகும்.

பொது முகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
10744


## வியாபாரிகளுக்கு சலுகை

லீலா, மெய்கண்டான் மற்றும் கலண்டர்கள், டயறிகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
கொழும்பு விலைகளுக்கு கமிஷன் வழங்கப்படும்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
போன் : 23631.



## A FABULOUS TREAT FROM

"Hotel Ashok''
JAFFNA

## SPECIAL LUNCH

ON
EVERY WEDNESDAYS AND WEEK-ENDS
Only Rs. 33/-Per Head

Reservations { AT THE FRONT OFFICE
T. Phone: 24336/24337
(10749)




## பிறந்த தின வாழ்த்து

**க. தனுசன்**

Franceல் இருக்கும் கருணாகரன் சர்வேஸ்வரி தம்பதிகளின் அருந்தவப்புதல்வன் தனுசன் தனது முதலாவது பிறந்த நாளை 25-12-83ம் திகதியான இன்று Franceல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை டடி, மம்மி, Germany மாமா, சித்தப்பா, Kanadaவிலுள்ள பெரிய சித்தப்பா மற்றும் Kondavilவில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்தா, சின்ன சித்தா, சின்னம்மா, கோபி மாமா, சின்ன அம்மம்மா, அப்பப்பா, அம்மம்மா உற்றார், உறவினர் அனைவரும் துர்க்கையம்மன் நலமுடன் சகலகலாவல்லவனாக பல்லாண்டு வாழ்கவென்றுவாழ்த்துகின்றார்கள். 10628

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

பல்லாண்டு காலமாக

மக்கள் பிரதிநிதிகள்

சபையில் அடையாள


மான்ய ஒதுக்கீடு அளவிலும்

பேச்சளவிலும் இருந்து

இப்போது இலக்கை

அடையும் நிலையை

எய்தியுள்ள




# மகாதேவா தாம்போதி

# எப்போது பூர்த்தி பெறும்?

அண்மைக் காலத்தில் வட பகுதி மக்களிடையே மிகவும் பழக்கமான வார்த்தைத் தொடர் 'மகாதேவா தாம்போதி' யாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டையும் யாழ்ப்பாணத்தின் நெற்களஞ்சியம் என மதிக்கப்படும் பூநகரிப் பிரிவையும் இணைக்கும் கடல் ஏரி வழியே மகாதேவா தாம்போதி எனக் காரணப் பெயர் கொண்டுஇது விளங்குகின்றது.

கேரதீவுத் துறையிலிருந்து சங்குப்பிட்டித் துறை வரை நீண்டு பரந்திருக்கும் ஏரியின் ஊடாக 3300 அடி தூரம் இத்தாம்போதிப் பாதை அமைந்துள்ளது. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சகல துறைகளிலும் பின் தங்கியே உள்ளது. 234 சதுரமைல் விஸ்தீரணமும், சுமார் 14 500 மக்கள் தொகையையும் உள்ளடக்கிய இப்பிரதேசத்தின் வளர்ச்சி இத்தாம்போதி பூரணப்படுத்தலிலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

## தாம்போதியின் வரலாறு

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குப் போவதென்றால் கொழும்புத் துறையில் வள்ளம் எடுத்து பூநகரியிலுள்ள நாகதேவன் துறையில் இறங்கியே பிரயாணம் தொடரும். இப்பிரயாணம் மணித்தியாலக்கணக்கில் இடம்பெறும். ஆனால் காலப் போக்கில் கேரதீவுப் பகுதியிலும், சங்குப்பிட்டிப் பகுதியிலும் ஏரிக்குமேல் வீதி அமைத்து பிரயாண தூரத்தின் இடைவெளி கணிசமான அளவில் குறைக்கப்பட்டது. 1937ம் ஆண்டில்தான் பாதை அமைக்கும் பணி ஆரம்பித்த சமயம் கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடைத் தூரம் 13700 அடியாக இருந்தது. பின்னர் 1956ம் ஆண்டு இவ் இடைவெளி 3300 அடியாகக் குறைக்கப்பட்டது. 1981ம் ஆண்டு 2500 அடிக்கு வீதி அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் சுமார் 800 அடி தூரத்தில் பாலம் 350 அடிக்கும் மிகுதி அணைசுவர் பொருந்திய வீதியாகவும் அமையவுள்ளது.

**து. வைத்திலிங்கம்**
**உதவி அரச அதிபர், பூநகரி**

இன்று 2500 அடிக்குக் கல்லுப் போடப்பட்டு வீதி அமைந்துள்ளபோதிலும், அதில் பக்க வேலைகள் நிறைவு பெறாததாலும், மேலும் ஒரு அடி உயர்த்த வேண்டியிருப்பதாலும், வீதி பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை.

இன்றும் மக்கள் தினமும் பிரயாணத்தில் அல்லலுறுவது அன்றாடக் காட்சியாகும்.

இலங்கைச் சட்ட சபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்த காலஞ்சென்ற திரு பாலசிங்கம் இத்தாம்போதி இணைப்பின் முக்கியத்துவத்தைக் குறித்து சபையில் ஆற்றிய உரைகள் மிகப் பயனுள்ளதும், சுவாரஸ்யமானவையுமாகும். பின்னர் அன்றைய பொது வேலை இலாகாவில் பொறியியலாளராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. மகாதேவா என்பவர் 1937ம் ஆண்டு இத்தாம்போதி இணைப்புவேலையில் மிகவும் சிரத்தை கொண்டு செயலாற்றினார். அவரின் நினைவாகவே மகாதேவா தாம்போதி என அழைக்கப்படலாயிற்று.

சட்ட சபையின் பின்னர், சாவகச்சேரித் தொகுதியைப் பிரதிநிதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் அமரர் குமாரசுவாமி இத் தாம்போதி அமைப்பில் பெரும் அக்கறை கொண்டு உழைத்தார். முன்பு சாவகச்சேரித் தொகுதி, கிளிநொச்சி, அக்கராயன் ஆகிய இடங்களை அடக்கிய பெரிய தொரு தொகுதியாக இருந்தது இங்கு குறிப்பிடற்பாலது. அமரர் குமாரசுவாமியின் நன் முயற்சியினால் தாம்போதி இணைப்பு வேலைகள் மிகத் துரித கதியில் இடம்பெற்றது. ஆனால், பல்வேறு சிக்கல்களால் இந்த இணைப்புவேலைகள் ஸ்தம்பித நிலையை அடைந்தது.

1955ம் ஆண்டு அன்றைய பிரதம மந்திரியாக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சமயம், அச்சமயம் பிரதி மந்திரியாகக் கடமையாற்றிய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் குமாரசுவாமியுடன் மகாதேவா தாம்போதியைப் பார்வையிட்டு, அதனை விரைவில் ஒப்பேற்றித் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பின்னர் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

## அடையாள மானியம்

ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இலங்கைப் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது, பொது வேலை இலாகாவின் மதிப்பீட்டில் மகாதேவா தாம்போதிக்கென ரூபா 10 அடையாள மானியமாக ஒதுக்குவது வழக்கமாய் இருந்தது. இந்த அடையாள மானிய ஒதுக்கீடு எப்பொழுதாவது இந்த வேலை நடந்தேறும் என்ற நம்பிக்கை எல்லோருடைய மனதிலும் ஒளிவிட்டுக்கொண்டே இருந்தது

## ஏற்பட்ட தடைகள்

மகாதேவா தாம்போதி நிரப்பப்பட்டு, வீதி அமைத்தால் கடல் நீரின் நீரோட்டம் குறைந்து ஆனையிறவில் உள்ள இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி பாதிக்கப்படும் என முதலில் ஆட்சேபனை தெரி

(18ம் பக்கம் பார்க்க)

---

## யாழ்ப்பாணத்தில்

# 1960, 1980, 1983....

# எதிர்காலம்?

சோஷலிசப் பொருளாதார சித்தாந்த அமைப்பின் தந்தை எனக் குறிப்பிடப்படும் கால்மார்க்ஸ் என்ற தத்துவ ஞானி, மக்களின் வறுமைக்கும் நாடுகளின் பொருளாதார அம்சங்களுக்கும் அவற்றில் தோன்றும் வர்க்கபேதப் போராட்டங்கள் என்பனவற்றுக்கும் பொருளாதாரக் காரணங்களே மூலாதாரம் என்றும் பொருளாதார விருத்தியில் ஒருபகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் "சமயம் - அது மக்களை மயக்கும் அபின்" என்றார்.

ஆனால், 1968ல் பிரான்சிய பல்கலைக்கழக மாணவர் தலைமையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கல்லூரி மாணவர்கள் பங்குகொண்டு நடாத்திய புரட்சியில் (Commoditics are the opium of the people) "பொருளாதாரப் பண்டங்கள்தான் மக்களின் அபின்" என்ற சுலோகங்கள் முன் வைக்கப்பட்டு பொருளாதார விழிப்புணர்ச்சிக்கான செயற்பாடுகள் தூண்டப்பட்டன.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலையில் பொருளாதாரப் பொருட்கள் என்பவை மட்டுமன்றி அன்றாட அத்தியாவசியப் பொருட்களும்கூட மக்களின் பார்வையில் அவைகளை மயக்கும் அபினாக மட்டுமல்லாமல் கொல்லக்கூடிய விஷயமாகவே காணப்படுகின்றன என்பதற்குச் சிறு இது உதாரணம்:

| | 1960 | 1980 | 1983 |
|---|---|---|---|
| அரிசி 1 கொத்து | 2/50 | 7/00 | 9/00 |
| முட்டை ஒன்று | -/25 | -/90 | 1/75 |
| 1 பைந் பால் | -/70 | 2/00 | 4/50 |
| 1 றுத். சராசரி மீன் | 2/00 | 6/00 | 13/00 |
| 1 கப் வெறும் தேநீர் | -/05 | -/35 | /75 |
| 1 பிளா கள்ளு | -/20 | 2/50 | 4/50 |
| 1 யாழ்/சுருட்டு | -/01 | -/12 | -/30 |
| 1 தேங்காய் | -/25 | 1/50 | 7/00 |
| 1 யார் பப்ளீன் | 2/10 | 9/00 | 15/00 |
| பெற்றோல் 1 கலன் | 2/95 | 12/00 | 67/50 |
| மாநகர எல்லை உள் ஒரு பரப்புநிலம் | 1000/00 | 10,000/00 | 100,00/00 மேல் |

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் நெருக்கடியான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குச்சம்பளம் எந்த அளவிற்கு உயர்வது; விலைகளை வாழ்க்கைத்தரம் எப்போது

● **திரியம்பகி**

எட்டிப்பிடிப்பது என்பன யாவும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். எனவே யாழ்ப்பாணப் பொருளாதார விழிப்புணர்ச்சிகள் தூண்டப்படுவதற்கு 'விலைகளே மக்களை மயக்கும் அபின்' என்ற கோஷமே முன்வைக்கப்பட்டுச் செயற்பாடுகள் உருவாக்கப்படுதல்வேண்டும். அப்போது தான் எம் சந்ததியர் விலைகளின் செய்மதி வேகத்தை உணரமுடியும்.

## கடவுளின் கருணை

கடவுள் தாமே உங்களுக்குத் தமது பெயரால் போதிக்கும்படி ஒருவரை அனுப்பாவிடில் மானிடரை நல்லொழுக்கத்தில் நிலைநிறுத்த உங்களால் இயலாது.

—பிளேட்டோ



## நாதன் நாமம் பாடுவோம்

நத்தார் வந்தது நாங்கள் சேர்ந்து
நாதன் நாமத்தைப் பாடுவோம்
சத்தியம் காத்த உத்தமர் இயேசுவின்
சரணம் போற்றி ஏற்றுவோம்
மெத்தை இல்லை மேல் வீடில்லை
கத்தை வைக்கோல் தொழுவத்தில்
சித்தம் விரும்பி கர்த்தர் இயேசுவை
இத்தரை மீதினில் நத்தாரே!

பூக்களை அள்ளிச் சாற்றிட வாரீர்
பூமகன் பாதம் சிரிக்கட்டும்!
பாக்களைப் பாடியே ஆடிட வாரீர்
பாலகன் இயேசு மகிழட்டும்!
ஆக்கிய பாவம் அறவே ஒழிப்பார்
அன்னை மேரியின் பாலகன்
வாக்கிய மாகிய பாக்கியம் பெற்றவன்
வாழ்வில் ஜீவ நாயகன்!

– நவாலியூர் நாவுக்கரசன்

● ஒரு நினைவூற்றுச் சித்திரம்

# ஐம்பது ஆண்டுகளுக்குமுன்

# யாழ். மத்திய கல்லூரி

**தேசிய உடையில் தோற்றிய**
**தம்பரும்**
**கலைப்புலவரும்**
**மாணவரிடையே**
**தேசியப்பற்றை**
**ஏற்படுத்தினர்கள்**

மூன்று ஆண்டுகள் யாழ். கிளனர் கல்லூரியில் படித்துவிட்டுப் பின்பு யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்தேன். கல்லூரியில் சேர்வதற்கு எனது தந்தையார் மலாயா போன

**அக்கால மாணவர்கள்**
**படித்துக் கொண்டிருக்கப்**
**பரீட்சைகள்நடந்தன**
**இப்போதோ**
**மாணவர்கள்**
**பரீட்சைக்காகப்**
**படிக்கிருர்கள்!**

படியால் தனது நண்பன் ஒருவரிடம் இந்தக்கடமையை ஒப்படைத்திருந்தார். 1626-ம் ஆண்டுடிசம்பர் மாதம் தந்தையாரின் நண்பன் யாழ். மத்தியகல்லூரித் தலைமையாசிரியர் ஜே. கே. சண்முகம் வீட்டிற்கு என்னைக் கூட்டிக் கொண்டுபோய் அறிமுகப் படுத்தினர். அத்தருணம் ஆசிரியர் சண்முகம், 'எங்களுடைய நாகமுத்து மாஸ்டர் மகனு? சரி, கல்லூரி தொடங்கிற அன்றுவா. நேரே கந்தோருக்குப்போய் அங்கே உனது இனத்தவர் லிகிதர் வைத்திலிங்கம் இருப்பார். அவர் ஆவனசெய்வார், என்ருர். 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் பாரம் (2nd Form)சேர்ந்தேன். எங்களுடைய வகுப்பாசிரியர் ஜி. டபிள்யூ. தம்பர் (ஏ. ஈ. தம்பரின் தந்தையார்), புது மாணவர்களின் பெயர்களைச் சொல்லச்சொன்னர். நான் எனது பெயரைக் கூறியதும், 'ஓகோ, நாகமுத்து மாஸ்டர் மகனு? எம். ஏ. எம். எஸ்சி. சரவணமுத்துதானே உனது சித்தப்பா?' என்ருர். இது எனக்கு ஒரு பெரிய வரவேற்பாயிருந்தது.

சாதாரணமாக படிப்பு நடந்துகொண்டிருந்தது. லத்தீனுக்குப் பதில் சமஸ்கிருதம் படிக்கும்படி தந்தையார் கட்டளையிட்டார். இதுபெரிய பாக்கியம் என்று பிற்காலத்தில் அறிந்தேன் பிற்காலத்தில் சமஸ்கிருதம் படித்ததால் மலாய், இந்தோனீஷியா வேறும் சில மொழிகளைக்கற்பதற்குச் சுலபமாகவிருந்தது முதல்முறையாகப் பண்டிதர் இராமசாமிசர்மாவை 1927ம் ஆண்டு சந்தித்தேன். இவர் தான் எங்கள் சமஸ்கிருத ஆசிரியர். அவர் சிவன்கோவிலடியில் இருந்தார். எனது வீடும் வண்ணார்பண்ணையில் இருந்ததால் காலையில் கல்லூரி போகும்பொழுது அநேகமாக இவரைச் சந்திப்பேன்.

## அரமும் குரமும்

போகும்பொழுது பலதும் பேசுவோம். இவையெல்லாம் அறிவுரைகள் என்றுபிற்காலத்தில் அறிந்தேன். சமஸ்கிருத வகுப்பில் ஒரு மனதில் படியக்கூடிய புத்தியைக் கூறினர் அவர். ஏதாவது ஒரு பாடத்தைப் படித்துவிட்டு எல்

## மாணிக்க இடைக்காடர்

லாம் தெரியுமென்று நினைக்கக் கூடாது என்பதற்குச் சான்ருக ஒருகதை சொன்னர்; "ஒருதமிழ்மாணவன்தெலுங்கு படிக்கத்தொடங்கினன். தெலுங்கு ஆசிரியர் முதல் சொல்லிக்கொடுத்தது, ஆனைக்கு தெலுங்கு அரம். மாணவன் வேறு தெலுங்கு படிக்கத் தேவையில்லை என்ருன். அப்பொழுது ஆசிரியர் குதிரைக்கு தெலுங்கு என்னவென்று வினவ குரம் என்ருன்.'' பண்டிதர்சர்மா கூறுவார், ஆனைக்கு அரமென்ருல் குதிரைக்குக் குரமல்ல; இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்என்று. இதில் நாமறியக்கூடியதுஎன்னவென்ருல், ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துக்கொண்டு எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்பது தவறு என்பது தான். எனது பொது அறிவுக்கு வித்திட்டவர்களில் பண்டிதர் சர்மாவும் ஒருவர்.

## காந்திஜி விஜயம்

கல்லூரியில் அந்த ஆண்டு மறக்க முடியாதது. காந்தி அடிகள் யாழ்ப்பாணம் வந்த பொழுது கல்லூரிக்கு வந்தமை. அண்ணல் உட்கார ஒரு நாற்காலியும் முன்னுக்கு ஒரு மேசையுமிருந்தன. காந்தியடிகள் வந்ததும் மேசையிலே ஏறி காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்தார். அவர் அருகில் ராஜாஜி நின்ருர், அண்ணல் ஆங்கிலத்தில் பேசியதை ராஜாஜி தமிழில் மொழி பெயர்த்தார். கல்லூரி கிறிஸ்தவக்கல்லூரி என்பதால், கிறிஸ்தவ வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்பதே அவரது பேச்சு.

மறு ஆண்டு எனக்குப் பதினெரு வயது. மூன்ருவது பாரத்திற்கு வந்துவிட்டேன். கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகக் கணிதப் பட்டதாரி கிபன் (Gibbon) எங்களுக்குக் கணிதம் படிப்பித்தார். அற்புதமாகப் படிப்பிப்பார். கணிதத்திற்கு அவர் உயிர் கொடுத்தார் என்றே சொல்ல வேண்டும். வகுப்பில் பத்துப் பதினைந்து நிமிடம் ஒரு விடயத்தை விளங்கப்படுத்திவிட்டு, நாலு அல்லது ஐந்து கணக்குகள் கொடுப்பார். பத்து நிமிஷம்- கூடினல் பதி

(17-ம் பக்கம்பார்க்க)

# இலக்கிய உதை

ஈ.கே.ஆர்

## செங்கை ஆழியான்

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் பகுதி உதவி அரச அதிபராகப் பதவியேற்றுள்ளார். பாண்டியன்குளம் பிரிவு இவரது சேவையைப் பெறுவதற்குக் கொடுத்து வைத்திருக்கிறது! இலக்கிய உலகுக்குச் செங்கை ஆழியாளுகப் பிரபல்யமான திரு க. குணராசாவுக்கு நமது இதய வாழ்த்துக்கள்!

தமிழ் இலக்கிய உலகுக்கு நன்கு பரிச்சயப்பட்ட எழுத்தாளர்கள் பலர் இலங்கை சிவில்சேவையிலும், நிர்வாக சேவையிலும் இருந்திருக்கிருர்கள்.

மறைந்த எழுத்தாளர்கள் இலங்கையர்கோன், மஹாகவி செ. கதிர்காமநாதன் போன்றவர்கள் மறைந்தும் மறையாமல் நெஞ்சில் நிலைத்து நிற்கிருர்கள்! செ. யோகநாதன், து. வைத்திலிங்கம், பொ. சிங்காரவேலு, உடுவை தில்லைராசா போன்றவர்கள் இருப்பவர்கள்.

## எஸ். பொ.

எஸ். பொ. என்ருல் இலக்கிய உலகு நன்கு அறியும்! தனித்துவமான இடத்தோடு தனித்துவமான முத்திரை இவருக்குண்டு. சொல்லாட்சித் திறன் இவருடன் கூடப்பிறந்தது. எதிராளி களைச்சாடுவதும், 'சொட்டை' சொல்வதும் இவருக்குக் கைவந்தகலை! சில காலமாக இந்நாட்டில் இவர் இல்லாதது தமிழ் இலக்கிய உலகு கலகலப்பற்று இருக்கிறது. நைஜீரியாவில் திரவியம் தேடச்சென்றுள்ள பொன்னுத்துரை விரைவில் நாடுதிரும்பி இங்கேயே நிரந்தரமாக வாசம் செய்யப் போகிருர் என்ற ஒரு செய்தி காற்ருேடு கலந்துவந்து காதுகளில் விழுகிறது. இந்தச் செய்தி எவ்வளவு தூரம் உண்மையோ? ஆனுலும் அவர் இங்கிருந்து கொண்டு பயனுள்ள இலக்கியப்பணி ஆற்ற வேண்டும்.

## சொக்கன்

நமது புத்தகங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைக் குறிப்பிட்டுச் சொல்வதில் வல்லவர் எழுத்தாளர் சொக்கன்! முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்க்கை நூலில் உள்ள எழுத்துப் பிழைகளைக் கண்டு பிடித்துத் தனது முன்னுரையில் அவற்றைத் தெரிவித்துள்ளார்.

## மனோன்மணி

இந்த நூலை எழுதி முடிப்பதற்குத் திருமதி மனோன்மணி சண்முகதாஸுக்குப் பதினைந்து ஆண்டுகள் பிடித்ததாம்!

டோக்கியோப் பல்கலைக் கழகத்தில் பயிற்சியை மேற்கொண்டுவரும் திருமதிமனோன்மணி 22 வருடங்களுக்குமுன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது, தாமோதரம்பிள்ளைப் பெரியாரது பெருமையை உலகறியச் செய்யவேண்டுமென்ற எண்ணம் உதித்ததாம். அமரர் கலாநிதி கைலாபதி இவருக்கு இவ்விஷயத்தில் பெரும் உதவிபுரிந்துள்ளார்.

## கண்ணதாசன்

ஒரு காலத்து எழுத்துக்கள் மறுகாலத்தில் அவசியமாவ

(18ம் பக்கம் பார்க்க)


ரஞ்ஜனுஸ் வீடியோ சென்ரர் ஸ்தாபனத்தாரின்

நத்தார்

**புதுவருட வாழ்த்துக்கள்**

சிறந்த வீடியோ படம்பிடிக்கும்

T. V. டெக், கசற் வாடகைக்கும்

ரஞ்ஜனுஸ்

ranjanas TV/VIDEO CLUB வீடியோ சென்ரர்

60, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

வி. கே. இராசரத்தினத்தின்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
அன்பர்கள் அனைவருக்கும்

கிறிஸ்மஸ்—புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

நத்தார் பண்டிகையோடு
புதிய வருடத்தில்

உங்கள் பெறுமதிமிக்க முதலீடாக
யப்பானின் முதல்தரமான

**நெஷனல்** ரெலிவிஷன்களை ஆக்கிக் கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

V. K. இராசரத்தினம்

பிரதான விற்பனையாளர்
(Key Dealer) யாழ்ப்பாணம்.

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**போம்**

அதிசய சலவை தூள் உங்கள்
துணிகள் வெண்மையாகவும்
பளபளப்பாகவும் துவைக்கும்




நயமான விலையும் கூட

சாளமாக நுரைக்கும்
நன்ருகக் கரையும்
துணிகளின் அழுக்கை விரைவாக நீக்கும்
சிக்கனம் மிக்கது

தயாரிப்பாளர்:
சின்டெட கம்பனி பிரைவேட் லிமிடெட்
தொழில் நுட்ப ஒத்துழைப்பு
தெய்கோகு ககோ கம்பனி லிமிட்டெட்
ஒசாகா, யப்பான்
கிளை ஸ்தாபனம்
55, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

## சொக்கன் தரும்
## ஆபிரிக்க எழுத்தாளர்கள், கவிஞர்களின் நோக்கில்

# இதுதான் ஆபிரிக்கா

### நான் காணும் ஆபிரிக்கா

தொன்மைசேர் ஆபிரிக் காவெனும் பூதனே?
துயில்கொளும் நீசில கணங்களோய்ந் திடுவாய்
வன்மைசேர் உன்றனின் முறுவலில் மின்னலும்
மழையிடி முழக்கெனும் இரண்டையும் காண்கிறேன்
கண்மெல நீதிறந் திடுமொரு போதினிற்
கலக்கிடும் பெரும்புயற் காட்சிகண் டிடுவேன்
எண்ணிநான் வியந்திடும் உன்கவ டதனில்
இருதொடை களிற்பெரு மிதநடை காண்பேன்

— லாங்ஸ்டன் ஹியூஜெஸ்.

### என்னை 'நான்' ஆக இருக்க விட்டிடு

நான்நீ இல்லை ஆயினும் நீ ஒரு
வாய்ப்பை எனக்குத் தருகிருய் இல்லை
நான்நா ஞகவே இருந்திடு தற்கே

நான்நீ ஆனுல் நல்லதுதான் எனில்
நான்நீ ஆதல் நடவாக் காரியம்
எனவே நாஞய் இருக்க விட்டிடு

என்கரு மங்களில் தலையிடு கின்ருய்
என்கரு மங்கள் உன்னுடை யவையில்லை
நீயோ நான்என நினைத்திடு கின்ருய்
நீநல் நீதி கொஞ்சமும் அறியாய்
மடைமை காரண மாகநீ என்னை
உன்போல் நினைத்திட நிர்ப்பந் திக்கிருய்

கடவுள் படைத்தான் உன்னை அவனே
என்னையும் படைத்தான் அவன்பெய ராலே
என்னை நாஞக இருக்கவிட் டிடுவாய்

— ரேலன்ட் ரெம்பகல் டெம்ஸ்டர்.

### கோடியோவின் பிரிவுத்துயரம்

('போவெல்' ஆதியினத்தின் மரபுவழிப் பாடல்)

பெண்களாம் மூவர் ஆண்கள் மூவருமாக
நாங்கள்
எண்ணிடும் அறுவர் அங்கோ கோடியோ
என்றன் பேராம்
நண்ணியோர் வழியிற் சென்ரேம் என்மனை
யாட்டி அந்தோ!
கண்திரை மூடிச் சாவின் கரங்களை
அணைத்திட் டாளே

நான்மட்டும் மனையிழந்தேன் எனக்குத்தான்
பிரிவுத் துன்பம்
நான்மட்டும் எழிலின் மிக்கோன் என்னுடன்
வந்தா ருள்ளே
நான்மட்டும் சோகத் தோடே வீவணிலே
அவள்பேர் கூவி
நான்மட்டும் புலம்பு கின்றேன் நற்கோழிக்
குஞ்சைாய்ச் சென்ருன்
கோடியோ நானின்றுற்ற குலைவுறு துன்பம் போலே
நாடுமிவ் வுலகில் யாரும் நானிவரை அடைந்த தில்லை
தேடிவந் தென்பு தல்வி எங்கென்று தாய்கேட்
டிட்டால்
நீடிய துயயரோன் நானும் நிகழ்த்துவ
தவளுக் கென்னே?

### போர்க் கடவுள்

(யொருபா என்ற ஆதியினத்தவரிடையே வழங்கும் பாடல்)

கொல்வான் வலத்தில் இடப்பக்கம்
கொடுமை சேர அழித்நடுவான்
கொல்வான் இடப்புறம் வலப்பக்கம்
கொடுமை சேர அழித்திடுவான்
கொல்வான் சடுதியில் வீட்டினுள்ளே
கொல்லுவான் உடனே வயல்வெளியில்
கொல்வான் பிள்ளையை அதனுடைய
குவிகர இரும்பாம் கருவியினுல்

மரணச் சாந்தியிற் கொலைபுரிவான்
மறம்புரி களவுகொள் திருடனையும்
சரணமாம் அடிமையின் ஆண்டானைச்
சாவலை வீழ்த்தியே அடிமையினை
விரைவினில் ஒட்டியே இவ்விறைவன்
விழ்ந்திடச் சவப்பெட்டி தனைநனைப்பான்
இருமுனை ஊசியாய்க் குத்துமிவன்
எழுமற சோரி நீரினுற் கழுவிடுவான்

### மரணம்

(குபா ஆதியினத்தவரின் பாடல்)

கூர்முனை இல்லாத ஊசியும் இல்லை
கூரலகு பொருத்தாத கத்தியும் இல்லை
மரணம் பலவடிவங்களில் எம்மிடம் வருகிறது.
வெள்ளாடு மேய்ந்த நிலத்தின்மீது எங்கள்
கால்களால் நடப்போம்
அதேசமயம் எங்கள் கரங்களால் முகிலையும்
தொடுவோம்
எதிர்காலத்தில் ஒருநாள், நிலா மலரும் இரவில்
ஒருதோள் உயரத்தில், நான் தூக்கிச் செல்லப்படலாம்
மரணம் என்னும் ஊரினூடாக நான் சுமந்து
செல்லப்படலாம்
நான் இறந்தால், என்னைக்காட்டு மரங்களின் கீழே
புதைக்காதீர்கள்
அவற்றின் முட்களுக்கு நான் அஞ்சுகிறேன்
நான் இறந்தால் என்னைக் காட்டு மரங்களின்
அடியிலே புதைக்காதீர்கள்
மரங்களைத் தழுவிப் பெருகும் காட்டாற்று
வெள்ளத்திற்கு நான் அஞ்சுகிறேன்
நிழலடர்ந்த, மரங்கள் நிறைந்த
சந்தைப் பிரதேசத்திலே என்னைப் புதைத்து விடுங்கள்
அங்கு ஓசைஎழுப்பும் பேரிகைகளின் நாதத்தையும்
அதன் தாளகதிக்கேற்பக் கூத்தர்கள் ஆடும்
நடனத்தையும் நான் கேட்டுக்கொண்டிருக்க
விரும்புகிறேன்

### கிராமத்தின் குரல்கள்

(எதியோப்பியப் பழமொழி)

உறவினர் ஒருவர்க்கு ஒருவர் உதவுவார்களானுல்
உறக்கூடிய தீமை ஒன்றுமே இல்லை

(வளரும்)




# முதற் பரிசில் பெற்ற ஓவியம்

உலகெங்கும் அந்தக் கண் காட்சிபற்றி ஏற்கெனவே பிரமாதமாகப் பேசிக்கொள்ளப்பட்டது. மிகச் சிறிய பத்திரிகைகள் தொடக்கம் ஆகப் பெரிய பத்திரிகைகள்வரை அந்தக் கண்காட்சிபற்றித் தினமும் எழுதிக்கொண்டிருந்தன. உலகனைத்திலுமுள்ள சகல ஓவியர்களும் கண்காட்சியில் பங்கு பற்றியிருந்தனர் அது ஓர் ஓவியக் கண்காட்சி.

கண்காட்சி நடைபெறுவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்தே அதுபற்றிப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கி விட்டன உலகரீதியிலான இக் கண்காட்சி இன்ன இடத்தில் நடக்கும், இன்னின்ன புகழ்பெற்ற ஓவியர்கள் கலந்துகொள்கிருர்கள் என்பனபற்றியும், காட்சிக்குத் தம் சித்திரங்களை அனுப்பி வைக்கும் ஓவியர்களின் உஷாரி பற்றியும் பிரபல பத்திரிகைகள் ஹேஷ்யங்களும், விமர்சனங்களும் செய்துகொண்டிருந்தன. ஓவியம் பாதியில் முடிந்துகொண்டிருக்கும்வேளை, அந்த ஓவியனுக்குச் சளிச் சுரம் வந்துவிட்டால் அது பெரிய செய்தியாகப் பத்திரிகையில் இடம் பெற்றது. ஓர் ஓவியன் சற்று அதிகமாகத் தூக்கம் விழித்துவிட்டால், அது செய்தி! ஒவ்வொரு ஓவியனதும் நிற விருப்பங்கள், அவனது ஓவியம்பற்றிய கருத்துக்கள், ஒவ்வொரு ஓவியனும் 'பிரஷ்' பிடிக்கும் கோணங்கள், ஓவியத்தில் பல லட்சம் ரூபாய் பரிசில் பெறும் ஓவியன் யார் என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருந்தன. கண்காட்சி, போட்டி அடிப்படையில் அமைந்திருந்தது.

+

ஒரு நத்தார் தினத்தில் உலகத்தின் கேந்திர பூமியில் கண்காட்சி ஆரம்பமாயிற்று. நாலா தேசத்திலிருந்தும் கோடீஸ்வரர்களிலிருந்து சாதாரணமானவர்கள்வரை பலதரப்பட்டவர்கள் காட்சியைப் பார்ப்பதற்கு வந்திருந்தனர்.

காட்சிச் சாலை ஒரு சித்திரக் கோவிலாகக் காட்சி தந்தது. உள்ளே பல்லாயிரக்கணக்கான ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எல்லா ஓவியங்களுமே பிரமாதம் எனும் படியாயிருந்தன. பொறுக்கியெடுக்கப்பட்ட சித்திரங்கள்!

எல்லாச் சித்திரங்களுமே பிரமாதமாயிருந்தபோதிலும் ஒன்றன் முன்னுல்மட்டும் அத்தனை கூட்டமும் நிலையாய் நின்றது. பார்த்தவர்கள் 'வாயைப் பிளந்தபடி' அப்படியப்படியே நின்றுவிட்டார்கள். 'ஆஹா ஆஹா' என்று ஓலமிட்டார்கள். 'இதுதான் ஓவியம்; இதை வரைந்தவனே ஓவியன்' என்று கூத்தாடினுர்கள். புகழுதற்கு வார்த்தையின்றி வாயடைத்துப்போய் நின்ருர்கள்.

### ✯ ஒரு கதை ✯

போட்டி நடுவர்களும் அந்த ஓவியத்துக்கே முதற் பரிசில் என அறிவித்திருந்தனர். அந்த ஓவியத்திற்கே முதற் பரிசில் கிடைக்குமென ஜோஸ்யம் சொல்லியிருந்த பத்திரிகைகள் தம் திறனைப் புளுகித் தம்பட்டம் அடித்தன.

படம் தத்ரூபமாய் இருந்தது உண்மையே. இயேசுக் கிறிஸ்துவை உயிருடன் பிடித்துச் சிலுவையில் அறைந்த காட்சி அது! முள் முடி சூட்டிய தலையிலிருந்து முகம் வழியே குருதி வழிந்துகொண்டிந்தபோதும், முகத்தில் ஜ்வலித்த ஜீவகளை, தம் முன்னுல் நிற்கும் மக்களையே பார்த்து இரக்கப்படுவதுபோன்று முகத்திலே பாவம்-ஒன்றன்

### ● சசிபாரதி

மீதொன்ருக இரு பாதங்களையும் சேர்த்தும் கரங்களிரண்டையும் இருபக்கமாக நீட்டியும் சிலுவையில் அறைந்து தொங்கவிட்டிருப்பதாக அந்த ஓவியம் அமைந்திருந்ததானது நிஜமாகவே அப்பொழுதுதான் கிறிஸ்து அங்கு சிலுவையில் அறையப்பட்டது போன்றிருந்தது!

அவர்கள் ''ஆஹா ஆஹா'' என்று ஓலமிட்டார்கள். ''இது தான் ஓவியம்; இதனை வரைந்தவனே ஓவியன்'' என்று கூத்தாடினுர்கள். புகழுதற்கு வார்த்தையின்றி வாயடைத்துப்போய் நின்ருர்கள்.

முள்முடி சூட்டிய தலையிலிருந்து முகம்வழியே குருதி வழிந்துகொண்டிருந்தபோதும் முகத்தில் ஜ்வலித்த ஜீவகளை தம் முன்னுல் நிற்கும் மக்களைப் பார்த்து இரக்கப்படுவது போன்று முகத்திலே பாவம்... அப்பொழுதுதான் கிறிஸ்து அங்கு சிலுவையில் அறையப்பட்டது போன்றிருந்தது.

அவர்கள் 'ஆஹா ஆஹா' என்று ஓலமிட்டார்கள்... புகழுதற்கு வார்த்தையின்றி வாயடைத்துப்போய் நின்ருர்கள்.

அனைவருக்கும் அன்புகலந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: ''வைரம்''

நம்பிக்கை! நிதானவிலை!!
பல வருட காலமாக எமது ஸ்தாபனத்துக்கு ஆதரவு தந்த அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்கள்
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
கவுரி போறேஜ் ஸ்ரோர்ஸ்
இல: 5, மொடல் மார்க்கட், யாழ்ப்பாணம்.

# பரதகலை

நாட்டியக் கலாசிகாமணி சபாஷிணி
பத்மநாதன் பி. ஏ.

பரத கலையானது ஓர் பார் புகழும் சிறந்த நுண்கலை ஆகும். பாரதநாட்டில் மட்டுமன்றி, அது உலகெங்கும் பிரபல்யம் அடைந்துள்ள ஒரு தெய்வீகக்கலையாகும். பரத சாஸ்திரம் இந்தியா முழுவதிலுமுள்ள நாட்டியக்கலைகளுக்கு கருவூலமாகத் திகழ்கிறது. இது பரதமுனிவரால் எழுதப்பட்டது. பரதருடைய நாட்டிய சாஸ்திரமானது, கிறிஸ்துவுக்குமுன் (கி.மு.) இரண்டாம் நூற்றுண்டிற்கும் (கி. பி.) இரண்டாம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்டகாலத்தில் இன்று நாம் காணப்படும் உருவைப் பெற்று இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மிகுந்த பழைமை வாய்ந்ததாக இந்நூல் காணப்பட்ட போதிலும் கூட, இது பிற்காலங்களில் வந்த சகல நாட்டிய நூல்களுக்கு முன்னேடியாகவும். வழிகாட்டியாகவும் கருவூலமாகவும் திகழ்கிறது நாட்டியத்திற்குத் தேவையான சகல அம்சங்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

நாட்டிய உற்பத்தி பாவங்கள், அபிநயங்கள், உணர்ச்சி வெளிப்பாட்டு முறைகள் உட்பட மேடையில் பக்கவாத்தியக்காரர்கள் இருக்கவேண்டிய இடம் ஈருக இது செவ்வனே விபரிக்கின்றது. பரதருக்குப் பின்நாட்டியக்கலைக்கு பலவேறு நூல்ஆசிரியர்கள் சிறந்த



கி. பி. பதினொராம் நூற்றுண்டில் காஷ்மீரில் சிறந்த அமைப்பினை சிவபிரானின் சைவாச்சாரியார் ஆக திகழ்ந்த பிராட்டியாராகிய பார்வதி ... 'லாஸ்யம்' என்னும் நடன

## நடனத்துறையில் உன்னத நிலை பெறுவதற்கு அதன் தெய்வீகத்தை உணர்ந்து ஆட வேண்டும்!

தொண்டினை இக்கலைக்குஅளித்துள்ளனர். தென்இந்திய அரசர்கள் மட்டுமன்றி வடஇந்திய அரசர்கள்கூட இந்திய நாட்டிய கலைவளர்ச்சிக்கு சிறந்த தொண்டாற்றியுள்ளனர். காஷ்மீரத்தை ஆண்ட மாதுருகுப்தா என்பவர் ஒரு நாட்டிய சாஸ்திர நூலை எழுதினர். பிற்காலப்பகுதியில் 'வார்க்கம்' என்ற உரை நூல் இதற்கு எழுதப்பட்டது. இதைவிட காஷ்மீரத்தை சேர்ந்த உத்படர், லொல்லடர், சங்குகர் ஆகியோர் பரதநாட்டிய சாஸ்திரத்திற்கு உரை எழுதியுள்ளனர். அபினகுப்தர் உரை எழுதியுள்ளார் என்பதற்கான சான்றுகள் அண்மைக்காலத்தில் இந்தியாவில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் சாட்சி கூறுகின்றன.

### அன்னை பார்வதியின் அரிய பரிசு

பரதமுனி இக்கலையினை சிவபிரானின் கணங்களில்மேலான நந்திகேஸ்வரர் மூலமாகவும் பார்வதி அம்மையார் மூலமாகவும் கற்றுக் கொண்டார். தாண்டவ நடனத்தை பரதமுனி நந்திகேஸ்வரர் மூலமாக அம்மையார் மூலம் கற்றுக் கொண்டார். இதிலிருந்து ''லாஸ்யம்'' கோமளமான பெண்களுக்கே ஏற்றதென்றும் கடினமான தாண்டவமென்னும் நடனக்கூறு ஆண்களுக்கு ஏற்றதென்றும் கருதப்படுகிறது. ''தாண்டவம்'' என்னும் சொல் சில இடங்களில் ஒரு வகைத்தட்டின் பெயராகவும் கருதப்பட்டுள்ளதாக அறிய வருகிறேம். ஆயினும் பரத நாட்டிய சாஸ்திரத்தில் நான்காம் அத்தியாயத்தில் இடம் பெறும் சொல்லாகிய ''தாண்டவம்'' இறைவனல் அந்திப்பொழுதில் ஆடப்படும் ஒரு நாட்டியமாகும்.

கடுமையான இந்நாட்டிய அமைப்பு துரித கால் வீச்சுக்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது இதனாலேயே இது ஆடவருக்கேற்றதாக கருதப்படுகிறது. அன்னை பார்வதியால் பரதகலைக்கு உவந்தளித்த செல்வம் ''லாஸ்யம்'' ஆகும். ''லஸ்'' என்னும் சொல் அழகாக அசைவது என்று பொருள்படும். பாவம் என்னும் கலை அம்சம் இங்கு சிறப்பிடம் பெறுகிறது. இதனால் இது நிருத்தியத்தை தழுவியதாகும். ''தாண்டவம்'' என்னும் நடனக்கூறு ஆடவருக்கே உரித்தானதென்று கொள்ளப்பட்டபோதிலும் கூட இது இந்திய மாநில நடனங்கள் போல் மங்கையர்க்கும்ஏற்றது என்பதற்கு சில எடுகோள்கள் உள்ளன தஞ்சையில் காணப்படும் நடனச் சிற்பங்கள் ஆண் சிற்பங்களாககாணப்படுகின்றன அதேசமயம் சிதம்பரத்தில் காணப்படும் சிற்பங்கள் பெண் சிற்பங்களாக காணப்படுகின்றன. ''தாண்டவம்'' பாகம் பாகமாக பிரித்தாடமுடியாது. இது தாண்டவத்திற்கு ஏற்ற பாட்டுடன் லயசுத்தத்துடனும் தாளத்திற்கு அமையவும் ஆடப்படும் நடனமாகும். இதனால் இது நிருத்தத்தைச் சார்ந்ததாகும். நிருத்தத்தை சாதாரணமாக இவ்வாறுவிளக்கலாம்-நிருத்தமானதுபொருள் ஒன்றினையும் விளக்காமல் பல்வேறு நிலைகளுக்கு உயிர்ப்பூட்டும் சிற்பநிலைகளே நிருத்தமாகும்.

### நாட்டியக்கலையின் 3 பிரிவுகள்

நாட்டியக்கலையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(15ம்பக்கம் பார்க்க)

நத்தார் தின வாழ்த்துக்கள்!

மக்கள்வளம் பெருக்கும்
திட்டங்களால்
புகழ் பெற்ற

தமிழர் நிதியம்
நிதிநிறுவனம்

நத்தார்
புதுவருடம்
தைப்பொங்கல்

1984

விழாக்கால சலுகையாக
உங்கள்
நிரந்தர வைப்புகட்கு
இலங்கையிலேயே தனித்துவமான
36 % அதித
வட்டியை
மாதாந்தமும்
20-12-83 - 20-1-84
முதல் வரை
முதலிடுவோருக்கு
வழங்கவுள்ளார்கள்

தமிழர் நிதியம்
THAMIL FUNDS AND FINANCE LIMITED

140, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.
(மனேகரா சினிமா
அண்மையில்)
தொலைபேசி: 22437

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ்—புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

1983ம் வருட இருப்பெடுத்தலை முன்னிட்டு


மலிவு விற்பனை-
மலிவு விற்பனை

சகல மின்சார உபகரணங்களும்
விலை ரூபா 5-00 முதல் 8268-00 வரை

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

# கர்த்தரின் கருணை



சு. முருகானந்தன்

பாடசாலையிலிருந்து திரும்பியபோது இருந்த குதூகலம் இப்போது கிறிஸ்ரியிடம் இல்லை என்பதை அஞ்சலினின் தாயுள்ளத்தால் கண்டு கொள்ள முடியாதா என்ன? பத்தே வயதானாலும் படு சுட்டியான கிறிஸ்ரி, வரப்போகும் நத்தார் புதுவருட பண்டிகைகளை வெகு ஆவலும் மகிழ்ச்சியுமாக எதிர்பார்த்திருக்கிறான் என்பதைத் தினம் தினம் அவன் சொல்கின்ற கதைகளிலிருந்தும், கேட்டுத் துளைக்கின்ற கேள்விகளிலிருந்தும் அன்ரனியும் உணர்ந்திருந்தான்.

ஒரே குழந்தை, அதுவும் செல்லக் குழந்தை.

அதன்குதூகலத்தை அன்ரனியும், அஞ்சலினும் வெகுவாக ரசித்தாலும் கூட, அவனது எதிர்பார்ப்புகளை எல்லாம் எப்படி நிறைவேற்றப் போகிறோமோ என்று தவியாய்த் தவித்தனர் அவர்கள். பாவம், வீட்டுக்கஷ்டங்களைப் புரிந்துகொள்கிற வயதா கிறிஸ்ரிக்கு? அதிலும் வசதியாக வாழ்ந்துவிட்டு, முன்னைய கிறிஸ்மஸ் பண்டிகைகளையெல்லாம் சிறப்பாகக் கொண்டாடிவிட்டு, இம்முறை மட்டும் எதுவித விசேஷமும் இல்லாவிட்டால் சின்னஞ் சிறு உள்ளம் எவ்வளவு ஏமாற்றமடைந்து போகும்!

எப்படியும் நத்தார் பண்டிகையை ஓரளவுக்காவது சிறப்பாகக் கொண்டாடலாம் என்றால் இன்றுவரை எங்குமே கடன் பெறமுடியவில்லை என்று தவித்தான் அன்ரனி. வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக வேலையிழந்து, பலவித சிரமங்களுக்கிடையிலும், இன்றுவரை சமாளித்தாகிவிட்டது. நாளைய பொழுது வயிற்றுப் பாட்டுக்கே பிரச்சினை: இந்த லட்சணத்தில் கிறிஸ்மஸ் பெருநாளுக்கு இன்னமும் நான்கு நாட்கள் தான் இருக்கின்றன. அவனுக்கோ மனைவிக்கோ இன்றைய நிலையில் கொண்டாட்டம் அப்படி ஒன்றும் அவசியமில்லைத்தான். ஆனால் கிறிஸ்ரியின் பிஞ்சு மனத்தில் எத்தனை எத்தனை ஆசைகள் தேங்கிக் கிடக்கும் என்பதை இருவரும் உணர்ந்தனர். அவர்களும் ஒரு காலத்தில் சிறுவர்களாக இருந்தவர்கள் தானே?

சின்னப் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டங்களை விட வேறு நினைப்புக்கள் வர நியாயமில்லைத் தானே. குழந்தைகள் உலகமே பிரத்தியேகமானது. காலையில் குளித்துப் புத்தாடை அணிந்து, தேவாலயம் சென்று, வீட்டிலும் அலங்காரங்கள் செய்து, வகைவகையான தின்பண்டங்களைச் சுவைத்து, சமவயதுப் பிள்ளைகளுடன் கூடிக் குலாவி, அந்த நாளையே இனிமையாக்கி விடுவார்களே! அதிலும் படு சுட்டியான கிறிஸ்ரி இம்முறை ரொம்ப அதிகமாகவே கற்பனை பண்ணியிருக்கிறான்! காலையில் தேவாலயத்தால் திரும்பியவுடன் எவ்வளவு உற்சாகத்துடன் கதைகள் கூறினான்? பின்னர் பாடசாலைக்கு விசேஷ வகுப்பிற்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது அவனிடமிருந்த உற்சாகம் இரட்டிப்பாக இருந்தது.

''மம்மி... பீரீஸ் வீட்டில பெரிய கிறிஸ்மஸ்ட்றீ செய்யுறாங்களாம். அன்ரன் வீட்டில கிறிஸ்மஸ் தாத்தா பொம்மை செய்யுறாங்க.. புளோறா வீட்டில கலர் பல்ப்ஸால அலங்கரிக்கிறாங்க... ஜோன் வீட்டில விதம் விதமான காட்ஸ் எல்லாம் வாங்கி தாக்கிறாங்க... நம்ம வீட்டில இன்னுமேன் மம்மி ஒரு ஆயத்தத்தையும் காணோம்?... டடியிடம் சொல்லி கலர் பல்ப்ஸ் எல்லாம் வாங்கச் சொல்லு மம்மி...''இதைச் சொல்லும்போது கிறிஸ்ரியின் குரலில் ஏறி இறங்கிய பாவங்களிலிருந்தும், முகத்தின் சிரிப்பிலிருந்தும் அவனது ஆர்வத்தைக் கண்டு கொண்ட அஞ்சலின், இயலாமையிலும் தவிப்பிலும் நெடுமூச் செறிந்தாள் கிறிஸ்ரியின் மனதின் அலைகளுக்கேற்ப, அவனது செய்கையெல்லாம் கலகலத்துக் கொண்டிருந்தது

கிறிஸ்மஸ் வாரத்தின் குதூகலம் இப்பொழுதே அவனைப் பற்றியிருந்ததை அவதானித்த அன்ரனி எப்படியாவது எங்கேயாவது கடன் பெற்றாவது, குழந்தையின் சில ஆசைகளையேனும் நிறைவேற்ற வேண்டுமென்று முடிவு செய்தான்

அன்ரனி சேட்டை எடுத்து மாட்டிக்கொண்டு நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று கடன்கேட்டான், ஏற்கெனவே கடன் கொடுத்துள்ள அவனது நண்பர்கள், மேலும் கடன் கொடுக்க விரும்பாததால், பண்டிகைச் செலவைச் சாக்குக் காட்டிக் கையை விரித்தனர். எங்குமே கடன் கிடைக்காததால் மனம் சலிப்புற்று வீடு திரும்பிய அன்ரனியின் முக வாட்டத்திலிருந்தே மனைவி, கடன் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

கடைசிநேரத்தில் கிறிஸ்ரிக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடாது என அவள் எண்ணியதால் இப்பொழுதே மகனிடம் சாடையாக நிலைமையைச் சொல்லுதல் நல்லது என முடிவு செய்தாள்.

''கிறிஸ்ரி... டடிக்கு உடம்பு சுகமில்லை... ஆனபடியால இந்தமுறை கிறிஸ்மஸ் கொண்டாட்டம் சிறிய அளவில் தான் ...கலர் பல்ப்ஸ், காட்ஸ் ட்றீ எல்லாம் அடுத்த வருட கிறிஸ்மஸ்க்குச் செய்வோம்...'' என்று இங்கிதமாகத் தான் சொன்னாள். ஆனால் முழுமதியாயிருந்த கிறிஸ்ரியின் மலர் முகம் கணப் பொழுதில் கூம்பிப் போய்விட்டது. மிகுந்த ஏமாற்றத்துடன் படுத்துக் கொண்டு விசும்ப ஆரம்பித்தவனை அருகில் சென்று ஆதரவாகத் தடவி, சமாதானம் செய்ய முயன்ற அஞ்சலினுக்குத் தோல்வி தான் கிடைத்தது.

பிடிவாதமாக இரவு சாப்பிடாமலே படுத்துவிட்ட கிறிஸ்ரி, மறுநாள் காலையிலும் உற்சாகமின்றியே இருந்தான். தாயுடன் தேவாலயத்திற்குச் சென்றபோது மனம் பூரிக்கவில்லை

அஞ்சலின் மகனுக்காக மாதாவை வேண்டினாள்; கருணையின் வடிவான புத்திரனை புவிக்களித்த புண்ணியவதியே! உன் கருணைக் கடலில் ஒரு துளியேனும் என்னிடம்சிந்து. குழந்தையின் குதூகலம் மறுபடியும் ஏற்படவேண்டும்; அவன் மறுபடி கலகலப்பாக வேண்டும்; நீ தான் வழிசெய்யவேண்டும் தாயே...'' மனமுருக வேண்டிய அஞ்சலின் விழிக்கடையில் நீர் துளிர்ந்தது.

தேவாலயத்தால் திரும்பியபோதும் கிறிஸ்ரி 'உம்'என்றே இருந்தான். அஞ்சலின் உற்சாகமூட்டக் கூடிய பல கதைகளைச் சொல்லியும் கூட அவன் சிரிக்கவில்லை

வீட்டுக்கு வந்தபின்னரும் அஞ்சலின் எண்ணம் அதே திசையிலேயே இருந்தது. மகனை எப்படிச் சமாதானமடையச் செய்யலாம்? மூளையைக் குடைந்தாள்; முயற்சிகளும் மேற் கொண்டாள். பலன் என்னவோ பூஜ்ஜியம் தான்.

ஆழ்ந்த யோசனையில் அவள் இருந்தபோது வாசலில் தபால்காரனின் மணி அடித்தது. வழக்கம் போல் கிறிஸ்ரி கடி

(14ம் பக்கம் பார்க்க)

## அவனும் ஓர் அகதி

மழை பொழியும் மாதம்
மண்டு மிருள் மேகம்
வளைய வரும் வானில்
வாடை யர சாட்சி
இளைய நறும் பூவும்
இதழ் நடுக்கம் கொள்ளும்
உழையும் மனத்தோடு
ஊர் உறங்கும் காலம்!


வானம் எனும் வீடும்
வளர் கடுங் குளிரால்
தான டங்கிப் போகும்
தார கையாம் பெண்கள்
கானக் கரு மேக
கம்ப ளிக்குள் புகுவார்
தேனி லவும் வேறு
தேச மது போகும்.

கால மிதை நன்கு
கடவு ளவன் அறிந்தும்
ஞால மதில் கொண்ட
நல்ல பேரன் பாலே
பால னவன் தன்னை
பாரில் வரச் செய்தான்
நாலு திசை தூங்கும்
நள்ளி ரவுப் போதில்!

பெத்த லேகம் என்னும்
பேர் சொல்லும் ஊரில்
சத்திரத்தில் தானும்
தங்க இட மின்றி
கர்த்த னவன் பிறந்தான்
கைய ளவு குடிலில்
நத்தி யொரு மனிதன்
நாட வில்லை அங்கே.

தவழு னிவன் சூசை
தாய் மரியா ளோடு
அவன ருகில் மந்தை
ஆடு மாடொ துங்கி
தவன முடன் நோக்கும்
தாயா தி போல
அவனியதன் மீட்பன்
அகதி யைப் போ லானான்.

- வாகரைவாணன்





## ஏழ்மையை உணர்த்தப் பிறந்தார்

அந்த ஊர் அன்றிரவு
அமர்க்களமே பட்டதுமே
அமைதிகிளித் தேவானில்
கீதங்கள் ஒலித்ததுமே
அந்தவான் வெளியினிலே
வால்வெள்ளி ஒளிர்ந்ததுமே
அங்கலாய்த்தார் மக்கள்
ஆங்கொன்று மறியராய்
அப்போது—

மாசறுக்க மண்மீது
மகவாக வந்த யேசு
மார்கழியாம் ஐயைந்தில்
பெத்திலேகேம் தொழுவத்தில்
மக்களுள்ளே மக்களாக
மக்களிலும் தாழ்ந்தவனாய்
மரிசூசை மகனாக
அவதரித்தார் (மக்களுக்கு)
மாதிரியாய்

மாளிகையை வேண்டவில்லை
மன்னர் வழி தேடவில்லை
மணித்தொட்டில் பஞ்சணையும்
தாலாட்டும் கேட்கவில்லை
மாடுறையும் தொட்டிலதும்
மகிமை இலாச்சிற்றூரும்
மன்னவனும் யேசு இறை
தெரிந்து கொண்டார்
பிறப்பதற்கு

இவையெல்லாம் ஏன்
எதுக்கோ
இதில் என்ன போதனையோ
இருளான குளிர்காலம்
தெரிந்ததுதான் எதற்காயோ
இன்று நின்று நிலைப்ப
தெல்லாம்
ஏழ்மையதும் தரித்திரமும்
இதையுலகிற் குணர்த்திடவே
இயேசுபிரான் அவதரித்தார்.

- கி. றே. சலேஷியஸ்

எமது சிறுகதை

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

தனவரவும் தருமசிந்தையும் மேலோங்கும். நஷ்டத்திற்கும் இடமுண்டு. முதலீடுகளை தவிர்த்துக் கொள்ளவும் விஷப் பரீட்சை மூலம் விபரீதங்கள் விளையும். விஷமிகள் விழித்திருப்பார்கள் களஸ்திரவிடயங்களும் அவ்வழிச் சிறப்புமுண்டு. புதிய சந்திப்புக்கள் பிரச்னைகளை உண்டாக்கலாம். எவ்விடயத்திலும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடக்கவும்.

## ரிஷபம்

பெரியோர் புகழ்ச்சியும் புதுப் பிரயாணங்களும் பூமி பொருள் லாபங்களும் உருவாகும். தடைகள்பல உருவாகலாம். பெயரைக் கெடுப்பதற்கும் பெருமைப்பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்டநாள் தொடர்பில் மாற்றம் ஏற்படும். அது மனதில் இதமாக இருக்கும் எதிலும் அமைதிவேண்டும்.

## மிதுனம்

தனவரவு உங்களை மகிழ்விக்கும். தொழில்துறையில் முன்னேற்றமும்உயர்ச்சியான மாற்றங்களும் மேலோங்கிநிற்கும். பெரியோரும்அயலோரும் அன்புகாட்டுவர். சில விடயங்களுக்கு தடைவிதிக்க தரகர்கள் எத்தனிப்பர். விழிப்புடன் இருக்கவும்.

## கடகம்

துன்பத்தின் சாயல்மனதில் புகைமூட்டத்தையும் பகைமூட்டத்தையும் உண்டு பண்ணும் திடீரெனவரும் வருவாயால் கடன் தொல்லைகள் தீரும். அன்புக்கரங்கள் அணைக்கும் நல்ல விடயங்களுக்கு வழிகோலப்படும். பிதாவழி சுகம் கிடைக்கும்.

## சிம்மம்

சிறுவிபத்து. சீறிவரும் ஆத்திரம் சிந்தனையை குழப்பும். நிதானத்துடன் செயல்படவும். உடல் நலன்பாதிக்கப்படலாம் பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். அதிஷ்ட தேவதையின்பார்வை உங்களுக்கும் கிடைக்கலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையலாம்.

## கன்னி

கன்னல் மொழிமூலம் காரியங்களைச்சாதிப்பீர். கவர்ச்சியான உடைஅணிவதற்கு விரும்புவீர். இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தை தடுக்கும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிப்பீர். குறுக்குவழித் தலையீடு சட்டத்தில் மாட்டிவைக்கும். கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

## துலாம்

சீறி வரும் கோபம் பெரிய மோதல்களை உருவாக்கும். பொறுமை வேண்டும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கைத்தொழில் புரிவோருக்கு நல்ல வருவாய் உண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. தீய சக்திகள் பல வழிகளிலும் உங்களை வீழ்த்தப் பார்க்கும். விழிப்புடன் செயற்படவும்.

## விருச்சிகம்

தாய் வழிப் பெருமையும் அவ் வழி இலாபமும் ஏற்படும். உயர் கல்விகளும் இடம் பெறும். சிந்தையில் தடுமாற்றம் ஏற்படலாம். சுகாதாரம் வேண்டும். நீண்ட நாள் பிணி நீங்க இடமுண்டு. அவசரப் போக்கையும்' ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

## தனுசு

எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன் வருவார்கள். வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத் தரலாம். படித்தவர்களால் பயன் கிட்டும். சகோதரங்களால் தொல்லை அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று. பேச்சாளர்களும் வீரம் காட்டுவர். புகழும் ஈட்டுவர்.

## மகரம்

பகை மூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும். மிகையான போக்குகசப்பாக இருக்கும். குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். புதிய பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. பந்த பாசம் உங்களை பரவசப்படுத்தும். இளையோர் கசப்பர்.

## கும்பம்

கண் வலை வீசி காதல் கணை தொடுப்பீர். குடும்பத்தில் சிறு பூசலின் பின் குதூகலம் நிலைக்கும். ஆயுத பீடையும்,எதிரிகள் சச்சரவும், பிரிவும் உங்களை நிலை தடுமாற வைக்கும். தாய் வழியால் புத்திரருக்கு இலாபம் கிட்டும். அவ் வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு

## மீனம்

எண்ணிய காரியத்தில் தடை ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பும் உண்டு' குடும்பப் பிணைப்புகள் இறுகும். காதலர்களுக்குக் கரும்பாக இருக்கும் சிறிய விபத்துக்களும் இடம் பெறலாம். வஞ்சகர் வலை விரிப்பர். பிள்ளைகளால் உதவியுமாகும். புகழ்ச்சியும் மகிழ்ச்சியைத் தேடித் தரும்.

**திருமதி.க.வேலுப்பிள்ளை**

# 'வாழ்வா? அணுகுண்டால் அழிவா?'

'வாழ்வா? அணுகுண்டால் அழிவா?' என்ற நூலை சட்டத்தரணி சி. பொன்னையா எழுதி வெளியிட்டுள்ளார். 20 பக்கங்களில்வெளிவந்துள்ள இந்த நூலுக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைஅணிந்துரை வழங்கியுள்ளார்.

அணுகுண்டுப் பீதியில் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இத்தகையதொரு நூலைத் தமிழில் வெளியிட்டுள்ள சட்டத்தரணி பொன்னையாவின் பணி பாராட்டத் தக்கது. அணுகுண்டு உற்பத்திக்கு எதிராக உலகின் பல பகுதிகளிலும் இன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருவதைக் காண்கிறோம்.

எத்தனையோ அப்பாவிஉயிர்கள் அணுகுண்டுக்குப் பலியாகியுள்ளன. அணுசக்திகளின் தீய தோற்ற ஏவுகணை அடக்கம் செய்வதெப்படி என்று, சிந்திக்கவும் வைக்கின்றது இந் நூல். அணுகுண்டு யுத்தத்தை முறியடிப்பது மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளதென்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஜீறிச் தொழில் நுட்பக் கல்லூரியில் அணுகுண்டைக் கண்டுபிடித்த ஐன்ஸ்ரீன் பேராசிரியராய் இருந்தபோது ஜெர்மன் அரசால் விஞ்ஞானவிருது வழங்க அங்கு அவர் அழைக்கப்படுகின்றார். அங்கு போகவிழையும் ஐன்ஸ்ரீனுடன் செல்ல மனைவி மிலேவா மறுக்கின்றாள். இச்சந்தர்ப்பத்தில் ஐன்ஸ்ரீனுக்கும் மனைவி மிலேவாவிற்குமிடையே இடம் பெறும் உரையாடலை இந் நூலில், நூலாசிரியர் வெகு சிறப்பாகச் சித்திரித்துள்ளார்.

'பிறஷ்யா போவோம்வா! என்று ஐன்ஸ்ரீன் மனைவி மிலேவாவை அழைக்கும் போது அவள் 'பெருந்துன்பம் அடைந்தோம் பிருக்கில்; மலை போல் விளங்கும் விஞ்ஞான மேதையாகிய உங்களை ஜெர்மனியர் மதித்திலர்; யூதரென்றே அந்நியம் செய்தனர்; அதர்மம் பிடித்தவர்கள்; இனவெறியர், தாமுயர்ந்தோர் என்று எண்ணும் அகந்தையர்; அவர்கள் சார்பிலர்; தம் தாய் நாட்டில் அயலவரை உபசரிக்காத பண்பில்லாதவர்; விவேகம் கொண்ட யூதரைத் துன்புறுத்துகின்றனர்; அடக்கமில்லாத இந்த ஜெர்மனியர் மண்ணில் நான் மீண்டும் மிதியேன். என்று கூறும் வரிகள் மிலேவாவின் சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்காத தன்மையையும், ஜெர்மனியர்கள் யூதர்களுக்கு செய்த கொடுமைகளையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

விஞ்ஞான சபையில் ஐன்ஸ்ரீன் பேரை என்ற அத்தியாயத்தில் அணுகுண்டை மனித வாழ்விற்குப் பயன்படுத்தும் படியும், அதனை மனிதகுலத்தை கொன்றொழிக்கப் பயன்படுத்த வேண்டாமென்றும் ஐன்ஸ்ரீன் கேட்டுள்ளார்.

## புதிய புத்தகம்

புதுடில்லி பிரார்த்தனைக் கூட மைதானத்தில் மகாத்மாகாந்தி அணுகுண்டினால் இடம் பெற்ற தீமை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

''ஜப்பானில் அணுகுண்டு வெடித்தது! உயிர்க் கொலை ஒரு லட்சம்! அளப்பரிய பொருட் சேதம், பல்லாயிரம் குடும்பங்கள் பூண்டோடு அழிந்து மாய்ந்தன. அடுத்த அணுகுண்டு எங்கே வெடிக்குமோ?


உலகம் முழுவதும் தான் அழிந்து ஒழியுமா! என்று ஏங்கிக் கொண்டே நாமின்று வாழ்கின்றோம்! அகிம்சை ஒன்றே உலகம் தழைக்க வைக்கும்.அகிம்சையே பிரச்னை தீர்க்கும் மருந்து! அகிம்சையே பற்றுவோம்! அகிம்சை வாழ்க!

நசல் பிரபுவின் தலைமையில் அணுகுண்டு ஒழிப்பு இயக்கம் என்ற அத்தியாயத்தில் அணுகுண்டை ஒழிப்போம்! அணுகுண்டு உலகத்தையும் உயிர்களையும் விழுங்கி விடும்! எம்மையெல்லாம் எரித்துச் சுருக்கி விடும்! எங்கள் நாடுகளின் எதிர்ப்பு இயக்கம் இன்றே தொடங்குவோம்! இன்றே நாமழிவோம்! இது திண்ணம்! என்று மக்கள் உறுதியெடுப்பதிலிருந்து அணுகுண்டினால் விளையும் தீமைகளை மக்கள் உணர்ந்து விட்


(14ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள் ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!



★ LONG LIFE
★ BEAUTIFUL DESIGNS
★ VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS




டில்கா பேணிச்சர் பலஸ்

DILKA FURNITURE PALACE 234-236 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். போன்: 24186

விலை: ரூபா 185/- முதல் ரூபா 7625/- வரை

# கிடுகு வேலி

## செங்கை ஆழியான்

மத்தியானம் சாப்பிடும் போது அம்மா சொன்னுள்: ''உவன் சீராளன் தன்ர எண்ணப்படி கலியாணம் கட்டி விட்டான். எங்களை நம்ப வைத்து ஏமாத்திவிட்டான். அதுவும் நல்லதுக்குத் தான். நாங்க இவ்வளவு சீதனம் கொடுத்துப் போயும் போயும் சங்கக்கடையில் வேலை செய்கிறவரையேஎடுக்க வேணும்?''

சண்முகம் எதுவும் பேசாமல் மௌனமாகச் சாப்பிட்டு விட்டு எழுந்தான். அவனுக்கு இங்குள்ள நிலைமைகள் எரிச்சலையும் கவலையையும் தந்தன. இரண்டு குமர்களைக் கரைசேர்ப்பதற்காக அவன் அனுப்பிய பணத்தில் ஒரு குமரைக் கூடக் கரைசேர்க்க முடியாது போலப்பட்டது. தனக்கெனக் கொண்டு வந்தவற்றையும் பொருட்களையும் விற்றுவிட வேண்டியது தானே? இவர்கள் எவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து விட்டார்கள்? சிக்கனமாக இருக்கவேண்டிய நிலையில் கைநிறையச் செலவழித்து விட்டு அவனை எதிர்பார்த்திருக்கிறுர்களே?

அவன் ஹோலில் இருக்கும் போது செல்வம் வந்தாள். அவன் முன் இருந்தாள்.

''அண்ணி ஏதாவது சொன்னுவா, அண்ணை? நீங்கள் சந்தோஷமாகவில்லை. முகம் வாடிக் காய்ஞ்சுபோய் இருக்கிறியள்?''

அவன் தங்கையை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் துயருடன் சிரித்தான்.

''ரமணன் உங்களுடன் சேர்ந்தாளு, அண்ணை?...''

அவன் இதயத்தில் ஒரு மூலையில் யாரோ கசக்கியது போலத் துடிப்பு.

அவனுல் எதுவும் பேச முடியவில்லை.

''அண்ணை...''

''இங்கு இவ்வளவு நடந்தும் எதையும் எனக்கு ஏன் எழுதவில்லை, செல்வம்?''

''உங்களுக்கு எழுதிக் கவலை தரக்கூடாது என்று தான்..''

''சீராளன் கலியாணம் செய்ததை அறிவித்திருக்கலாமல்லவா?...''

செல்வம் தமையனை நிமிர்ந்து பார்த்துவிட்டு ஹோலை கண்களால் சுழற்றிப் பார்த்தாள். யாராவது நிற்கிறுர்களா என்று பார்ப்பது போலப்பட்டது.

அம்மா அடுக்களையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். கிளி பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தாள்.

''மச்சான் இங்க வந்தவர்... அக்காதான் அவருடன் முகம் கொடுத்துப் பேசவில்லை, அண்ணை?''

''எங்கேயோ கலியாணம்கட்டிவிட்டு இங்கவர அவருக்கு என்ன துணிச்சல்?...''

''அதுக்கு முதல் ஒரு ஆறு மாதத்திற்கு முன் வந்தவர். அக்கா நல்லா மாறிவிட்டா அண்ணை. நாங்க இப்ப வசதியாக இருக்கிறம். போயும் போயும் சங்கக்கடையில் மனேச்சராக இருப்பவரையா கட்டுகிறது என்று கிளியக்கா சொல்லத் தொடங்கிவிட்டா. அவவுக்கு மனசில பெரிய எண்ணம் இப்ப, அண்ணை. பணமும் வசதியும் வந்ததும் பழைய உறவுகளும் மாறிவிட்டது. மச்சானை அவ அலட்சியப்படுத்திஞ. அவர் ஒருநாள் வந்தார். அவள் அவருடன் பேசவேயில்லை. அவர் போய்விட்டார்...''

''அம்மா ஒன்றும் சொல்லவில்லையா?...'' என்று அவன் செல்வத்திடம் துயரமாகக் கேட்டான்.

''அம்மாவும் கிளியக்கா பக்கந்தான். பெரிய மாப்பிள்ளையாக, டொக்டராக, இஞ்சினியராகப் பார்க்கிற எண்ணம் அவர்களுக்கு. அண்ணை, நீங்க பாவம். எங்களுக்காக எவ்வளவைத் தியாகம் செய்தியள்...''

அவன் பேசக்கூடிய நிலையில் இல்லை. யாரை நோவது?

''ஐயா என்ன சொன்ஞலும் ஒருத்தரும் கேக்கிறதில்லை. கண்டபாட்டிற்குச் செலவழியாதையுங்கோ என்று ஐயா கத்துவார். அதையும் கேட்பதாகவில்லை. பூபாலன் சரியான செலவாளி. பிரிஜ் ஒன்று வாங்க வேண்டும் என்று சொல்லுறுன். இவர்கள் இப்படி நடக்கிறது எனக்குச் சரியாகப்படவில்லை. அண்ணி கோவிச்சது சரிபோலப் படுகுது...''

## 8

நிர்மலா கோபித்தது சரியாக இருக்கலாம். ஆனுல் அவள் நடந்து கொண்ட முறைகள் சரியாகவில்லை. பவளம் கூறியவை உண்மையாக இருக்குமோ? ''இவர் பகீரதன்; என்னுடன் படித்தவர்'' என்று எவ்வளவு இலகுவாக-சர்வ சாதாரணமாக அவள்-அவனை அறிமுகப்படுத்திஞள்?

சண்முகம் எழுந்து வெளியே வந்தான். பழைய வீட்டின் தலைவாசல் குந்தில் ஐயா அமர்ந்திருந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவன் தலைவாசலுக்கு வந்து அங்கிருந்தவாங்கில் அமர்ந்தான்.

மனதில் இருந்தாற்போல அமைதி சூழ்ந்ததுபோன்ற நினைவு. இதயத்தின் திக்குமுக்காட்டம் நீங்கியது போல இருந்தது. புதிய வீடும் அங்கிருந்த நவீன பொருட்களின் சூழலும் அதஞல் மாறிய மனித உறவுகளின் தகிப்பும் நீங்கிய நிம்மதி, பனையோலையால் வேய்ந்து சாணத்தால் மெழுகிய தலைவாசலில் அமர்ந்தபோது ஏற்பட்டது.

ஐயாவின் நிம்மதி இரகசியம் புரிந்தது. இத்தலை வாசலில் தான் அவன் ஓடி விளையாடிஞன். அம்மம்மாவின் மடியில் தவழ்ந்தான். இரு தலைமுறைகளுக்குமேல் இத்தலைவாசல்கண்டிருக்கின்றது. இங்கு தேவைகள் குறைவு. வாங்குகளும் குந்துகளும் வந்தவர்களுக்கு இருப்பிடம் தந்தன. பனையோலைக் கூரை கடுங்கோடை வெயிலுக்கும் குளிர்மையைத் தந்தது. இங்கு மின்விசிறி இல்லை. மின் விளக்குகள் இல்லை. சோபா செட்டுகள் இல்லை.

நிம்மதி இருந்தது. வசதிகள் கூடக்கூட நிம்மதி அழிகிறதோ?

ஐயா அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''இந்தப் பழைய வீட்டைப் புடுங்கி எறிந்துவிட்டு செல்வத்திற்கு ஒரு புது வீடு கட்ட வேண்டும் என்கினம். நான் இருக்குமட்டும் இங்க தான் இருப்பன். நான் செத்தபிறகு என்னவாவது செய்யுங்கோ என்றிட்டன், தம்பி. எனக்கு அந்தப் புதிய வீட்டிற்குள் போனுல் குகைக்குள் அடைபட்ட உணர்வு தோன்றுகிறது.''

''அநியாயமாக நாலு இலட்சத்தை ஒருவீட்டில செலவழிச்சிட்டியள், ஐயா. சிறிசாகக் கட்டியிருக்கலாம். நான் கஷ்டப்பட்டு உழைச்சதை ஒன்றில செலவழிச்சிட்டியள். நான் இரண்டு தங்கச்சிகளையும் ஒரு விதமாகக் கரைசேர்க்கலாம் என்று நம்பி வந்தன். இப்ப ஒன்றிற்கே சங்கடம் போல இருக்குது.''

மகனை அவர் கவலையோடு பார்த்தார். நிலைமைகளை அவர் புரிந்திருந்தார்.

''நான் எவ்வளவோ சொன்னன். கேட்டால் தானே? உன் மச்சான் சீராளனுக்குக் கிளியைச் செய்வதாக விருந்தால் மூன்று வரியத்திற்கு முதலே செய்திருக்கலாம். சீராளன் பாவம். இந்த வீட்டில இருக்கேக்க கிளிக்கு அவனைப் பிடித்திருந்தது கல் வீட்டிற்குப் போனதும் பிடிக்கவில்லை. அவனைக் கலியாணம் கட்டும்படி வற்புறுத்திஞல் மருந்து குடிப்பன் என்றுள். உனக்கும் விருப்பமில்லை. கடிதம் எழுதியிருக்கிறுய் என்று சொல்லிச்சினம்...''

''நான் அப்படி ஒன்றும் எழுதவில்லை ஐயா'' என்றுன் சண்முகம் வேகமாக. ''இங்கை என்னவெல்லாமோ நடந்து விட்டது.போகட்டும். ஏதோ என் கடமை என்று நினைத்துக் கொள்கிறன்.''

அவன் நீண்ட பெரு மூச்சை வெளிவிட்டபடி தகப்பனைப் பார்த்தான்.அவர் கவலையோடு அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, குறைச் சுருட்டை தட்டியில் செருகியபடி ஏதோ கூறமுயலும்போது, கேற்றைத் திறந்து கொண்டு வேலுப்பிள்ளை உள்ளே வந்தார்.

''நான் தான் வேலுப்பிள்ளை அம்மானை வரச் சொன்னன்'' என்றுன் சண்முகம்.

''வாரும்...'' என்று ஐயா வரவேற்றுர். வேலுப்பிள்ளை வாங்கில் அமர்ந்தார்.

''ஓவிசியரின் மோனும் வெளிநாட்டிலிருந்து வந்திட்டான். அங்க ஒருக்கா போனன். அங்க தேப்பனும் மோனும் ஒன்ருக இருந்து குடித்துக் கொண்டிருக்கிறுன்கள்காணும். என்னைக் கண்டதும் கமோன் வேலுப்பிள்ளை.ஒரு கிளாஸ் எடுங்கோ வெளிநாட்டு விஸ்கி என்கினம்.சும்மாசொல்லக் கூடாது, சாராயம் குடிச்சவாய்க்கு அது நல்லாத்தானிருந்தது.''

''தேப்பனும் மோனும் ஒன்ருக இருந்து குடிக்கினமோ?இது என்ன கலிகாலம்?'' என்றுஐயா வியந்தார்.

''கலி காலம்தான். முந்த நாள் பாரன், என்ர மோள் வீட்டுக்குப் போயிருந்தன். வாசலில் சயிக்கிளில் மணிச் சத்தம் கேட்டுது.தபால்க்காரனுக்கும் என்று பாஞ்சடிச்சுக் கொண்டு போனன். வாசலில் ஒரு பொடிச்சி சயிக்கிளில் நிற்கிறு.அப்படியே சீற்றில இருந்தபடி என்னைக் கேட்கிறு. மிஸ்ரர் ராசன் நிற்கிறுரோ என்று. ராசன் என்ரை பேரன்.எனக்கு எதுவும் ஓடவில்லை.பொடியங்களைத் தேடி பெட்டையள் வரத் தொடங்கி விட்டினம்-எனக்கொரு சந்தேகம் ராசனின் தங்கச்சி சாந்தாவிடம் தான் வந்திருக்க வேண்டும் என்று நினைச்சு, சாந்தாவிடமே வந்தியள் என்று கேட்டன்.நோ... நோ...சாந்தாவின் பிரதர்..... ராசனிடம்.. என்று.நான் பாவி நினைச்சன் உவன் ராசன் இந்த பொடிச்சியிடம் ஏதோ சேட்டை விட்டிருக்கிறுன்.அதுதான் பொடிச்சி கூப்பிட்டு ரெண்டு கொடுக்க வந்திருக்காக்தும் என்று ஏன் பிள்ளை அவன் உன்னிடம் ஏதாவது பிழையாக நடந்து..... அதுக்கிடையில் ராசன் வந்திட்டான். ஹாய் ராசன் என்றுள் அவள். இவன் சிரிக்கிறுன்.அந்த நோட்சைத் தாறியளா என்றுள் அவள்.இவன் ஏதோ கொப்பியைக் கொடுக்க அவள் வாங்கிக் கொண்டு போகிறுள்.உது ஆர் ராசா என்று கேட்டன் அது என்னேடு ரியூற்றரியிலை படிக்கிறது என்றுன் அவன், இந்தக் காலம் போகிற போக்கு, யாழ்ப்பாணத்தில் இனியும் கிடுகுவேலிகள் அறுக்கையாக இருக்க முடியாது...''

சண்முகம் தனக்குள் சிரித்துக் கொண்டான் வேலுப்பிள்ளை அம்மானைப் பேசவிட்டால் ஓயமாட்டார். அதுவும் ஐயாவும் சேர்ந்துவிட்டார்.

''அம்மான்,போன காரியம் எப்படி?'' என்று சண்முகம் கேட்டான்.

அம்மா கையில் கிளாசுடன் வந்தாள்.

''அண்ணை இப்பவே வந்தியள், அடுப்படியில் அலுவலாக இருந்திட்டன். இந்தாங்கோ கோப்பி குடியுங்கோ.....'' என்று வேலுப்பிள்ளையிடம் கிளாசை நீட்டிஞள்.

''எனக்கு வேண்டாம் பிள்ளை. நான் இப்பத்தான்...'' என்று அவர் சிரித்தார்.

''போட்டிட்டியளாக்கும், விடமாட்டியள் .''

சின்னத்துரையர் சாதகம் பொருந்திஞல் சரியென்கிறுர், கிளியின்ர குறிப்பைக் கொடுப்பம்...''

''சீதனம் என்ன கேட்கிறுர் அம்மான்?''

அம்மா அவனை ஏறிட்டுப் பார்க்கிறுள்.

''வீடு வளவு ..டொனேசன் ஐம்பதாயிரம்...நகை நட்டு இவ்வளவும் கொடுக்க வேணும்.''

''பொடியன் வெறும்வாத்தி தானே?...'' என்ற தாயை சண்முகம் கோபத்துடன் பார்த்தான்.அம்மா அதனைக் கவனியாது, ''அவனுக்கு இவ்வளவு சீதனத்தை அள்ளிக் கொடுக்கிறதே?எங்கையாவது எஞ்சினியராகப் பாருங்க அண்ணை'' என்றுள்.

அவனுக்கு எரிச்சல் கொப்பளித்தது.

''சும்மா விசர்க்கதை பேசாமல் போங்கோ. உங்களுக்கு ஒன்றும் தெரியாது. ஊர் உலகம் தெரியாது ஏதோ இலட்சக்கணக்கிலை வைச்சிருக்கிறது மாதிரிக் கதை.கிளிக்கு மாப்பிள்ளை பார்க்க எனக்குத் தெரியும்.சின்னத்துரையின் மகன் நல்ல பொடியன்.அவனுக்குத் தான் செய்துவைக்கப்போறன். குறிப்பை எடுத்துவந்து அம்மானிட்டக் கொடுங்க.''

அம்மா விக்கித்துப் போனுள். சண்முகம் இப்படி ஒரு நாளும் பேசியவன் அல்லன்.

''நீ உன்ர பாரத்தைக் குறைக்கப் பார்க்கிறுய்?''

''உங்கடை பாரத்தை, அம்மா'' என்றுன் சண்முகம் ஆத்திரத்துடன்.

''அவன் என்னசொல்கிறுன்? நீ என்ன கேக்கிறுய்.

(14ம் பக்கம் பார்க்க)

தொடர் நவீனம்

## வாழ்வின் பாடம்

கானிலே சிங்கங்கள் வாழ்வதால் மான்மரை
காலத்தா லழிந்த தில்லை
ககனத்து மீனெலாம் பரிதியின் வெம்மையிற்
கரியாகிப் போனதில்லை.
மீனெலாம் நீரிலே திமிங்கிலம் விழுங்கியே
மாண்டுமே போனதில்லை
மிஞ்சிடும் கொடுமையில் அஞ்சியே வாழினும்
மானிடம் அழிந்ததில்லை
வானமாம் வீதியில் வட்டமிட்டே கருடன்
வந்துமே போவதாலே
வையகக் கோழியின் குஞ்சுகள் வாழ்ந்திடா
தோடியோ சாகவில்லை
ஞானமாம் சுடருடை மானிடா; நெஞ்சிடை
நிறுத்தியீ துண்மை தேர்க!
நாற்புறம் சூழ்ந்துனே நாசமே செய்யினும்
நலிவுருத் திண்ணமை கொள்க!

வாடையொடு சோளகம் வரிசையாய் வந்துமே
வருடங்கள் தோறும் நிற்கும்
வையக மக்களின் வாழ்வினுக் குதவியாய்
வீசியே உதவி செய்யும்
கேடிபோற் கொண்டலும் கெட்ட கச்சானுமோ
கீழ்க்குணம் விடுவதில்லை
கெட்டவர் புவியினில் நிலையாமை காட்டியே
கிளர்ந்தவை உடன் மறையும்
நாடியிற் கையுடன் நாலையு மெண்ணியே
நலிவுறும் மனித! கேட்பாய்
நானிலம் நீதியின் சோதனைச் சாலையில்
நஞ்சரோ நிலைப்பதில்லை
வாடியே வெந்திடும் வாழ்க்கை ஒழிந்திடும்
வையகப் பண்பு தேர்க!
வருவதை எதிர்கொள்ளும் வண்மையோ வாய்த்திடின்
வாழ்க்கையே வெற்றியாகும்!

- அனலையூர் 'ஆரா'




[7]

''இளமாதர் இருக்கின்ற வீடு நோக்கி
இதுபோல ஆயிரமாம் சாட்டுச் சொல்லி
இளைஞர்கள் வருவார்கள் இதற்கே எல்லாம்
ஏமாந்து போவதற்கே நான்ஆள் இல்லை
பழுதான ஸ்கூட்டரினைச் சாட்டு வைத்தே
பலநாளும் வரஅவன் தான் முயலு கின்றான்
பழிக்கஞ்சேன் அவனைநான் காண்பே னாகில்
பந்தாக உதைந்திடுவேன்'' என்றும் சொன்னான்.

குடிப்புகழைக் குடியாலே மாய்க்கும் அந்தக்
கொடும்பேயோ பலவாய கொடும் சொற்கூறிப்
படிப்படியாய் வெறிகுறையச் சத்தம் தானும்
படிப்படியாய்க் குறைந்திடவே இருந்த தங்கை
நொடிப்பொழுதும் உடன்பிறப்பைப் பிறப்பின் சேயை
நொந்துதுடி த்திடச்செய்யும் அந்தப் பேய்போல்
குடிதோறும் பெரும்பாலும் ஒவ்வொன் றென்றும்
குவலயத்தே இருந்திடுதல் புதுமை தானே?

அரியபல ஓவியங்கள் தீட்டு கின்ற
ஆற்றல்சேர் கலைஞனும் குமார்என் பானும்
பெருநகராம் கொழும்பு சென்றான் பண்பு வாய்ந்த
பெண்ணழகி கயல்விழியாள் நினைப்பி னாலே
இரவுபகல் மனம்குழம்பி ஈற்றில் நெஞ்சை
எடுத்தியம்பும் வகையினிலே இனிய தான
திருமுகமொன் றவளுக்குத் தீட்ட லானான்
சிறந்தபல ஓவியங்கள் தீட்டும் கையால்

வேறு

''வானடைந்த அழகனைத்தும் புவியடைந்த
வனப்பனைத்தும் திரண்ட பாவாய்:
தேனடைந்த இதழுடையாய் நீயடைந்த
துயரங்கள் தெரிந்த போது
நானடைந்த வேதனையை எடுத்தியம்ப
நற்றமிழில் சொல்தான் உண்டோ?
கானடைந்த மலர்க்கூந்தல் கவலையுறல்
கலையுள்ளம் தாங்கு மாமோ?''

''பட்டுநிகர் நின்மேனி கல்லுடைக்கும்!
தொழிலாலே பாரில் நாளும்
பட்டுவரும் துயர்கண்ட அப்போதே
என்னிதயம் துடிக்க லானேன்
கட்டுடலை உழைப்பென்றும் ரோஷமென்றும்
பலகூறி வருத்தி டாதே
மட்டமைந்த நறுமலர்க்குத் தேன்வழங்கல்
அதுவொன்றே வேலை ஆகும்''

''எழும்பரிதி எழில்விளைக்கும் செழும்பொழிலின்
மத்தியிலே இருக்கச் செய்து
வளம்மலிந்த நின்மேனி வனப்பதனை
ஓவியமாய்த் தீட்டித் தீட்டி
உளம்மகிழ்ந்து கொளவேண்டும் உன்மொழித்தேன்
என்றென்றும் நுகர்தல் வேண்டும்
இளம்பருவ சுகம்யாவும் எவ்வாறென்
றெவ்வாறென் றறிதல் வேண்டும்''

''உலகமெனும் பாவையவள் இயற்கையென
வழங்குகின்ற அழகை எல்லாம்
நிலமனைத்தும் அலைந்தலைந்தே இதுவரையும்
அனுபவித்தேன் நீயும் சேர்ந்தால்
உலகனைத்தும் அன்றிலென இருவருமே
பிரியாது செல்வோ மாகி
நலமனைத்தும் துய்த்திடலாம் நன்கிதற்குச்
சம்மதமோ? என்றே கூறாய்''

''வாவிதனில் மலர்ந்திலங்கும் வண்ணமலர்
எனவிளங்கும் விழியால் என்றன்
ஆவிதனைக் கவர்ந்தவளே நீஎனது
துணையானால் அகிலம் போற்றும்
ஓவியங்கள் முன்னிலுமே பன்மடங்கு
வனப்புடனே தீட்டிக் கொள்வேன்
மேவுமொரு மகிழ்வன்றி வேறெதுவும்
காணாதே வாழ்ந்து கொள்வேன்''

''வான்மழையின் பயனதனை உழுதொழிலில்
வாழ்வோரே தெரிதல் போலும்
தேன்கவியின் சிறப்பனைத்தும் கவியுள்ளம்
கொண்டாரே உணர்தல் போலும்
வானுலவும் நிலாச்சுகத்தை வாலிபத்தில்
நிற்பாரோ அறிதல் போலும்
மீன்நிகர்க்கும் விழியுடையாய் நின்னழகின்!
பெருமையினை நானே தேர்வேன்''

''எத்தனையோ ஓவியங்கள் தமைஇங்கு
பொருட்காட்சி தனிலே கண்டேன்
அத்தனைக்கும் நின்னழகின் முன்னிற்கும்
ஆற்றலிலா இயல்பும் கண்டேன்
முத்துநகை மென்மையுடல் கோலவிழி
நாணுமுகம் இவைகள் எல்லாம்
சித்திரங்கள் நின்போல அழகுடனே
கொண்டிருத்தல் கண்டேன் இல்லை''

# தமிழிலக்கியப் பணியில் சிங்களப் புலவர்கள்

வட வேங்கடம் தென் குமரியாயிடை தமிழ் நிலம்என வகுத்தவர்களுக்கு முன்னர், இலங்கையை உள்ளிட்ட பெருநிலப் பரப்பொன்று நிலவியது என்பது பல கோணங்களில் ஆராயப் பெற்ற முடிந்த முடிபாகும். லெமூரியா எனவும் வழங்கிய குமரிக் கண்டத்தின் அடி நிலப்பரப்பு இன்றும் இந்து சமுத்திரத்தில் உள்ளது.

மொகஞ்சதரோ, ஹரப்பா எனப் புகழ் பெற்ற பழைய நாகரிகத்தின் சிதைவுகள் போன்ற அடையாளங்கள், தமிழர் வாழ்ந்த இடங்களில் எங்கும் உள்ள வகையில் இலங்கையிலும் அதிலும் தென்னிலங்கையில் உள்ளன.

இலங்கையின் பூர்வ இதிகாசமெனச் சிங்களவர் வழங்குகின்ற வரலாற்றில் சிங்கள மன்னர்கள் பலர் செந்தமிழை வளர்த்ததோடு, அவர் தம் அரண்மனை மொழியாகவும் தமிழ் நிலவியதும்சிங்களப் புலவர்கள் பலர் மத்திய காலத்திலும் தமிழ்ப் புலமை வாய்ந்திருந்தனர். மத்திய காலத்தில் புத்தகுருமார் பலர், தாங்கள் பாடிய தூதுப் பிரபந்தங்களில் தமிழ் மொழியை வெகுவாகப் புகழ்ந்துள்ளனர்.

## சிங்களத்தில் தூதுப்பிரபந்தங்கள்

சிங்களத்தில் தூதுப் பிரபந்தங்கள் சந்தேச இலக்கியங்களாம். செல்லி கினி சந்தே

## தமிழ் தந்த தாதாக்கள்

சய, கோகுல சந்தேசய, கிர சந்தேசய, செவுல் சந்தேசய என்பன ஒரு சில தூதுப்பிரபந்தங்களாம், தங்களை ஆரியர் எனக் கூறிக் கொள்ளும் சிங்களப் பெரும் புலவர்கள், தாங்கள் எழுதிய நூல்களில் பழைய ஆரியர்கள் திராவிடப் பெண்களை விரும்பி மணந்து தமிழை நன்குணர்ந்திருந்தனர் என்பர். சிங்களவர் வருகை என்னும் கட்டுரை எழுதிய பேர்ணியோலா என்னும் பெரியார், 1955 ஆம் ஆண்டில் தாம் செய்த ஆராய்ச்சி நுட்பங்களை வெளியிட்டுள்ளார்.

## தமிழரும் வர்த்தகமும்

மிகப்பழைய காலத்தில் இலங்கையின் வர்த்தகமும் தமிழர்கையில் இருந்ததென்பதையும், தமிழ் மொழி வர்த்தக மொழியாய் நிலவியதென்பதையும், பெருமையோடு பேர்ணியோலா குறிப்பிடுவர். இதேஅடிப்படையில் தென்கிழக்காசிய நாடுகளில் வர்த்தகம் தமிழர் கையில் தமிழ்மொழி யொலிப்ப நடைபெற்றதென்பது வரலாற்றுண்மையாகும். கிரேக்கர் பலர் தமிழ்நாட்டுக்கு நேரில் சென்றவரலாறு வெளிப்படை உண்மையாகவுள்ளது.

**க. சி. குலரத்தினம்**

தமிழ் வர்த்தகாயசேனன், குட்டிகன் என்பவர்கள் கிறிஸ்துகாலத்துக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் அரசுவீற்றிருந்த அருமைப்பாடும் உண்டு. சிங்கள இனத்தில் மிகுதியான தமிழ் இரத்தம் உண்டென்பதை நம்பாதவர்களுக்குச் சிங்களக் கலைவளர்ச்சி, கட்டட வளர்ச்சி, கலாசாரவளர்ச்சி என்பனவும் தமிழரின் உபகரிப்பை விளங்கிக் கொள்ள முடியாது என்று பேர்ணியோலா எழுதியுள்ளார். இலங்கைச் சமயவளர்ச்சிக்கும், சமூகவளர்ச்சிக்கும் திராவிடர் பங்களிப்பு மகத்தானதாகும்.

## மலைநாட்டு மைனாவிடு தூது

மத்தியகாலத்தில் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஜெயவர்த்தனபுரத்தில்
(14ம் பக்கம் பார்க்க)

# ஒரு தமிழ்ப்பணிக் கழகத்தின் ஆறு ஆண்டு சாதனை

1977 ஆம் ஆண்டில் 'முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்' என்ற பெயரில் எமது கழகம்தோற்றுவிக்கப் பெற்றது. ஈழத்துத் தமிழறிஞர்களின் மொழியியல் கலை, பண்பாடு சார்ந்த ஆய்வு நூல்களைக் காலத்துக்குக் காலம் அடக்கவிலையில் வெளியிடுதலே கழகத்தின் முதன்மை நோக்கமாய் அமைந்தது. 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐந்து நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. அவையாவன.

(1) ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி'
-க. சொக்கலிங்கம் எம். ஏ.

(2) 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்'
-நா. சுப்பிரமணியம் எம். ஏ.

(3) 'தமிழியற் சிந்தனை'
-பேராசிரியர் சு. வித்தியானந்தன்

(4) 'கம்பராமாயணக் காட்சிகள்'
-இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(5) 'தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்புகள்'
கலாநிதி அ. சண்முகதாஸ்.

கடந்த 18-12-1983 ஞாயிற்றுக்கிழமை திருவாட்டிமனோன்மணி சண்முகதாஸ் எழுதிய சி. வை. தாமோதரம்பிள்ளை-ஓர் ஆய்வுநோக்கு' என்றநூல் சமூகநூல் வரிசையில் ஆறுவது நூலாக வெளியிடப் பட்டது. இந்நூல் திருவாட்டி மனோன்மணி சண்முகதாஸ், தமது முதுகலைமாணிப் பரீட்சைக்கென யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை என்பது குறிப்பிடத்தக்கது.

கழகம் நூல்களை வெளியிடுவதோடு நின்று விடவில்லை. அறிஞர்களைக் கொண்டு ஆய்வோடு வாசிப்பித்தும், பேராசிரியர் சு. வித்தியானந்தன், இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர், எழுத்தாளர் தேவன் ஆகியோரைக் கௌரவித்து விழா எடுத்தும், பேராசிரியர்கள் ஆறு அழகப்பன், திருநாவுக்கரசு ஆகியோரை வரவேற்றுக் கலந்துயையாடல்கள் நிகழ்த்தியும், பாரதி திருநாளைத் தனித்தும் மகாகவி நினைவுதினத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையோடு இணைந்தும் ஆய்வரங்காய் நிகழ்த்தியும், கழகச் செயற் குழு உறுப்பினராயிருந்த க. சிவநேசன் அவர்களின் 'நரிமாப்பிளை' நூல் அறிமுகம் நடத்தியும், நாடக அரங்கக் கல்லூரியைக் கொண்டு நாடகங்களை மேடையேற்றியும் மொழி, கலை கலாசாரத்துறைகளில் கடந்த காலங்களிற் பணிபுரிந்து வந்தது; இனியும் பணிபுரியும்.

தமிழறிஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தமிழன்பர்கள் பலரையும் செயற்குழு உறுப்பினர்களாகக் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் இந்நூல் வெளியீட்டுப் பணியைக் கழகம் மேற் கொண்டு வருகின்றது. இதன் எதிர்காலப் பணிகளுக்கு ஈழத்துத் தமிழ் மக்களின் ஆக்கமும் ஊக்கமும் மிகுதியும் வேண்டும் என்று கூறவேண்டுவதில்லை.

க. சொக்கலிங்கம்
(பொதுச் சொயலாளர்
மு. வெ. கழகம்)


## ரஸ்ட் ரவல் சேர்வீஸ்

தலைமை அலுவலகம்

| | |
|---|---|
| 11/A, மொம்சசக்கட்டிடம், | ஹைதிராமணி ஆர்காட் |
| ஸ்ரான்லி வீதி, | 65, சதாம் வீதி, |
| யாழ்ப்பாணம். | கோட்டை. |
| T. P. 241i1 | T. P 548409, 548811 |

★ பிரயாண முகவர் தொழிலின் 18 வருட அனுபவம் உள்ளவர்களின மேற்பார்வையில் நடாத்தப்படும் இந்த ஸ்தாபனம் இன்று முன்னணியில் நிற்கும் பிரயாண முகவர் காரியாலயங்களில் ஒன்றாகும். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

★ பிராக், பெல்ஜியம், விசா ஒழுங்குகள்செய்து தரப்படும்.

★ ஏரோபுளட் சி. எஸ். ஏ. (C. S. A.), எயர் லங்கா, விமான டிக்கட்டுகளில் விசேட கழிவு தரப்படும்.

★ குறைந்த கமிசனில் பிரயாணிகள் காசோலை செய்து தரப்படும்.

★ தரகர்கள் இன்றி நீங்களே டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

# நரியின் சமர்த்து

செல்வி கு. சண்முகப்பிரியா

ஓர் ஊரை அடுத்து ஒரு காடு இருந்தது. ஊர், காடு இரண்டையும் இணைக்கும் கரையோரத்தில் ஒரு குளம். கடுங்கோடையாகையால் குளத்தில் தண்ணீர் வற்றி விட்டது.

அந்தக் குளத்தில் ஒரு முதலை வசித்து வந்தது. இப்பொழுது அதன்பாடு திண்டாட்டமாகி விட்டது' உடனே அதுதண்ணீர் நிரம்பிய ஒரு குளமோ குட்டையோ பார்த்து குடியேற வேண்டியிருந்தது. தந்திரமாக ஒரு யோசனையும் அதற்கு அப்போது தோன்றியது. சமயத்தை எதிர்நோக்கியிருந்தது முதலை.

ஒரு சமயம் அயலூருக்குப் போகும் மனிதன் ஒருவன் குளத்துச் சாலை வழியே போய்க் கொண்டிருந்தான். ''ஐயா மனிதரே. சற்று இங்கே வாருங்கள்; நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்'' என்று முதலை அவனைக் கேட்டுக் கொண்டது. மனிதன்,,,அதற்கென்ன என்னால் முடிந்தால் செய்கிறேன்''என்று பதிலளித்தான். ''ஒன்றுமில்லை. இந்தக் குளத்தில் தண்ணீர் வற்றிவிட்டது. இனி நான் ஒரு நிமிஷம் கூட இங்கே தங்க முடியாது ஆகையால் தண்ணீர் நிறைந்திருக்கும் ஓர்குளத்துக்கு என்னை நீங்கள் எடுத்துக் கொண்டு போய் விடுங்கள். இந்த உபகாரத்தை செய்தால் உங்களை என்றுமே மறக்க மாட்டன்'' என்றது முதலை.

''அது சரி உன்னை எப்படிச் சுமந்து கொண்டு போவது'' என்று அந்த மனிதன் கேட்டான்.

உங்கள் தோளில் ஒரு கோணிப்பை வைத்திருக்கிறீர்களே, அதைத்திறவுங்கள் அதற்குள் நான் நுழைந்து விடுகிறேன். கோணியின்வாயை கட்டிவிட்டு என்னைக் கொண்டு போங்கள்''என்றது முதலை.

அவன் சாது. அப்படியே முதலையைச் சுமந்து கொண்டு ஒரு குளத்துக்குப் போனான் அங்கே அதை விட்டுவிட முயன்றான், முதலை ''ஐயா ஐயா இன்னும் சற்று ஆழத்தில் விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சியது.

''சரி முழங்கால் அளவு ஆழத்தில் விடுகிறேன்'' என்றான் மனிதன்.

''தயவு செய்து இன்னும் ஆழத்தில் விட்டுவிடுங்கள்' என்றது முதலை. ஏமாளியாகிய மனிதன் சரியென்று இடுப்பளவு ஆழத்தில் அதனை விட்டு விட்டு திரும்பினான். ஆனால் துரோகியாகிய முதலை உடனே எட்டி அவன் காலைக் கவ்வியது.

மனிதன் ''அட நன்றி கெட்ட முதலையே! நான் உனக்குச் செய்த உதவிக்குப் பதில் இதுவா'' என்று கேட்டான்.

''எனக்கு இப்போது ஆகாரம் இல்லை. உன்னைத் தின்னாவிட்டால் என் உயிரே போய் விடும் போலிருக்கிறதே!''என்றது முதலை.

கரையோடு போன கழுதை ஒன்றைக் கூப்பிட்டு மனிதன் மத்தியஸ்தம் செய்யும்படி கேட்டுக் கொண்டான். அது முதலையைப் பார்த்து ''ஐயா முதலையாரே இந்த மனிதர்கள் பிறருக்கு நியாயம் சொல்லுவார்கள். தாங்கள்செய்வதெல்லாம் அநியாயம். என் விஷயத்திலேயே பாருங்கள். நான் நினைவு தெரிந்தது முதல் என் எஜமானருக்கு மூடை சுமந்து முதுகு தேய்ந்துவிட்டது. இப்பொழுது நான் கிழவனாகி விட்டேன் என்று என்னை வீட்டைவிட்டே அவன் துரத்திவிட்டான். இவனை விடாமல் தின்றுவிடு. அதுதான் சரி''என்றது. அந்த வழியே வந்த மாடு ஒன்றும் இப்படியே சொல்லியது. உடனே முதலை மனிதனின் காலைப் பற்றியது.

சற்றுப் பொறு என்று கத்தினான் மனிதன். ''இன்னும் எதற்காகப் பொறுப்பது? உன் வர்க்கத்தை அறிந்த இரண்டு பேர் மத்தியஸ்த்தம் செய்தது போதாதா?''என்றது முதலை.

இதோ நரி ஒன்று வருகிறது. அதையும் கேட்டு விடுவோம் அது சரியென்றால் என்னைத் தின்று விடு'' என்றான் அவன். முதலை தாமதித்தது.

மனிதன் நரியை அழைத்தான். ''ஐயா எனக்குக் காது செவிடு. நீங்கள் இருவரும் கரையில் வந்து பேசுங்கள்'' என்றது நரி.

முதலையும் மனிதனும் கரையேறி நரியிடம் வந்தார்கள். மனிதன் தான் பழைய குளத்

(14ம் பக்கம் பார்க்க)

## சிறுவர் நாம்


பாலர்
அபிநயப்பாடல்

## வண்டுக் கப்பல்

வண்டுக் கப்பல்
வருகிறது
வானில் பறந்து
திரிகிறது
குண்டுப் பூவில்
இருக்கிறது
தேனை
உறிஞ்சிக் குடிக்கிறது

வண்டுக் கப்பல்
பறக்கிறது
வளைந்சு
சுழன்று இரைகிறது
கொண்டைப் பூவில்
சுழல்கிறது
குந்தப் பயந்து
பறக்கிறது

கல்வயல்
வே. குமாரசாமி



# தென்னை

## பயிரிடப்போகிறீர்களா?

நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக விளங்கிய தெங்குப் பொருள்கள் இன்று நமக்கே மேல் மட்டப்பொருள்களில் ஒன்றாகிவிட்டது.

காணி ஒன்று விலை பேசப்படும் போது எத்தனை தென்னைகள் இருக்கின்றன என்று கேட்குமளவிற்குத் தென்னை உயர்ந்து விட்டது.

தென்னைச் செய்கைக்கு மிக உயர்ந்த வளமுள்ள யாழ். குடா நாட்டில் தென்னைச் செய்கையில் ஈடுபடுபவர்ளுக்குச் சில யோசனைகள் அடங்கிய வெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ளனர் மில்க்வைற் ஸ்தாபனத்தார். அந்த யோசனைகளை இங்கே தருகிறோம்:

### மழை வீழ்ச்சி

உங்கள் பிரதேசத்தில் வருடம் 60 அங்குலத்திற்குக் (1500 m.m.) குறைவானமழை பெய்வதானால் உயர்ந்த கலப்பினம் நன்றாகப் பயன்தரமாட்டாது.

மட்டுக்கு மட்டாய 1500 m.m. அல்லது கொஞ்சம் கூடினாலும் பேர்தா. ஆனால் ஆண்டு முழுவதும் பரவலாக, நீடித்த வறட்சியின்றி மழை பெய்வதானால் உயர்ந்த கலப்பினத்துக்கு வாய்ப்பான பிரதேசமாகும்.

### மண் வளம்

உங்கள் தரை இறுக்கமானது அல்லது சரளைக் கற்பாங்கானது என்றால் உயர்ந்த கலப்பினத் தென்னைக்கு உதவாது. ஈரம்போக்கும் முறையில் நீர் வழிந்தோடக்கூடிய நிலமானால் தான், தென்னம்பிள்ளைகள் தலைநிமிர்த்து தழைக்கும். அவை நீர்த்தேக்கத்தை நீண்ட நாட்கள் சகிக்கமாட்டா. அன்றி நிலத்தின் தன்மை, தென்னம்பிள்ளைகள் இலகுவாக நீண்டவேர் விடக்கூடிய நெகிழ்ச்சி உள்ளதாய் இருத்தல் அவசியம். எனவேதான் மணற்பாங்கான நிலம் அல்லது வளம்மிக்க வண்டல் மண் நிலம் வாய்ப்பானதாகும்.

களிமண்நிலம் ஈரலிப்பை உறிஞ்சிக் கொள்ளுமாயினும், அது வறட்சிகாலத்தில் வெடித்துப்போவதால் உதவாததாகும். களிமண்பாங்கான வண்டல் நிலமும் உகந்ததாகுமாயினும் அதனடியில் கடினமான படுகையிருத்தலாகாது

### பொது விடயம்

மேலே சொன்ன காரணிகளைக் கவனமாகப் பரிசீலனை செய்தபின்பே, உயர்ந்த கலப்பினத் தென்னம் பிள்ளைகளைப் பயிராக்குதல் வேண்டும். அன்றிப் பராமரிப்பு, பசளையிடுதல் முதலியன செய்யும்போது, கட்டாயமாகத் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்ட வண்ணம் அவற்றைச் செய்தல்வேண்டும்.

சிறிய அளவில் உயர்ந்த கலப்பினத் தென்னையை வீட்டுத் தேவைக்காக உண்டாக்க விரும்புவோர், வறட்சிக் காலத்தில் நீர் பாய்ச்சி வளர்த்துப் பயன் பெறலாம்.

# நத்தார் பண்டிகைக்கு

## வெஜிடேரியன் கேக்

கேக் என்றதும் கோழி முட்டை பிரதான இடம்வகிக்கிறது. முட்டையில்லாமலே கேக் தயாரிக்கலாம் என்பது பலருக்கும் தெரியாது. முட்டையில்லாமல் தயாரிக்கப்படும் கேக் சைவர்களும் சாப்பிடலாமல்லவா:

இந்த வெஜிடேறியன் கேக் தயாரிக்கும் முறை இங்கு தரப்படுகிறது.

**தேவையான பொருள்கள்:**

டின்பால்- 1, மா- 150 கிறும், பட்டர் - 100 கிறும் சீனி- 2 மேசைக்கரண்டி, கொக்கோ பவுடர்- 2 மேசைக்கரண்டி, பேக்கிங் பவுடர்- 1 தேக்கரண்டி, நறுக்கிய கஜூ- 2 மேசைக்கரண்டி.

**செய்முறை:**

(1) மாவைச்சலித்துஎடுத்து அதில் கொக்கோ, பேக்கிங் பவுடர், கஜூ இவற்றைக் கலந்து விடவும்.

(2) சீனி, பட்டர்இவற்றை நன்கு அடித்து அத்துடன் டின்பாலைக் கலந்து அதே டின் அளவு நீரையும் நன்கு கலக்கவும்.

(3) பின் அப்பாற் கலவையில் மாவைச்சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு அடிக்கவும்.

(4) கேக் தட்டில் எண்ணை தடவிய ஆயில் பேப்பரில் இக்கலவையை ஊற்றி சாதாரண வெப்ப நிலையில் பேக் பண்ணவும்.

- பிலோராம்சந்த்

மனைவி; நீங்கள் வேலையால் வரும்பொழுது கொஞ்ச முத்திரை வேண்டி வாங்கோ...?

கணவன்: ஏன்...? யாருக்குக் கடிதம் போடப்போறாய்?

மனைவி: நான் யாருக்குக் கடிதம் போடுறது? நீங்கள் தானே அடிக்கடி காகிதம் எழுதுவியள்... அடுத்த மாதம் முத்திரை விலை கூடுதாம்... கொஞ்சம் வேண்டிவைத்தால் காசு மிச்சம்பிடிக்கலாமெல்லோ...

- என். கே. துரை


சாயி ரெலி ரேப்

புதிய யுக்திகளுடன்
புதுமையான (STEREO) படப்பிடிப்பு
புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள்
வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ
படப்பிடிப்புச் செய்பவர்கள்.

சாயி ரெலி ரேப்

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகு வைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்
இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில்
எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில்
வீடியோ படப்பிடிப்புச் செய்து கொள்ள
சாயி ரெலி ரேப் தொலைபேசி: 23759

விபரங்களுக்கு:
ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
141, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22660

குறிப்பு: கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பனம்பொருள் நிபுணர் சம்பந்தம் சொல்கிறார்

# வீணே கொட்டும் கள்ளை

# பதநீராகவே

# இறக்குங்களேன்

பனந்தொழில் துறையில் நிபுணரும் பொதுநல நாடுகளின்மூலம் பனை அபிவிருத்தி குறித்து இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக வரவழைக்கப்பட்டுள்ளவருமான திரு சம்பந்தனை அண்மையில் சந்தித்து உரையாடக் கிடைத்தது. பனம்பொருள்களை அபிவிருத்தி செய்வதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள்பற்றியும் அவற்றை ஏற்றுமதி செய்து பனந்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்க அவர் எடுத்துள்ள நடவடிக்கைகள்பற்றியும் விபரமாக எடுத்துக் கூறுகிறார்.

பனை, தென்னை, கித்துல், ஈஞ்சு ஆகிய நான்கு மரங்கள்பற்றியும் துறைபோக ஆராய்ந்தவரான திரு. சம்பந்தன் - தமிழ்நாட்டில் பனம்பொருள் அபிவிருத்தியில் பல சாதனைகளைப் புரிந்தவர்.

முதலில் ஒரு வருடத்துக்கே அவரது பணி இங்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பணி முடிவுறாமையால் மேலும் ஆறு மாதம் இங்கு தங்கியிருந்து பணியாற்றக் கோரப்பட்டுள்ளார். தாயகம் திரும்பும் முன் இவர் மட்டக்களப்புக்குச் சென்று அங்கும் சில ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவிருக்கிறார்.

'பேனு'



இலங்கைக்கும் அதாவது யாழ்ப்பாணத்துக்கும் எனக்கும் வெகுகாலமாகவே தொடர்பு உண்டு. இங்கு பலர் நான் எழுதிய புத்தகங்களை வைத்து அதன்படி பனம் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். தங்கவேலு என்ற மாணவர் அங்கு வந்து விபரமாகவே இந்த விடயங்களைப் படித்துக் கொண்டு வந்தார்.

இதற்கு முன்பே இங்கு செயல்பட்ட பனை அபிவிருத்திக்குழு நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைமையில் இயங்கியபோது என்னைப்பற்றியும் என் கண்டுபிடிப்புகள்பற்றியும் அறிந்து அவர்கள்தான் என்னை இங்குவந்து உதவிபுரியும்படி முதலில் கேட்டுக் கொண்டவர்கள். இதன் பேரில்தான் இலங்கை அரசு என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

நான் இலங்கை அரசுக்குத்தான் ஆலோசகரே தவிர பனம்பொருள் அபிவிருத்தி சபையின்கீழ் செயல்படவில்லை. இடையிடையே அவர்களுக்கு ஆலோசனை கூறுவதுண்டு.

இந்தியா முழுவதும் நன்றாகப் பதநீர் விற்கப்படுகிறது. இங்கே ஏன் யாழ்ப்பாணத்தில் விற்பதில்லையென்று ஆராய்ந்தேன். ஒருவேளை போத்தலில் அடைத்துக் கொடுத்தால்தான் சாப்பிடுவார்களோ என்று தோன்றுகிறது.

ஏற்றுமதி வாய்ப்புக்களைக் கண்டுபிடிப்பதுடன் பனம் பொருள் அபிவிருத்திக்கான ஆலோசனைகளையும் வழங்கும்படி இலங்கை அரசு கோரியிருப்பதால் பனம்பொருள் அபிவிருத்திச்சபைக்கும் அவ்வப்போது அவர்கள் கேட்கும்போது ஆலோசனைகளை வழங்குகின்றேன்.

பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பனம்பொருள் அபிவிருத்திசபைக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்கு நான் முயற்சி எடுத்திருக்கிறேன்,

## திட்ட அடிப்படையில் இயங்க வேண்டும்

கூட்டுறவுச் சங்கங்கள் தம்பாட்டில் செயல்படுகின்றன. அபிவிருத்திசபை பொதுவான சில திட்டங்களை உருவாக்கிக் கொண்டு செயல்படுகின்றது. ஆனால் எந்தப் பொருளில் அபிவிருத்தியைக் செய்ய வேண்டும் என்பதற்கான திட்டத்தை அரசு அவர்களுக்குக் கொடுக்கவில்லை. தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் இந்த ஆண்டுபனைவெல்ல உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்; 5000 பெண்களுக்கு ஓலை மற்றும் பனங்கட்டி காய்ச்சுதல் போன்றவற்றில் வேலை கொடுத்திருந்தால் அடுத்த வருடம் மேலும் மூவாயிரம் பேருக்கு வேலைகொடுக்க வேண்டும் என்று ஒரு குறியளவை நிர்ணயித்துக் கொடுத்துவிடுகிறார்கள். அதுமட்டுமில்லாமல் அதுபற்றி அடிக்கடி விசாரிப்பார்கள். அதற்குத் தக்கபடி நாங்கள் இயங்கிப் பழகிவிட்டதனால் எதையுமே இப்படியான திட்டங்களைப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டும் என்பது என் கருத்து.

முதலில் இங்கு பதநீரைப் பற்றித்தான் முடிவுசெய்திருக்கிறேன். இங்கு 19 வீதம் கள்ளை வீணே கொட்டிவிடுகிறார்கள். கள் பாவனையாளர்கள் அதனை எவ்வளவு வேண்டுமானாலும் குடிக்கட்டும். ஆனால் அதற்குமேல் குடிக்காததைக் கள்ளாக இறக்காமல் பதனீராக இறக்குங்கள் என்கிறேன்.

## ஆராய்ச்சியில் வெற்றி

சென்னையில் முதலில் போத்தலில்தான் பதனீரை அடைத்து விற்றோம். ஆனால் போத்தலில் வெகுநாள் வைத்திருக்க முடியவில்லை. பதனீர் கெடுவதைத் தவிர்ப்பதற்காக ஆராய்ச்சி மேற்கொண்டு இப்பொழுது வெற்றி கண்டிருக்கிறேன். கடந்த பதனீர் காலத்தில் பருத்தித்துறையில் பதனீரைப் போத்தலில் அடைத்தோம். அதற்கு ஏற்கனவே நான் கண்டுபிடித்து வைத்திருந்த ஒரு முறையைக் கையாண்டு போத்தலில் அடைத்து இங்கே யாழ்ப்பாணத்தில் 'கற்பகம்' நிலையத்தில்வைத்து விற்றோம். ஒரு வாரம்தான் சுமார் ஆயிரம் போத்தல் விற்க முடிந்தது. அந்த அளவுதான் பதனீரும் கிடைத்தது. பிறகு இந்தமாதிரி போத்தலில் அடைக்கப்பட்ட பதனீரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கொடுத்து இதை ஆராய்ச்சி செய்து அறிக்கை தரும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் இப் பதனீர் இரண்டு மாதகாலம் வரை கெடாமல் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தி அறிக்கை வழங்கியிருக்கிறார்கள்

19 வீதம் உள்ள கள்ளைவீணாகக் கொட்டிவிட்டு அதன் பெறுமதியையும் உற்பத்தியாளரிடமே அறவிடும் நிலைமை இவ்வாறு மேலதிகமாக இறக்கப்படும் கள்ளை இறக்காமல் விடுவதன்மூலம் தவிர்கப்படுவதுடன் நஷ்டமும் ஏற்படாது மிச்சப்படுகிறது. இந்த வருடம் 19 வீதம் என்றால் அடுத்த வருடம் 8 வீதம்என்று கொட்டுவதாக வைத்துக் கொண்டு அதற்குப் பதிலாகப் பதனீரை இறக்கி மார்க்கட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கூறுகின்றேன்.

(இன்னும் வரும்)


# விவசாயிகளே!

உங்கள் காய்கறி வகைகள், கிழங்கு வகைகள், வெண்காயம், மிளகாய் போன்றவற்றில் புழுவிழாது தடுக்கப் போகிறீர்களா? அப்படியானால் பாவியுங்கள்

## பேருசில் ஈ சி 25%

(100 மி. லீ. - 33/- 200 மி. லீ. - 62/50 450 மி. லீ. - 130/-)

அல்லது புழுத்தாக்கம் அதிகமா? அப்படியானால் பாவியுங்கள்

## தொக்குதயன் ஈ சி 50%

(100 மி. லீ. - 33/- 200 மி. லீ. - 65/- 450 மி. லீ. - 130/-)

இவை உங்கள் பயிர்களைத் தாக்கும் சகல பூச்சி புழுக்களையும் கட்டுப்படுத்தி நல்ல வருவாயை உங்களுக்குக் கொடுக்கும்.

இவை "பாயர்" தயாரிப்புகள்

## ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரேட், கொழும்பு—10

உங்கள் விநியோகஸ்தர்கள்:

- யூனியன் ஏஜென்சீஸ், பலாலி ரேட், யாழ்ப்பாணம்
- பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், கிளிநொச்சி
- குளோப் ரேடர்ஸ், வவுனியா
- M. K. M. அக்பார், அமின் தியேட்டர், மன்னர்


இலக்கியக் காட்சி

# என்று விடியும் எமக்கு?

இலக்கிய உலகில் இரட்டையர் என அழைக்கப்பட்ட புலவர்களில் ஒருவர் குருடர். மற்றவர் நொண்டி.

கண் தெரியாதவர், நடக்க முடியாதவரை தன் தோளில் சுமந்து கொண்டு போவார். இருவரும் நண்பர்கள். வள்ளல்களை நாடிச் சென்று, தம் புலமையைக் காட்டிப் பரிசுபெறுவது, அவர்கள் வாழ்க்கை.

வள்ளல்கள், எல்லோருமே பாட்டின் பெருமையை போற்றுகின்றவர்கள்அல்லர். இகழ்ந்து பேசுவதும், வெறும் சொற்பாராட்டும்தான் பலர் தரும் பரிசு.

காட்டிலும், மலையிலும், மேட்டிலும், பள்ளத்திலும் நடப்பது இரட்டையருக்குப் பெருந் துன்பமாக இருந்தது, அப்படி நடந்தாலும் இல்லை என்ற சொல்லைக் கேட்பது அதை விடத் துன்பம் தந்தது.

ஒரு தினம், நடந்து கொண்டிருந்த புலவர் ஒருசிறு பள்ளத்தில்'தெரியாமல், காலைவைத்துவிட்டார். அதனால் சிறிது ஆட்டம் கண்ட தோளில் இருந்த புலவர்'சிரித்து விட்டு, மெல்ல, மெல்ல என்றார், சலிப்புறாமல் புன் சிரிப்போடு தொடர்ந்தார் குருட்டுப் புலவர்.

மேடு பள்ளம் தாண்டி சமநிலத்தில் சென்று கொண்டிருந்த போது குருட்டுப் புலவருக்கு, அந்தப்பள்ளத்தில் விழுந்தது நினைவு வந்தது' பாட்டுப் பிறந்தது.

"குன்றும் குழியும் குறுகி
வழி நடப்ப(து)
என்று விடியும்?எமக்கென்
கோவே....."

எனப் பாடி நிறுத்தினார்'

ஒன்றுமே கொடுக்காதவனை கோ என்றும் கற்பகம் என்றும் புகழ்வதால் இத் துன்பம் தொலையுமா என்று எண்ணிய நொண்டிப்புலவர், வாய் விட்டுச் சிரித்துக் கொண்டே

..... ஒன்றும் கொடாதா
னைக் கோ
வென்றும் கா என்றும் கூறில்
இடாதோ நமக்கிவ் விடி"

என்று பாடி நண்பரின் பாடலைப் பூர்த்தி செய்தார்.

எஸ். பி. கே.

# விண்கலன்களுக்குச் செலவாகும் பணம் வீண் விரயமாகிறதா?

## 700 சோவியத் பொருளாதார நிறுவனங்கள் விண் ஆய்வு விளைவுகளின் பயன்களைப் பெறுகின்றன

அறிவியல் மேம்பாட்டுத் துறையில் விண்கலன்கள் மகத்தான பணிகளை ஆற்றி வருகின்றன.

பயன்தரு தகவல் சாதனங்களாகவும் மக்கள் தொடர்பு சாதனங்களாகவும் இவை விளங்கி பொருளதார மேம்பாட்டிற்கும் சிக்கனத்திற்கும் இவை வழிவகுத்து வருவதனுல் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் மட்டுமன்றி இந்தியா போன்ற மூன்றும் உலக, வளர்முக நாடுகளும் விண்கலன்களின் செயற்பாட்டிற்காகப் பெருமளவு நிதி ஒதுக்கீட்டினைப் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஏபடுத்தி வருவதனைக் காணலாம்.

சோவியத்யூனியன் விண்வெளி ஆய்வுகள் மூலம் அடைந்துவரும் பொருளாதார மேம்பாடுகள் குறித்தும், தகவல்துறையில் அவை ஆற்றி வரும் அரிய பணிகள் பற்றியும் பல விவரங்கள் வெளியாகியுள்ளன.

சோவியத்யூனியனில் மாதந்தோறும் சராசரியாக எட்டு முதல் ஒன்பதுவரையிலான பல்வேறு வகையிலான விண்கலன்கள் செலுத்தப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டில் மட்டும் தொண்ணூற்று எட்டுச் செயற்கைக் கோள்களும் ஏழு விண்கலன்களும், ஒரு விஞ்ஞான ஆய்வு நிலையமும் செலுத்தப் பட்டிருக்கின்றன.

### பொருளாதார ஆதாயம் தரும் பயனுள்ள முயற்சி

விண்கலன்களை உருவாக்கி வான்வெளியில் அனுப்பி நிலைகொள்ள வைத்துத் தொடர்ந்து இயங்கவைப்பதில் பெருமளவு பணம் செலவிடப் படினும், சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத்திற்கு ஆதாயம் தரும் பயனுள்ள முயற்சியாகவே அது கருதப்படுகின்றது. எடுத்துக் காட்டாக.

'மீட்டியார்' என்னும் விண்கலம், பருவநிலைபற்றிய பல்வேறு முன்னறிவுப்புக்களை அளிப்பதனுல் ஆண்டுதோறும் 50-70 கோடி ரூபிள் மிச்சம் பிடிக்க முடிகிறது.

விண்கலன்களைப் பயன்படுத்தி விண்வெளியிலிருந்து பூமியைப் புகைப்படம் எடுப்பதால் ஆண்டொன்றிற்கு ஐந்து கோடி ரூபிள் மிச்சப்படுத்த முடிகிறதாய்ச் சொல்லப் படுகிறது. துணைக்கோள்களின் மூலம் கப்பல்களின் பயணத்திற்கு உதவும் தகவல் அவ்வப் போது அளிக்கப்படுவதால் ஆண்டிற்குச் சுமார் 4 கோடி ரூபிள் அதிகலாபம் ஈட்டப் படுகிறது.

நாட்டின் தேசிய பொருளாதாரவளர்ச்சிக்காகப் பணியாற்றும் ஏறக்குறைய 700 சோவியத் நிறுவனங்கள் விண்வெளி ஆராய்ச்சியின் விளைவுகளைப் பயன்படுத்துகின்றன.

'மோல்னியா- ஆர்பிட்டா' என்னும் சோவியத் விண்வெளித்தகவல் போக்குவரத்து சாதனத்தின் பயனுக சோவியத் நாடுமுழுவதும், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடிகிறது.

சோவியத் நாட்டின் விண்கலன்கள் மூலம் பெறப்படும் தகவல்கள் அவ்வப்போது சகோதர சோஷலிச நாடுகளின் தகவல் நிறுவனங்களுக்கும் பரிமாறப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்

மனிதகுலமேம்பாட்டிற்கும், பொருளாதாரச் சிக்கனத்திற்கும் வளர்ச்சிக்கும் காலவிரயக் கட்டுப்பாட்டிற்கும், தகவல் துறை வளர்ச்சிக்கும் விண்கலன்கள் ஆற்றிவரும் அரிய பணிகளுக்கு இவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

### பொருளாதார சிக்கனத்திற்கு- வளர்ச்சிக்கு காலவிரயத்தை தவிர்ப்பதற்கு தகவல்துறை வளர்ச்சிக்கு மனிதகுல மேம்பாட்டிற்கு விண்கலன்கள் உதவுகின்றன!

க. நவசோதி

---

# மத மொழி வேறுபாடின்றி கிறிஸ்துவின் நற்செய்தியை புரட்டிப் பார்ப்போம்

இன்று கிறிஸ்து உலகில் அவதரித்த நன்னுள். இங்கு உலகம் என்பதுவரலாருக எப்பொழுதும் உண்டாகிக் கொண்டிருக்கும் சமூக அமைப்பாகும் (Historical becoming) இந்தச்சமூக அமைப்பில் மாற்றத்தை உண்டாக்கவே கிறிஸ்து அவதாரமெடுத்தார்.



அவர் பிறந்தசமுதாயத்தில் எளியவர்கள் எள்ளிநகையாடப்பட்டனர், இன்று எவ்வாறு ஒடுக்கப்பட்டவர்கள் மனித முன்னேற்றக் கணக்கு இயந்திர அட்டையில் ஒரு எண்ணுக எண்ணப்படுகின்றனரோ அவ்வாறே அன்றும் சாதாரண மனிதன் சாம்ராஜ்ய வாதிகளாலும் அவர்களது நலன் பேணும் தரகுத்தலைவர்களாலும் இவர்களுக்கு சமுதாய அந்தஸ்து அளிக்க மதத்தைக் கருவியாக்கிய மதகுருமாராலும் தங்கள் நலனுக்காக இரையாக்கப்படும் இரை மீன்களாகவே காட்சியளித்தார்கள். இந்நிலையில்தான் கிறிஸ்து பிறப்புத் தேவையாகிறது.

ஆடை, காதினிக்கக் கீதம், வாயினிக்க மது, அந்தஸ்த்தைக் காட்டக் கொண்டாட்டக் கோலம் இவ்வாருன கிறுஸ்துமஸ் கொண்டாட்டம் இன்று தேவைஅல்ல. மாருக கிறிஸ்துமஸ் என்ற நினைவில் மீளவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். கிறிஸ்துவின் நற் செய்தியை மத மொழி வெறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று புரட்டிப் பார்க்க வேண்டும். எளியவர் சிந்தனை வளரக் கூடிய நற் செய்திகளை எடுத்தியம்ப வேண்

சூ. யோ. பற்றிமாகரன்

யார் இந்தக்கிறிஸ்து?

''எளியவர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர்; குருடர் பார்வைபெறுவர் என அறிவிக்கவும் ஒதுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினுர்.''

இது கிறிஸ்துவே தன்னைப் பகிரங்கப்படுத்திய வார்த்தைகள். அன்றைய கிறிஸ்துவின் வருகை மக்கள் சிந்தனையை மாற்றியது.

இன்று இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னும் நான்—நீ என்ற உறவு வட்டத்துள் அன்பானது வரையறுக்கப்படுகிறது. வர்க்கங்களின் முன்னுல் சாதாரண மனிதன் நசுக்கப்படுகிருன். விடுதலைக்கான ஏக்கம், நீதிக்கான தாகம் இவைகள் தான் இன்றும் நாம் காண்பவை.

இந்நிலையில் கிறிஸ்துமஸ் ஒரு கேளிக்கைப் பண்டிகையாக இருக்கமுடியுமா? மேற்கத்திய நாடுகளில் காணப்படுவது போன்ற ஒரு ''சீசன்'' கொண்டாட்டம் அல்ல இது. நாவினிக்க உணவு. கண் மயங்க

டும்- சமுதாய உணர்வுகளை பார்க்க முடியாக் குருடர் பார்வை பெற வைக்க வேண்டும். ஒடுக்கப் பட்டோருக்கு நாம் உரிமை வாழவு அளிக்க வேண்டும். இன்றைய உலகினை மாற்ற கிறிஸ்த்துப் பிறப்புச் சிந்தனைகள் வழி காட்ட வேண்டும். அந்நிலையை உருவாக்க இந்நன்னுளில் உறுதி பூணுவோம்.

---

## ஹி ஹி

ஆசிரியர்: வளர்பிறை என்ருல் என்ன?

மாணவன்: ஒரு படத்தின் பெயர் சார்.

★

ஆசிரியர்: ஷாஜகான் தனது காதலிக்காக கட்டிய மாளிகையின் பெயரென்ன?

மாணவன்: வசந்தமாளிகை!

நா. மகேந்திரலிங்கம்
சங்கானை

---

அனைவருக்கும் இனிய
கிறிஸ்மஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
★ ரெலிவிஷன் ★ றேடியோ ★ மணிக்கூடு
★ பரிசுப் பொருட்கள் ★ எவர்சில்வர் மற்றும் ★ அழகுசாதனங்களுக்கு
ஸ்ரீ வாலாம்பிகா ரேட் சென்ரர்
2 1/5, ஸ்ரான்லி றேட் தொலைபேசி: 22708 யாழ்ப்பாணம்

# 'ஒன்றும் புரியவில்லை தம்பி'

ஜூலை வன் செயல்களை மறைப்பதற்கு தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் அத்தனை ஆங்கிலப் பத்திரிகைகளும் ஏதோவெல்லாம் செய்து பார்த்தன. பார்த்துக் கொண்டுமிருக்கின்றன.

வேறேதோ கதைகள் சொல்கின்றன.

ஆனால் பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் திரு. ஏ.சி.எஸ். ஹமீட் 'எப்படி மறுப்பது' என்று கேட்டு விட்டார்.

இவ்வித வன்செயல்களால் தாம் காமன்வெல்த் மகாநாட்டில் கலந்து கொண்ட போது பட்ட சங்கடத்தை விரிவுபடுத்தி பௌத்தர்கள் மத்தியில் ஜனாதிபதி மிகத் தெளிவாகவே கூறினார்.

''சிங்கள மக்களுக்கே பெரும் இழுக்கு'' என வெளிப்படையாக கூறிவிட்டார் அவர்.

பெற்றோல், மண்எண்ணெய் ஊற்றி மனிதர்களை கொலை செய்த சம்பவங்களைக் கூட ஜனாதிபதி மிகத்தெளிவுபடுத்திக்கூறி மிக்க மனவேதனைப் பட்டுள்ளார்.

சில சிங்களவர்களே காரணம் என்பதனையும் அவர் நியாயத்தின் நிலையில் நின்று அழுத்தமாக கூறிவிட்டார்

இருந்தாலும் அமைச்சர் திரு சிறில்மத்யூ பேசியுள்ளதைப் பார்த்தால் அவர் அமைதி சமாதானத்தை விரும்பியவராகத் தெரியவில்லைப் போலவே தோன்றுகிறது.

வழக்கம் போலவே அவரது குரல் மீண்டும் ஒலித்திருக்கிறது!

இதுதான் தமிழ் மக்கள் மத்தியில் ஒன்றும் புரியாத குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளது.

ஜூலை கலவரங்களில் எத்தனையோ தமிழர்களைக் காணவில்லை. வீடு வாசல்கள் எரிந்து சாம்பலாகின. இதைப் பற்றி எல்லாம் இந்த அமைச்சர் கவலைப்படாமல் வடக்கு, கிழக்கில் பௌத்த சின்னங்கள் இருப்பது பற்றி இப்போது அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பற்றியும் அவர் விட்டு வைக்கவில்லை. காரசாரமாகச் சாடியிருக்கிறார்.

''அமைதிப் புருவே அமைதிப் புருவே அழைக்கின்றேன் உன்னை'' என்றதொனியில்ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் மக்களைக் கெஞ்சிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தூர்ந்து போய்க்கொண்டிருக்கும் வகுப்புத் துவேசத்தை விசுக்கியிருக்கின்றார் கைத்தொழில் அமைச்சர்.

இதற்றிடையில் ''ஐயோ என்னையேன் இதற்கெல்லாம் குறை கூறுகின்றார்களோ தெரியவில்லை'' யெனவும் கேட்டிருக்கிறார் அவர்.

''புரியாது..... புரியாது...... வாழ்க்கையின் இரகசியம் புரியாது!''

இன்னொரு அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா புள்ளி விபரக்கணக்கொன்றைப் புதிதாக வெளியிட்டுள்ளார்--இப்பொழுது!

சில பொருள்கள் உடலுக்கு ஊறு விளைவிக்கும் என மேடையில் அடிக்கடி பேசப்படுகின்றன. ஆனால் அப்பொருள்களின் விளம்பரங்கள் தாராளமாக வெளியாகி விடுகின்றன.

விஷயங்கள் சிலவும் இது போலத்தான் இருக்கின்றன.

புதிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராவின் சமீபத்திய சில பேச்சுக்களும் பழைய அநுராவின் குரலாக இருப்பதாக தெரியவில்லை.

— க. கணேசலிங்கம்

(16ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இலக்கிய

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு வீற்றிருந்த ஆரும்பராக் கிரமபாகுவின் ஆஸ்தான புலவரும் குருவுமாய ஸ்ரீ தோட்டகமுவ இராகுல தோர்பாடிய செலலிகினி சந்தேசய என்னும் மலை நாட்டு மைனா விடுதூதுப் பிரபந்தத்தில், சைவக்கோவில்களின், பெருமையையும், தூபதீப வழிபாடுகள், தாளவாத்திய மிருதங்கத்தின் ஒலிகள், பஞ்சபுராணப் பாடல்களின் பண்ணமைதி முதலியவற்றை வெகுவாகப் புகழ்ந்து, மைனாவை அவற்றைக் கண்டும் கேட்டும் வருமாறு பணித்துள்ளார். (பாடல்கள்: 22, 23, 2[illegible],)

## இடுகுவேலி

(9ம் பக்கத் தொடர்ச்சி)

போப்பா...'' என்று ஐயா குறுக்கிட்டார்.

''கிளி ஒருக்காலும் இதுக்கு ஒத்துக் கொள்ள மாட்டாள்'' என்றபடி அம்மா வீட்டிற்குள் போகமுற்றத்தில் இறங்கினாள்.

''அம்மா''. என்று சண்முகம் அவசரமாக அழைத்தான்: ''இதுக்கும் அவள் மறுத்தால் அது அவளின்ர தலைவிதியென்று நான் ஒதுங்கிவிடுவேன். அவளுக்கு இந்தக் கலியாணத்தில் சம்மதமில்லையென்றால், இந்த மாப்பிள்ளை இதே சீதனத்தோட இரண்டாவது தங்கச்சி செல்வத்திற்குக் கட்டிவைச்சிடுவன்.''

''தம்பி...'' அம்மா - திக்பிரமை பிடித்தவளாக முற்றத்தில் சிலையாகச் சிறிது வேளை நின்றாள் பின்னர் வீடு நோக்கி நடந்தாள்.

கிளி பெருங்குரலில் அழுவது கேட்டது.

(வளரும்)

## நரியின் சமர்த்து

(11ம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து முதலையைச் சந்தித்தது முதல் புதிய குளத்தில் விட்டது வரை ஒன்றுவிடாமல் சொன்னான். முதலை அவன் சொன்னதெல்லாம் சரியென்று ஒப்புக் கொண்டது.

நரிசந்தேகமாகத் தலையை ஆட்டி, ''முதலையே, உன் உடம்பு பெரியது; கனமானது. நீ எப்படி இவ்வளவு சிறிய பையில் நுழைந்தாய்? மிகவும் ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? அதை நான் நம்பமாட்டேன்'' என்றது.

உடனே முதலை என்ன அப்படிச் சொல்கிறாய்? இதற்குள் புகுவது பெரியகாரியமா? இதோபார்'' என்று பைக்குள் புகுந்து கொண்டது.

''ஐயா மனிதரே. நீர் இவ்வளவு கனமான முதலையை எப்படித் தோளில் தூக்கிவந்தீர்? என்று கேட்டது நரி. உடனே அந்த அப்பாவி மனிதன் பழையபடி அந்தப் பையின் வாயைக் கட்டித் தன் தோளின்மேல் தூக்கிவைத்துக் கொள்ளப் போனான்.

''ஐயா, அசட்டு மனிதரே! அடுத்தபடியாகத் தயவு தாட்சணியம் இன்றிப் அந்தப் பையை ஓங்கி இந்தப் பாறையின் மேல் அறையும். நன்றி கெட்ட முதலைக்குச் சரியான தண்டனை அதுதான் என்று நரி கூறியது.

அப்படியே அவன் பையை ஓங்கி அறைந்தான். அவன் ஓங்கி அறையும் போது பை கிழிந்து முதலை குளத்திலே போய் விழுந்தது. அதன் உடம்பெல்லாம் கோபத்தால் நடுங்கியது. ''ஏ, வஞ்சனைகார நரியே! நீ இப்படி மோசம் செய்வாய் என்று நான் கொஞ்சங்கூட நினைக்கவில்லை. என் கைக்கு வந்த உணவை வாய்க்கு எட்டாமல் அடித்து என் உயிருக்கும் உலைவைக்கப் பார்த்தாயே. இருக்கட்டும். உன்னைவிட்டேனா பார். உன்னை என்றைக்காவது பழிவாங்காவிட்டால் நான் முதலையே அல்ல'' என்று வஞ்சினம் கூறியது.

''அப்படியே செய். உன்னிடம் அகப்பட்டு விட்டால் நான் நரியே அல்ல'' என்று சபதம் கூறியது நரி.

பலமாதங்கள் சென்றன. முதலை, நரி இரண்டும் சபதத்தை மறந்து விட்டனவோ என்றுகூடத் தோன்றியது. ஒரு நாள் பசி தாங்காமல் நரி அந்தக் குளத்துக்கே வந்தது. மரத்தின் வேர்கள் குளத்துக்குள்ளே நீண்டிருந்தன. வேர்களின் அருகே நண்டுகள் இருப்பதைக் கண்ட நரி சாவகாசமாத் தின்று பசி ஆறிக் கொண்டிருந்தது. இதைக் கவனித்த முதலை பதுங்கி வந்து நரியின் காலைக் கவ்வியது. நரி ஆட அசையவில்லை சிரித்தது.

''பித்துக் கொள்ளி முதலை! என் காலுக்கும் மரத்தின் வேருக்கும் வித்தியாசம் தெரியவில்லையே! வேரைத்தின்றுவது பசி தீர்த்துக் கொள்:'' என்று நரி சொல்லியது. முதலை சடக்கென்று நரியின் காலை விட்டு வேருக்குத் தாவியது. நரி காலை விடுவித்துக் கொண்டவுடன் பாய்ந்து கரைக்கு வந்து ''எப்படி என் சமர்த்து?' என்று குறும்புப் பார்வை பார்த்தது. முதலை ஆத்திரமும் ஏக்கமும் பொங்கத் தண்ணீருக்குள்ளே மறைந்தது.

## வாழ்வா?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

உலகின் எந்த ஒரு பிரச்னையையும் தீர்க்க அணுகுண்டு பயன்படாதென்பதனையும், அகிம்சை வழியிலேயே எந்தப் பிரச்னைக்கும் தீர்வு காண முடியுமென்பதையும் இந்நூலில், நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.

அணுகுண்டின் தோற்றம், வளர்ச்சி, அதனாலேற்பட்ட தீமைகள் பற்றி இலகுவான முறையில் பாமரமக்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூலை ஒவ்வொருவரும் வாசிப்பதின் மூலம் அணுகுண்டினால் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ள முடியும்.

தி. வெற்றிவேலுப்பிள்ளை

## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் வாங்க வாசலுக்கு ஓடவில்லை. 'யாராவது வாழ்த்துமடல் அனுப்பியிருப்பார்கள்' என எண்ணியபடி வாசலுக்கு வந்த அஞ்சலினுக்கு அதிர்ச்சி தரும் செய்தி அதனுள் காத்திருந்தது தபால்காரன் தந்துவிட்டுப் போன வெளிநாட்டுக் கடிதத்தை உடைத்துப் படித்தவள் 'கிறிஸ்ரி, என்று குளறியேவிட்டாள். கால் தடுமாறியபடி உள்ளே ஓடிவந்த அவளது குதூகலத்தைக் கண்ட அன்ரனியும் என்ன? என்று கேட்டபடி வந்தான் அஞ்சலின் ஓடிச் சென்று கிறிஸ்ரியை வாரி அணைத்தபடி ',கிறிஸ்ரி.. என் ராசா... செல்லக் கண்ணு... செல்லக்கண்ணு ..' என்று அவன் மீது முத்தமாரி பொழிந்தாள்

''சர்வதேசசித்திரப்போட்டியில் அடகண்ணு உனக்கு மூன்றாவது பரிசு கிடைச்சிருக்கு ... நீ வரைந்து அனுப்பிய மாதாவும் பாலன்யேசுவும் படத்திற்கு ஆயிரம் டொலர் பரிசு கிடைச்சிருக்கு...'' என்று கொஞ்சினாள். அன்ரனியும் பூரித்துப் போனான்.

''அடேயப்பா! எங்கட நாட்டுக் காசில இருபத்தியையாயிரம் ரூபாய்!!...''


கிறிஸ்ரியும் உற்சாகமடைந்தான். என்றாலும் அவன் கேட்ட முதல் கேள்வி—

,'மம்மி, கலர் பல்ப்ஸ் எல்லாம் வாங்கித்தருவியா?''

(யாவும் கற்பனை)


எமது மனமார்ந்த நத்தார் வாழ்த்துக்கள்!

நவீன உல்லாசக் குடிசைகள்



எல்லாம் உங்களுக்காகவே

உங்கள் நத்தார்பண்டிகையையும் புதுவருட கொண்டாட்டத்தையும் ''பானக்கிள்ஸ்'' இசைக்குழுவினரின் இன்னிசையோடு விதம் விதமான உணவுகளை உண்டு மகிழ்ந்து உன்னதமாகக் கழிப்பதற்கு வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாசப் பயணிகள் ஹோட்டல், காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டலை நாடுங்கள்.

X'MAS and NEW YEAR SPECIALITIES

NEW YEAR,S EVE GALA DINNER DANCE Rs. 100/- per pax
(INCLUSIVE OF GALA DINNER and COVER CHARGE)
Band ''The Barnacles'' - Pop Kings of the North
X'MAS and NEW YEAR SPECIAL BUFFET LUNCH ONLY Rs 50/-

FAMILY WEEKEND PACKAGE - FRIDAY NIGHT TO SUN NOON

(Inclusive of all meals plus accommodation)
A/C ROOM Rs. 590/- PER COUPLE
NON A/C ROOM Rs. 500/- PER COUPLE
N. B. : 10% Service charge additional on above rates

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone ; 22605 Jaffna.
THE ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH

## நகைச்சுவைச் சித்திரம்

# சங்கிலி ராஜாமாதிரி இருந்தான்!



**கா. யோகநாதன்**

'பேரன்பிறந்து விட்டான்' என்ற சங்கதி தெரிந்ததும் சக்கடத்தார் வீடு கலகலப்பாகியது அக்கம்பக்கத்தார், ஆஸ்பத்திரிக்குச் செல்லத் தயாராகினூர்கள்.

சக்கடத்தார் சதாசிவம் அந்தக் குறிச்சியில் ஒரு பெரும் புள்ளி இட்டல் இடைஞ்சல் என்று வீடுதேடி யார் வந்தாலும் இல்லை என்று சொல்லாமல் அள்ளியள்ளிக் கொடுப்பவர் அவர்.

சக்கடத்தாரின் மகன் சண்முகம் சவூதிக்குச் சென்று எட்டு மாதங்கள் தான் ஒவ்வொரு கடிதத்திலும் பிள்ளையைப்பற்றித்தான் எழுதுவான் கடைசிக்கடிதத்தில் கூட ஆண்பிறந்தால் 'சங்கிலி ராஜா' என்றும் பெண் பிறந்தால் 'அல்லிராணி' என்றும் பெயர் வைக்கும்படி எழுதியிருந்ததைச் சக்கடத்தார் மறந்து விடவில்லை.

ஆஸ்பத்திரியில் பிரசவ வார்ட்டில் 16ம் கட்டிலைச் சுற்றி ஒரே ஆரவாரம். சின்னாச்சி பேத்தி, பொன்னுக்கிழவி, செல்லாச்சியக்கா- இப்படிப்பலர் வந்திருப்பதைச் சக்கடத்தார் மனைவி ஆச்சிமுத்து கவனிக்காமலிருக்கவில்லை.

சக்கடத்தார் கட்டிலுக்குக் கிட்டப்போய் 'சங்கிலிராஜா' என்று பேரனின் சொக்கைத் தடவிய கையோடு பெயரையும் பதிந்து கொடுத்துவிட்டார்.

'வாடா என்ரை சங்கிலி' என்று ஆச்சிமுத்து பேரனைத் தூக்கி அணைத்துமுத்தமிட்டபோது அருகில் நின்ற பொன்னுக்கிழவி 'பேரனுக்கு என்ன போடப் போருய்' என்ருள் சக்கடத்தாரைப் பார்த்த ஆச்சிமுத்து தன் கழுத்தில் போட்டிருந்த இரண்டு பவுண் சங்கிலியைக் கழற்றி குழந்தையின் கழுத்தில் போட்டுவிட்டாள் யாரும் இதனை எதிர்ப்பார்க்கவில்லை.

"இப்ப என்னத்துக்கு மாமி துடக்குக்கழிவன்று போடலா தானே' என்ருள் மருமகள்.

'அய்யோ பிள்ளை ஆசையோடு உன்ரை மாமி போடுகிறதைப் போடட்டும். இப்பதான் பேரன் 'சங்கிலி ராஜா' மாதிரி இருக்கிருன்' என்ருர் சக்கடத்தார்.

அன்று பஸ்சேவை பகல் ஒரு மணியுடன் தான் என்றதால் காரில் வந்த சக்கடத்தார் குடும்பத்தைத் தவிர மற்றவர்கள் சென்றுவிட்டார்கள் மணியடித்தபின்பும் பேரனைப் பிரிய மனமல்லாயல் சக்கடத்தாரும் மனைவியும் நின்ருர்கள்

அப்போது இருநர்சுகள் குழந்தையொன்றுடன்வந்தார்கள்சக்கடத்தாரின் மருமகளின் கையில் கட்டியிருந்த இலக்கத்தைப் பார்த்த நர்சுகள் மன்னியுங்கள், குழந்தை மாறிப்போச்சு. இந்தப்பெண் குழந்தைதான் உங்களுடையது'என்று தாயின் பக்கத்தில் குழந்தையைக் கிடத்திவிட்டு, ஆச்சிமுத்து மடியில் வைத்திருந்த ஆண்குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவசரமவசரமாகச் சென்ருர்கள்.

ஆச்சிமுத்து முகத்தில் ஈயாடவில்லை பேரன்பாசம் கொல்லாமல் கொன்றது.

''ஐயோ என்ரை சங்கிலியைக்கொண்டு போகாதீர்கள். என்ரைசங்கிலி என்ரைசங்கிலி' என்று ஆச்சிமுத்து குளறிளுள்.

'ஆற்றையோ பிள்ளைக்கு நீயேனப்பா அழுகிருய்?'' என்ருர் சக்கடத்தார்.

''அதில்லையப்பா குழந்தையின் கழுத்தில என்ரை இரண்டு பவுண் சங்கிலி! ஐயோஎன்ரை சங்கிலி'' என்ருள் ஆச்சிமுத்து!

# பரதகலை

6-ம் பக்கத் தொடர்ச்சி,

அவையாவன நிருத்தம், நிருத்தியம் நாட்டியமாகும். நிருத்தியமானது அச்சுவையினை அபிநயமூலமாக எடுத்துக்கூறுகிறது நிருத்தம் பாதவேலைப்பாடுகளுக்கும் சிற்ப நிலைகளுக்கும் முதலிடம் கொடுக்கிறது. பரதநாட்டியக்கலையில் 'பரத' என்னும் சொல் தனக்கே உரித்தான சிறப்பு அம்சங்களைக்கொண்டுளளது. 'ப' பாவம் என்ற அம்சத்தையும் 'ர'ராகம் என்னும் அம்சத்தையும் 'த'தாளம் என்ற அம்சத்தையும் குறிப்பன ஆகும்

இக்கலைக்கும் நான்கு வேதங்களுக்குமிடையே மிகுந்த தொடர்பு காணப்படுவதைக் காணலாம். இருக்கு வேதத்தின் மூலம் வாக்கியமும், யசுர் வேதத்தின் மூலம் அபிநயமும், சாம வேதத்தின் மூலம் கானமும் அதர்வண வேதத்தின் மூலம் சுவையும் வெளியாகின்றன. இந்நான்கு வேதங்களும் மனித வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பேறுகளை எமக்கு அளிக்கின்றன. இதனால் நாம் இக்கலை மூலம் தெய்வீகஅம்சங்களையும் அடையலாம் என்பது முடிவாகும்.

அபிநய தர்ப்பணத்தில் முக்கிய பிரிவுகள் உள்ளன அவையாவன: வாசிகம், ஆடையணி, சாத்துவீகம், ஆங்கிகம் ஆகும். சாத்வீகமானது உணர்ச்சி மெய்ப்பாட்டினை வெளிப்படுத்துவதாகும் ஆங்கிகமானது உடலின் அங்கங்களால் உணர்ச்சிகளையும் செயல்களையும் பொருள்களையும் எடுத்துக் காட்டுவதாகும். கண்களின் பங்கு இங்கு சிறப்பிடம் பெறுகிறது. அபிநயத்திற்கு நான் இங்கு முக்கியத்துவம் கொடுக்கும் காரணம் இது சாதாரண பாமர மக்களுக்கு கலையின் சிறப்பினை ரசிக்கவும் அனுபவிக்கவும் வழிவகுக்கிறது. சாதாரணமாகக் கண்கள் உணர்ச்சி பேதங்களையும் மனோநிலையையும் எடுத்துக் கூறும் அவயமாக விளங்குகிறது. அபிநயத்தில் கைகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவிற்கு கண்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. கம்பர் இதனை இவ்வாறு வர்ணித்தார். 'கைவழிநயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல ஐயநுண் இடையர் ஆடும் ஆடக அரங்கு;

### அபிநயத்திற்கு சிறப்பிடம்

பண்டைக்காலந் தொட்டு கோயிற் கல்வெட்டுக்கள் அபிநயத்திற்கு சிறப்பிடம் கொடுத்துள்ளன. தென்னிந்திய அரசர்கள் ஏராளம் ஏராளம் சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைப் பேணிப் பாதுகாத்து வளர்த்துள்ளனர். என்பதற்கான சான்றுகள் மிளிர்கின்றன. தமிழ்நாட்டில் சிற்பக்கலைகள் இல்லாத கோயில்களே இல்லையென்று தான் சொல்லவேண்டும்.

பரதநாட்டிய சாஸ்திரத்தில் 108 சுலோகங்கள் உண்டு சிதம்பரம் கோயிலில் ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் ஒவ்வொரு சுலோகம் எழுதப்பட்டிருப்பதை நாம் காணலாம். அடிப்படை பரதநாட்டிய சுலோகங்களுக்கும் இவற்றிற்குப் சில முரண்பாடுகள் உண்டு எனக்கூறப்படுகிறது. எது எவ்வாறிருப்பினும் காலப்போக்கில் சமூகக்காரணங்களாலும் சில திரிவுகளும் ஆங்காங்கே முரண்பாடுகளும் ஏற்பட்டிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமானதாகும். சிதம்பரத்தில் காணப்படும் சிற்பங்கள் 13ம் நூற்ருண்டைச் சேர்ந்தவையாகும். இவ்வாறு அங்கு கோவில் கோபுரத்தில் காணப்படும் சிற்பங்கள் பரதநாட்டிய சாஸ்திரத்தை எடுத்துக் கூறுகின்றன.

(அடுத்தவாரம் முற்றும்)

உதைபந்தாட்ட வீரர் குணரத்தினத்துடன் ஒரு சந்திப்பு:-

# மைதானப்பண்பில் என்னைக் கவர்ந்தவர்

## விளையாட்டு

இலங்கை உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபையால் நடத்தப்படும் எப். ஏ [F. A]

திரு எ எஸ் குணரத்தினம் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரர். நீண்ட தூர மரதன் ஓட்ட வீரரும் கூட. இலங்கையில் சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் தரத்தில் இருப்பவர். பல பிரபல்யமான உதைபந்தாட்டப் பந்தயங்களுக்கு மத்தியஸ்தம் வகித்தவர் தமது மனங் கவர்ந்த மைதானப் பண்பு உள்ள ஒரு உதை பந்தாட்ட வீரர்பற்றி இன்றைய விளையாட்டுப் பகுதியில் அவர் விளக்குகிருர்.

கிண்ணத்துக்கான கால்இறுதிப் போட்டி சிலமாதங்களுக்கு முன்னர் கொழும்பு இராணுவ மைதானத்தில் இடம் பெற்றது. இதில் தற்போதைய சாம்பியன்களான 'சோன்டர்ஸ்' விளையாட்டுக்கழகம், இலங்கை பொலிஸ் கோஷ்டி ஆகியன மோதின.

பூவா தலையா பார்ப்பதில் 'சோன்டர்ஸ்'கழகம் ஜெயித்து ஆட்டத்தை ஆரம்பித்தது. முதல் இருபது நிமிடங்களில் 'சோன்டர்ஸ்' கழக வீரர் மகிந்த இரண்டு கோல்களைப் போட்டு தமது அணியை முன் நிற்கச்செய்தார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ்கோஷ்டியும் தனது ஆட்டத்தைத் தீவிரப்படுத்தியது. இதனுல் இக்கோஷ்டியின் ஆட்டக்காரர்கள் சிலர் முரட்டுத்தனமாகவும் நடந்துகொள்ளத் தொடங்கினர். இதை நான் அவதானித்து அந்த

(16ம் பக்கம் பார்க்க)

ராஜு ஸ்ரோர்ஸ்
அனைவருக்கும் இனிய நத்தார்-புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக!
★ புதுவருட ★ பிறந்ததின வாழ்த்து
மடல்களும் ★ கேக் ★ குளிர்
பானங்களுக்குத் தேவையான
சகல பொருட்களும்
இறக்குமதிசெய்யப்பட்ட ★ அலங்கார★ ஆடம்பர
நவீன விளையாட்டுப் பொருட்களும்
★ சோடனைச் சாமான்களும் ★ பிளாஸ்ரிக்
★ அலுமினிய ★ எவர்சில்வர் சாமான்களும்
தொகையாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22372 தந்தி: ராஜு

SHOBA
இதோ! உங்கள் சௌகரியத்திற்கு
L.P.GAS
மற்றும்
பொலித்தீன்
இலோ ரூபா 34/- முதல் 45/- வரை
லொறி, வான்களுக்கு பாவிக்கும் தரமான கன்வஸ்
ரூபா 23/- முதல் 28/- வரை
பொலித்தீன் பைக்கற் செய்யும் இயந்திரம்
ரூபா 300/-ல் இருந்து 500/- வரை
நிலக்கடலை உடைக்கும் இயந்திரம்
ரூபா 3000/-ல் இருந்து 5000/- வரை
R. H. P. றேசர் (BALLBEARINGS)
ரூபா 30/-ல் இருந்து 200/- வரை
மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரம், கார், மீன்பிடி இயந்திரம், வள்ளங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான எல்லா அளவுகளிலும் கிடைக்கும்.
மற்றும்
பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் - பென்சில் மற்றும் உபகரணங்கள் ரூபா 1/- இருந்து 35/- வரை, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
ஒரு முறை விஜயம்செய்யுங்கள்! தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறோம்!!
ஷோபா ஏஜென்சீஸ் லிமிட்
194, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்



# இறைமகனே தாலேலோ!

ஏழைகளின் வாழ்வினைத்
தேடி
இயேசுநாதா — புவியில்
ஏழையாக, எளிமையாக
நாடி
வந்தாயோ — தாலேலோ

பஞ்சணையில் நீ பிறக்க
வில்லை
பாமரனென் — நல்ல
நெஞ்சணையில் தூங்கிடவா
நித்தியனே — தாலேலோ

பிறந்து வரு முன்னமே
வரலாறு
பாடிநின்றார் — புகழ்
சிறந்தோங்கும் உந்த
னுச்கும்
சீராளனே — தாலேலோ

பாவச் சேற்றினிலே
அலகையின்
காற்றினிலே — உள்ள
ஆபத்தை நீக்க வந்த
இரட்சகனே—தாலேலோ

அமைதியைக் காணாது
அல்லலுறும்
மானிடனின் — பெரும்
சுவை நீக்கித் தூக்கிடுவாய்
சுந்தரனே —தாலேலோ

அ. அமிர்தராஜ்

## மைதானப்...

(15-ப்பக்கத் தொடர்ச்சி)

ஆட்டக்காரர்களுக்கு அவ்வப்போது எச்சரிக்கைகளை வழங்கினேன்.

இக்கட்டத்தில் பொலிஸ் அணி வீரர் நிகால் பெரேரா 'சோண்டர்ஸ்' வீரர் ஒருவரை தமது பூட்ஸ் காலினால் உதைந்தார். உடனே நான் அவரிடம் சென்று 'மஞ்சள் கார்ட்டை' (Yellow Card- மத்தியஸ்தர்கள் எச்சரிக்கை செய்து காண்பிப்பது) காண்பித்து அவருக்கு எனது முதலாவது எச்சரிக்கையை வழங்கினேன்

ஆனல் பொலிஸ் அணியினர் தம்மை மறந்த நிலையிலேயே விறுவிறுப்பாக ஆடினார்கள் என்று சொல்லவேண்டும் இதனல் பொலிஸ் வீரர் நிகால் பெரேரா மீண்டும் ஒரு 'சோண்டர்ஸ்' அணி வீரரை தமது காலினல் உதைந்தார். இதனைத் தொடர்ந்து அவரை நான் உடனடியாக மைதானத்திலிருந்தும் வெளியேறும்படி உத்தரவிட்டேன்.

வெளியேறும்படி சைகை காட்டியதுதான் தாமதம். என்னை நோக்கி அவர் தமது கால்கள் இரண்டையும் ஒன்று கூட்டி கைகளை நேராகவைத்து சிரம் தாழ்த்தி எனது உத்தரவை ஏற்று வெளியேறினார்

இத்தனைக்கும் நிகால் ஒரு சிறந்த வீரர். அன்று அவர் ஆடிய விதம் ஒரு சில வேளைகளில் கட்டுமீறியிருந்தாலும், அபாரமாகவே இருந்தது. இத்துடன் அவர் ஒரு சப் இன்ஸ்பெக்டருமாவார்.

அவர் நினைத்திருந்தால் அன்று என்னுடன் வாக்குவாதப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேறுதுகலாட்டா பண்ணியிருக்கலாம. ஆனல் அவரின் மைதானப் பண்பு... அபாரம்! சொல்லப்போனல் அவரின் ஆட்டத்தைவிட அவரது பண்பே என்னை ஈர்த்தது.

கடந்த ஆண்டில் நான் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்களின் போட்டிகள் சிலவற்றுக்கு மத்தியஸ்தம் வகித்தேன் அப்போது எனக்கு பல கசப்பான அனுபவங்கள் கிடைத்தன இந்த அனுபவங்களுடன் விரர் நிகால் நடந்துகொண்டவிதத்தை அவதானித்தபோது உதைபந்தாட்டத்திலீடுபடுபவர்களுக்கு சில அறிவுரைகளை மீண்டும் வலியுறுத்தவேண்டும் போலிருந்தது

உதைபந்தாட்ட வீரர்கள் எக்காரணத்தைக் கொண்டும் மைதானத்தில் தாமும் தமது எதிரணியினரும் மனிதர்கள்

(17ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் இனிய
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
மாற்றுக்குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கண்ணைக்கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
நவீன டிசைன்களைத் தருவதில் முன்னணியில் நிற்பவர்கள்
★ ஜப்பான் ஜுவலர்ஸ் ★
மூன்று தலைமுறையாக சேவையாற்றி வருபவர்கள்
ஜப்பான் ஜுவலர்ஸ்
ஜப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Phone : 22518

அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்களுக்கு
கே.என்.எம். மீருன்சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.
போன்: 22585

அனைவருக்கும் இனிய
கிறிஸ்மஸ்-புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
★ ரெலிவிஷன்கள்
ரூபா 2750/-முதல் 14850/-வரை
★ றேடியோ-கெசற்றுகள்
ரூபா 575/- முதல் 2720/-வரை
★ அன்ரனு பூஸ்டர்கள்
ரூபா 150/- முதல் 950/-வரை
மற்றும் மின்னியல் பொருட்கள்
அலங்கார அன்பளிப்புப் பொருட்கள்
★ அன்ரனு அமைப்பதில்
முன்னேடிகள்
நியுசிற்றி ரேடர்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
போன்: 24055

## ஒன்றும் புரியவில்லை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகள் ஆட்களை அடியோடு மாற்றிவிடுவது ஒன்றும் புதியதல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக பொலிகாவலை எம். பி. திரு சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி சமீபத்தில் பாராளுமன்றத்தில் பேசியிருப்பதைப் பார்த்தால் ஒன்றுமே புரிவதாக இல்லை!

''எமது கிராமப்புற இளைஞர்களுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கவேண்டும். எதிர்காலத்தில் நாம் சண்டை பிடிப்பதற்கும் தமிழ் அறிவு தேவைப்படும்.''

இதுதான் அவரது பேச்சு.

திரு பார்த்தசாரதி இரண்டு முறை வந்து பார்த்துவிட்டார். இந்திய லோகசபையில் கூட இதுவிஷயம் ஒன்றுக்கு இரண்டு முறை விவாதிக்கப்பட்டது.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி தாம் சென்ற நாடுகளிலெல்லாம் இதுபற்றிக் கூறினர். கலந்து ஆலோசித்தார்.

எப்பொழுதோ போடப்பட்ட வட்டமேசை மகாநாடு இப்பொழுது சர்வகட்சி மகாநாடாக நடைபெறப்போகின்றது.

மீண்டும் ஒரு தேர்தலும் நடைபெறப்போகிறது

ஆனலும் இலங்கையிலுள்ள சாதாரண தமிழ் மகனுச்கு இவை ஒன்றுமே புரியவில்லை.

உண்மையில் ஒன்றும் புரியவில்லைத்தான்.

வெளிநாடு செல்வதற்கு
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன்
டிரவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ்—புத்தாண்டு வாழ்த்துக்கள்!
பாட்டா பாதணிகளுக்கான
மலிவு விற்பனை
நீடிக்கப்பட்டுள்ளது விலை ரூபா 20-90 முதல்
முந்துங்கள்!! தேவையை நிறைவுசெய்யுங்கள்!!! கையிருப்பு சொற்பம்!!
எஸ்.சின்னத்துரை அன் பிறதர் 39,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

# உலக அரங்கு

பெரி. சன்

## அமெரிக்கா மத்திய கிழக்குப் போரில் மாட்டிக்கொள்ளுமா?

உலக யுத்தமொன்றின் ஊற்றுவாயாக மாறக்கூடிய மத்திய கிழக்கு நெருக்கடியினைப் பொறுத்தளவில், உலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் கூடியளவு நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றே உலக சமாதான நேசிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனல், 'எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது' போல சில சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பது அரசியல் அவதானிகள் கவனத்துக்கு அகப்படாமலும் இல்லை.

மத்திய கிழக்கு மோனதலில் ஒரு முக்கிய தரப்பான எகிப்தும் அதனது நேசநாடுகளும் தமது பிரதேச நெருக்கடி குறித்து ரஷ்யா எதிர்பார்த்த அளவு ஆதரவு தரவில்லை என்ற முகாந்திரத்தின்பேரில், ரஷ்யாவுடனுன உறவுகளை ஏற்கனவே முறித்துக்கொண்டுள்ளன.

ஆனல், இதேவேளையில், இஸ்ரேலின் புதிய பிரதமர் இட்ஸாக் ஷமீரின் முதலாவது வாஷிங்டன் விஜயத்தைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கான அமெரிக்க இராணுவ உதவி ஐம்பது சதவிகிதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 'காம்ப் டேவிட்' உடன்படிக்கையை ஒத்த விதத்தில் இஸ்ரேலினை ஒரு 'வழிக்குக் கொண்டுவர' அமெரிக்கா தொடர்ந்தும் முயலும் என அரபுநாடுகள் மட்டுமன்றி நடுநிலை அவதானிகளும் கொண்ட நம்பிக்கையின் மீது வாஷிங்டன் வாக்களித்துள்ள மேற்படி மேலதிக இராணுவ உதவி மண்வாரிப்போட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, அண்மையில் அமெரிக்க ஜனதிபதி றேகனுக்கும் லெபனன் ஜனதிபதி ஜெமாயலுக்குமிடையில் வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை 'நியூஸ்வீக்' போன்ற மேற்குலக சஞ்சிகைகள் 'செவிடர்களின் சம்பாஷணை' என வர்ணித்துள்ள. அமெரிக்க-இஸ்ரேலிய நலன்களுக்கு ஒத்துவராத லெபனன் தீர்வு பற்றிய எந்தவொரு ஆலோசனையையும் பரிசீலிக்க வாஷிங்டன் மறுத்துள்ளமையையும் மேற்படி சஞ்சிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அண்மையில், லெபனனில் நடைபெற்ற துரதிர்ஷ்ட சம்பவங்களைத் தொடர்ந்து லெபனனில் சுதந்திரத்தைப் பாதுகாப்பதென ஜனதிபதி றேகன் வாக்களித்தமை வாஸ்தவமே. ஆனல், இஸ்ரேலுடனன நிபந்தனையற்ற ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் இச்சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவது சாத்தியமாகாது என்றே முதிர்ச்சி பெற்ற அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாறன ஒரு தருணத்தில்தான். "அமெரிக்க-இஸ்ரேலிய இராணுவ ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்கா மத்திய கிழக்குப் போரொன்றில் மாட்டிக்கொள்ளும் அபாயம் அதிகரித்துள்ளது" என மாஜி அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஜோர்ஜ் போல் எச்சரித்துள்ளார்.

## பாரதி கண்ணோட்டத்தில் சில மனிதர்கள்

ஒரு புதிய உண்மை வெளிவரும்போது அதனை ஆசையோடு ஏற்காமல் வெறுப்படைகிறவன் (வெளிச்சத்தைக் கண்டு அஞ்சும்) — ஆந்தை.

தன் காரியாலயத்தில் விருப்பமில்லாமல் பிறருக்குப் பிரியமாக நடந்துகொண்டு, அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் — நாய்.

கண்ட விஷயங்களுக்கெல்லாம் திடீர் திடீரென்று கோபமடைகிறவன் — வேட்டை நாய்.

பிறன் தன்னை எவ்வளவு அவமதிப்போடு நடத்திய போதிலும் அக்கிரமத்தை அகற்றமுடியாமல் மந்தமாகப் பொறுத்திருப்பவன் — கழுதை.

வஞ்சனையாலும் தந்திரத்தாலும் சமயத்துக்கேற்பப் பலவித கபடங்கள் செய்து வாழ்பவன் — நரி.

ஆர்வம் இல்லாமல் எதையாவது நினைத்து ஏங்கிக்கொண்டு மனஞ்சோர்ந்து தலைகவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன்—தேவாங்கு.

மறைமுகமாகப் பிறருக்குத் தீங்கு செய்பவன் —பாம்பு.

(மரியஜோன்—மஞ்சரி)

## நீங்கள் சகோதரங்கள் ஒருவருக்கு ஒருவர் தீங்கு செய்யாதீர்!

மனிதர்களே நீங்கள் சகோதரர்களாக இருக்கிறீர்கள். ஒருவருக்கொருவர் ஏன் தீங்கு செய்கிறீர்கள்.

- நடபடி 7: 26

### முகஸ்துதி

அயலவனை முகஸ்துதி செய்பவன் அவனுடைய கால்களுக்கு வலை விரிக்கிறன்.

- நீதிமொழி 29; 5

### தாழ்த்தப்பட்டோர் குரல்

தாழ்த்தப் பட்டவர்கள் கூக்குரலைக் கடவுள் மறப்பதில்லை.

- சங்கீதம் 9; 12

### திருப்தி

அன்னமும் ஆடையுமிருந்தால் அதுவே போதுமென்ற மனத்திருப்தி அடைவோமாக.

- தீமோத்தேயு 6; 9

### இதயம் வெகுதொலைவு

இந்த ஜனங்கள் தங்கள் வாயுடன் என்னை அணுகுகிறார்கள். தங்கள் உதடுகளால் துதித்திருக்கிறார்கள். ஆனல் அவர்களின் இருதயமோ எனக்கு வெகு தூரத்திலிருக்கிறது!

மத்தேயு 15: 8

### மேலான துன்பம்

தீமையைச் செய்து துன்புறுவதைவிட நன்மையைச் செய்து துன்புறுவதுமேல்.

- இராயப்பர் 5: 7

### கோபிப்பதில் தாமதமாயிரு

ஒவ்வொருவனும் காது கொடுத்துக் கேட்பதில் துரிதமாகவும், பேசுவதில் மெதுவாகவும், கோபம் கொள்வதில் தாமதமாகவும் இருப்பானக.

—இயாகப்பர்

### உறங்கினல் உணவில்லை

உறக்கத்தை விரும்பாதே. விரும்பினல் வறுமையடைவாய். கண் விழித்திரு; திருப்தியான உணவு பெறுவாய்.

—நீதிமொழி 20: 13

### மனைவியரைக் காதலியுங்கள்

புருஷர்கள் தங்கள் உடலைப்போலத் தங்கள் மனைவியரைக் காதலிக்கட்டும். தன் மனைவியைக் காதலிக்கிறவன் தன்னையே காதலிக்கிறன்.

—எபேசியர் 5: 28

## மைதானப்பண்பு

(16-ம்பக்கத்தொடர்ச்சி)

என்பதை மறக்கக்கூடாது. உடற்கட்டை வைத்து உடல் சாகஸம் புரிவது போலவும், தமது ஆடைகளுக்கு விளம்பரம் தேடுவது போலவும் மைதானத்தினுள் நடக்கக் கூடாது. முதல் கவனம் ஆட்டத்திலும், இரண்டாவது மத்தியஸ்தர் மீதும் இருக்கவேண்டும். வெளியேயுள்ள இரசிகர்களின் கூச்சல்களுக்கோ அல்லது நெறிப்படுத்தல்களுக்கோ ஆளாகக் கூடாது.

சந்திப்பு: அனந்த்

## ஐம்பது ஆண்டுகளுக்குமுன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து நிமிடத்தில் முடித்து விட்டு முதலாவதாகக் காட்டுவேன். அநேகமாக எல்லாம் சரியாயிருக்கும். அந்த வருப்பு மேடையில் என்னை ஏற்றிப் புகழ்மாலை சூட்டுவார். இதுவே என் கணித மோகத்தின் ஆரம்பம். இதன் விளைவாகச் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தனியக் கணிதமே படிப்பேன். கணித ஆசிரியரான எனது தந்தையாரிடமிருந்து சந்தேகமான விடயங்களைக் கேட்பேன். கடைசியாக ஆறு வருடம் படிக்க வேண்டிய கணிதத்தை நான் மூன்று ஆண்டுகளில் படித்து முடித்தேன். இதனல் மேல் வகுப்புகளில் மற்றப் பாடங்களுக்குக் கூடிய நேரத்தைச் செலவழிக்கக் கூடியதாயிருந்தது. ஆசிரியர் கிபன் மாற்றலாகிக் கண்டிக்குப் போக இன்னுமொரு சிறந்த ஆசிரியர் கே. ஸி. ஜேகப் (Jacob) எனக்குப் படிப்பித்து உற்சாகம் ஊட்டினர்.

### வாரமொரு தினம் ஆங்கில உச்சரிப்பு

எங்களுடைய கல்லூரி அதிபர் காஷ் (Cash) வாரத்திற்கு ஒரு நாள் எங்களுக்கு ஆங்கில உச்சரிப்புப் படிப்பித்தார். பிழையான உச்சரிப்புக்களை நல்ல வயதிலே எங்களுக்குத் திருத்திச் சொல்லிக் கொடுத்தார். பிற்காலத்தில் இவரையும் இவர் பாரியாரையும் நான் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும்பொழுது அவர்களது பர்மிங்காம் (Birmingham) இல்லத்தில் சந்தித்து அவர்களுடன் இரண்டு நாள் தங்கினேன். இந்தத் தம்பதிகளின் அபிப்பிராயம், 'யாழ்ப்பாணம் போன்ற பட்டினம் இல்லை; தமிழர்போல் நல்லவர்களில்லை' என்பதாகும். காஷ் அதிபராயிருந்தபொழுது மத்திய கல்லூரியில் மொத்தம் நானூற்று இருபத்தைந்து மாணவர்கள். அதிபர் எல்லா மாணவர் வீடுகளுக்கும் போயிருக்கிறார். அநேகமான மாணவர்களின் குடும்பத்தை அவருக்குத் தெரியும்.

### ஏ. ஈ. தம்பர்

ஆசிரியர் ஏ. ஈ. தம்பர் பூதபௌதிகம் கற்பித்தார். சுமாராகப் படிப்பித்தார். ஆனல் பாடத்திற்கு வெளியே பொது அறிவு ஊட்டுவதில் ஆசிரியர் தம்பருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. ஒருமுறை நான் அவரைக் கேட்டேன், "என்ன சேர். கொழும்புக் கல்லூரிகளிலிருந்து கேம்பிறிட்ஜ் ஜூனியர், சீனியர் சோதனைகளில் ஏழு எட்டு டிஸ்ரிங்ஷன் எடுக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து நாங்கள் இரண்டிற்கு மேல் டிஸ்ரிங்ஷன் எடுப்பதில்லை. இதற்கு என்ன பரிகாரம்' என்று. அதற்கு அவர், 'கவலைப்படவேண்டாம்; உங்கள் எல்லோருக்கும் மூளையைச் சரியாக உபயோகிப்பதற்குத் தக்க முறையிலே எந்தப் பாடத்திலும் முக்கிய அம்சங்களை மாத்திரம் இங்கே படிப்பிக்கிறோம். இதனல் மிகுதிப் பாடத்தை உங்கள் மூளையைப் பாவித்துப் படிக்கிறீர்கள். இப்பொழுது அவ்வளவு சித்தி கிடையாவிட்டாலும் மேல்படிப்பில் நீங்கள் எல்லோரும் நல்லாக வருவீர்கள் என்று சொன்னர். அவர் சொன்னது சரியே. கல்லூரிப்படிப்பு முடிந்து பல்கலைக்கழகம் சென்றதும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மாணவர்கள் மிகவும் முன்னுக்கு வந்தார்கள்.

### தேசிய உடையில் தம்பரும் கலைப்புலவரும்

ஆசிரியர் தம்பரையும் ஆசிரியர் நவரத்தினத்தையும் (பிற்காலத்தில் கலைப்புலவரானவர் பின்னேரங்களில் வண்ணை மேற்கில் காணலாம். அக்காலத்தில் யோகசுவாமி வண்ணார் பண்ணையில் வசித்தார். இவர்கள் சுவாமியை அடிக்கடி தரிசித்தவர்கள். ஆசிரியர் நவரத்தினம் மத்திய கல்லூரியில் வர்த்தக வகுப்பொன்று நடாத்தினர். திரு. தம்பரும் கலைப்புலவரும் பெரிய தேசபக்தர்கள். வேட்டி தான் கட்டுவார்கள். அக்காலத்தில் அனேகமான ஆசிரியர்கள் கால்சட்டை கோட் அணிந்து கல்லூரிக்கு வருவார்கள். ஆசிரியர் தம்பரும் கலைப்புலவரும் வேட்டியுடன் வருவதைப் பார்த்து மத்திய கல்லூரியின் வேறு பல ஆசிரியர்களும் வேட்டி அணியத் தொடங்கினர்கள். இவர்களின் நடைமுறையைப் பார்த்த மாணவர்களுக்குத் தேசபக்தியென்று ஒன்றிருக்கிறதென்று தெரிந்தது.

எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். எங்கள் வகுப்பறைக்கு அரைச்சுவர். யாரும் கல்லூரிக்கு வந்தால் நாங்கள் வகுப்பிலிருந்து திரும்பிப் பார்த்தால் அவர்களைத் தெரியும். ஒரு நாள் பிராமாணக் கொடுக்குடனும், நீளமான மூடிய கோட்டுடனும் ஒருவர் வருவதைக் கவனித்தோம். யார் என்று வினவியதும் இவர்தான் எம். ஏ. முத்துக்குமாரு என்றார்கள். இவர் மேல்வகுப்புகளுக்கு ஆங்கிலம் படிப்பித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் நானும் மேல் வகுப்புக்கு வந்ததும், இவரிடம் படித்தேன். இவரிடம் ஷேக்ஸ்பியர் படிக்கிறதென்றால் அது ஒரு தனி இன்பம். வாழ்க்கையிலிருந்து பல உதாரணங்கள் கூறுவார். இவர் எனது சிறிய தந்தையார் சரவணமுத்து எம். ஏ. எம். எஸ். ஸி. யுடன் கல்கத்தாவில் படித்தவர். அடிக்கடி கல்கத்தா வாழ்க்கை பற்றியும் பல பயன்தரக்கூடிய அனுபவங்களையும் எடுத்துக் கூறுவார். ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் இவரை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் காணலாம். சனிகாலை கிளிநொச்சி போய் தன்னுடைய விவசாயத்தைப் பார்த்து, மற்றப் பொதுமக்களுக்குத் தேவையான அலுவல்களையும் பார்த்து ஞாயிறு இரவு திரும்பி வருவார். குடாநாட்டுக்கு வெளியே விவசாயம் செய்யவேண்டுமென்பது அவரது திடமான நம்பிக்கை. இவர் விவசாய முன்னேற்றத்திற்கு ஒரு முன்னேடியாக விளங்கினர்.

எதிர்காலத்தில் வரப்போகும் மாறுதல்களை ஓரளவு ஊகித்த கல்லூரி அதிபர், மேல்வகுப்பில் முன்னர்பிரத்தியேகமாக இருந்து சமய பாடத்தை அதாவது கிறிஸ்தவ பாடத்தை மாற்றி, மற்றச் சமயங்களையும் சேர்த்துக்கொண்டார். இந்து சமயத்திற்குக் கொடுத்த வகுப்பில் என்னை ஒருகட்டுரை வாசிக்கச்சொன்னர் அதிபர். எங்கள் குடும்பம் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் ஒரு சாதாரண மாணவனுக்குத் தெரிந்த அறிவிலும் பார்க்க எனக்குச் சிறிதளவாயினும் இராமகிருஷ்ணரைப் பற்றி அதிகமாகத் தெரியும். ரோமயின் ரோலண்ட் (Romain-Rolland) இராமகிருஷ்ணரைப் பற்றி எழுதிய நூலை வாசித்து ஒருகட்டுரை எழுதி வகுப்பில் வாசித்தேன். இராமகிருஷ்ண

(20-ம் பக்கம்பார்க்க)

# மகாதேவா தாம்போதி!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது. கடல் நீரின் அளவும், அதன் உவர்த்தன்மையும் குறைந்து விடும் எனக் காரணம் காட்டப்பட்டது ஆனால் 1975-ல் இலங்கை மத்திய பொறியியல் ஆலோசனைச் சபை ஒரு அளவீடு மேற்கொண்டு, அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது என அறிக்கை சமர்ப்பித்தது.

பின்னர் இவ்வழி இணைக்கப்பட்டால் பாதுகாப்புச் சீர்குலையும் என்ற காரணமும் கூறப்பட்டது. இத்தடைகள் யாவும் வடபகுதி மக்களுடைய மனதில் பெரும் ஆற்றாமையை ஏற்படுத்திவிட்டன.

## அங்கீகாரம்

1981ம் ஆண்டு பிரதம மந்திரி திரு. பிரேமதாசா யாழ்ப்பாணத்துக்கு ஐந்துநாள் உத்தியோக பூர்வமான விஜயம் மேற்கொண்ட சமயம் யாழ்ப்பாணச் செயலகத்தில் ஒரு பெரிய இணைப்புக் கூட்டம் நடந்தது. வடபகுதிப்பாராளுமன்ற உறுப்பினர்கள்யாவரும் ஏகோபித்த குரலில் மகாதேவா தாம்போதி இணைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். பிரதமர் உடனடியாக இவ்வேலையை ஆரம்பிக்கலாம் என அக்கூட்டத்திலேயே உத்தரவு வழங்கினர். அத்துடன் தாம்போதியையும் சென்று பார்வையிட்டார். பிரதமரது உத்தரவு, பொதுமக்கள் அதிகாரிகள் மத்தியில் ஒரு பெரும் உற்சாகத்தைத் தோற்றுவித்தது.

## நிதி ஒதுக்கீடு

வடபகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் முழு மனதோடு, தத்தமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து 74லட்சம் ரூபாய் ஒதுக்கினர்கள். பிரதேச அபிவிருத்தி அமைச்சும் தன் பொது நிதியிலிருந்து 10 லட்சம் ஒதுக்கி உதவியது.

## வேலை அமைப்பு

வடபகுதியில்பல்வேறு இடங்களிலிருந்து ஒப்பந்தகாரர் கண்டகல்லுகளை கொண்டு வந்துசேர்க்கின்றனர். யாழ்ப்பாணத்தில் வேம்பிராய்என்னுமிடத்திலும், முழங்காவிலிலும் இருக்கும் நெடுஞ்சாலைத் திணைக்களத்துக்குச் சொந்தமான கல்லுடைக்கும் குதங்களிலிருந்தும் கண்டகல்லு, சல்லிக்கல்லு முதலியன வந்து சேர்கின்றன. கடல் ஏரியில் கேரதீவுத்துறையின் அருகில் தான் மிக ஆழமான பகுதி உண்டு ஆகக்கூடிய ஆழம் 11 அடியாகும். சராசரி 3½அடி தொடக்கம் 5அடி வரை நீர் ஆழமாய் உள்ளது. ஆகவே கேரதீவுத்துறைப்பக்கம் பாலம் அமையப்போகின்றது. எனவே பாதை அமைக்கும்பணி சங்குப்பிட்டியில் ஆரம்பமாகியுள்ளது.

கண்டகல்லு, சல்லிக்கல்லு ஆகியவற்றை லொறிமூலம் பரந்தன் பூநகரிப் பாதையால் கொண்டுவந்து பூநகரி பரம்பன்கிராய் என்னுமிடத்தில் குவிக்கப்படுகின்றன. பின்னர் அவை வேலைஸ்தலத்துக்குஎடுத்துச்செல்லப்படுகின்றன.

கொழும்பு, அனுராதபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து சிமெந்திலான பாரிய குழாய்கள் கொண்டு வரப்பட்டு அவற்றின் மேல் கண்டகல்லு பரவப்பட்டு வீதி அமைக்கப்பட்டுள்ளது. ஒருநிரையில் 6 குழாய்கள் பதிக்கப்பட்டன. 400 திறந்த வாசல்களால் கடல்நீர் தடையின்றி ஓடுகின்றது.

வவனியாவிலிருந்து அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன் அவர்களது முயற்சியால் கருங்கல்லு இவ்வேலைக்கு வருவிக்கப்படுகின்றது

1981ம் ஆண்டு ஆரம்பமான இவ்வேலை யாருமே எதிர்பாராதவண்ணம் துரிதகதியில் நடந்தேறி, பரந்து கிடக்கும் ஏரியில் 2500 அடி தூரம் வரை வீதி அமைக்கப்பட்டுள்ளது, மகாதேவா தாம்போதி வேலைகள் ஒருகனவோ என்று எண்ணியவர்கள் இன்று அது முற்றுப்பெறும் நிலையை அடைந்திருப்பதைக்கண்டு வியப்பும் பூரிப்பும் அடைந்துள்ளனர் எனலாம்.

## சிரமதானப் பணி

கோடிக்கணக்கான பணத்தைச்செலவுசெய்து நிறைவேற்றப்போகும் இப்பாரியதிட்டத்தில் பொதுமக்களையும் பங்கு பெறச்செய்ய வேண்டுமென்ற ஓர் யோசனை உருவாயிற்று. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அப்பிரிவுப் சகல கிராம அபிவிருத்திமன்றங்களையும், உழவுயந்திரச் சொந்தக்காரர்களையும் அழைத்து ஓர் ஆலோசனைக் கூட்டம் நடாத்தப்பட்டது. இப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலரும் இதில்உதவப்போவதாக வெகு உற்சாகத்துடன் செயல்பட்டனர். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொண்டர்களைதெரிவு செய்து அனுப்பிவைத்தன. உழவுயந்திரச் சொந்தக்காரர்கள் தமது வண்டிகளை இலவசமாகத்தந்துதவினர். இவர்கள் முன்னோடியாக நின்று ஆரம்பித்த சிரமதானப் பணியில் முதல் 2500 அடிகள் பாதை அமைக்கப்பட்டது. தங்கள் செலவுகளை இச்சங்கங்கள் பொறுப்பேற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பின்னர் சிரமதானப்பணிகளை ஒரு சீரான முறையில் நடைமுறைப் படுத்தவேண்டி "சிரமதான அமைப்புக்குழு" ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இருக்கும் பொறியியலாளர் திரு. இராமகிருஷ்ணன் தலைமையில் இக்குழு இன்றுவரை மகத்தானபணிஆற்றியுள்ளது சிரமதான அமைப்புக்குழுவின் செயலாளராக பூநகரி நெடுஞ்சாலைத் திணைக்களத்தில் பணிபுரியும் திரு. சதா இராமகிருஷ்ணன் உற்சாகத்துடன் பணியாற்றி, சிரமதானம் என்ற சொல்லுக்கே புது வடிவம் கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளைச்சேர்ந்த சாரணச்சிறுவர்கள் இரு பிரிவுகளாகப் பூநகரியில் தங்கி இருந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

பரமன் கிராய்ப் பகுதியில் குவித்துவைத்திருக்கும் கல்லுகளை உழவுயந்திர வண்டிகளில் ஏற்றி மறுபடி சங்குப்பிட்டித் துறையில் வேலை நடைபெறுமிடத்தில் பறிப்பதே இவர்களது பணியாகும். சாரணச் சிறுவர்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்ட சமயம், இரு வாரகாலத்துக்கு மூன்றுநேர உணவுக்குத் தேவையான பொருட்களைப் பூநகரிப் பகுதிப் பொதுமக்களும் வர்த்தகர்களும் மனமுவந்து வழங்கினர்.

தங்கள் உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வரும்பொருட்டுத் தாம்போதியைக் கடக்கும் சமயம் இயந்திரப்பாதைக்காக மணித்தியாலக்கணக்கில் தவம்கிடக்கும் கஷ்டத்துக்கு ஒருவிடிவுவரப் போகின்றது என்ற உற்சாகத்துடன் அவர்கள் இச்சிரமதானப் பணிக்கு உதவினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல பலநோக்குக்கூட்டுறவுச்சங்க நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், கிராமோதயசபைகள், முல்லைத்தீவுத் தேசிய இளைஞர் சேவை மன்றம், யாழ் தேசிய இளைஞர்சேவைமன்றம், கிறிஸ்தவ இளைஞர் மன்றம், இலங்கை வங்கி ஊழியர்கள் ஆகியோரின் சிரமதானப்பணியில் காட்டிய அக்கறையும் உற்சாகமும் சொல்லில் அடங்காதவையாகும்.

யாழ். அபிவிருத்தி சபையின் முன்னைநாள் தலைவர் திரு. க. நடராஜா, யாழ்ப்பாணம் முன்னைநாள் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், மன்னார் முன்னைநாள் பா. உ. திரு பி. எஸ். சூசைதாசன், யாழ். செயலகத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் ஆகியோர் இதில் முக்கிய கவனமும் பங்கும் எடுத்துக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. மன்னாரிலிருந்து அரசாங்க அதிபர் தலைமையில் அதிகாரிகள் ஆங்குள்ள ப. நோ. கூ. ச. ஊழியர்கள் சகிதம் வருகை புரிந்து சிரமதானப் பணிபுரிந்ததும் இவ்வேலைகளுக்கு மேலும் உற்சாகமூட்டியதெனலாம்.

## எதிர்கால பலாபலன்கள்

மகாதேவா தாம்போதி பூரணப்படுத்தப்பட்டதும் கிடைக்கும் பயன்கள் பின்வருமாறு:-

1. யாழ்ப்பாணத்திலிருந்து பிற இடங்களுக்குச் செல்லும் தூரமும் நேரமும் கணிசமாகக் குறைய வாய்ப்புண்டு.
   - (அ) யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் தற்சமயம் ஆனையிறவு வவனியா மூலம் 142 மைல் தூரமாகும். அது 70மைல்களாகக் குறையும்.
   - (ஆ) யாழ்ப்பாணத்திலிருந்து வவனிக்குளம் 72 மைல் தூரமாகும். அது 52 மைல்களாகக் குறையும்.
   - (இ) யாழ்ப்பாணத்திலிருந்து தெண்ணியன்குளம் 80 மைல் தூரமாகும். அது 45 மைல்களாகக் குறையும்.
   - (உ) யாழ்ப்பாணத்திலிருந்துபரந்தன் ஊடாகப் பூநகரி 55 மைல் தூரமாகும். அது 21 மைல்களாகக் குறையும்.

இவையாவும் குடியேற்றத்திட்டங்கள் அமைந்த விவசாயக் கிராமங்கள் என்பது குறிப்பிடற்பாலது.

2. போக்குவரத்துச் சீராக அமையும்போது பின்வரும் விவசாய நிலக்களங்கள் அபிவிருத்தி அடையும் பெருவாய்ப்பு உண்டு:
   - 26,000 ஏக்கர் நெல் வயல்கள்.
   - 7,500 ஏக்கர் உப உணவு உற்பத்தி நிலங்கள்.
   - 9,000 ஏக்கர் தென்னந் தோட்டங்கள்.

மிகவும் பின்தங்கிய பகுதியான பூநகரியில் முழங்காவில் வளர்ந்து வரும் குடியேற்றக் கிராமமாகும். இங்கு குழாய்க்கிணறு அமைத்து அந்நீரின் மூலம் உப உணவுப் பொருட்கள் மிகப் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு மிக வெற்றிகரமான முறையில் இத்திட்டம் செயல்படுகின்றது.

இங்குள்ள உற்பத்திப் பொருட்கள் நூற்றுக்கு 90 சதவிகிதமும் யாழ் நகரச் சந்தைகளையே நாடி வருகின்றன எதிர் காலத்தில் ஓர் இடையூறுமின்றி விளைவிடபோர் விளைவின் முழுப் பயனையும் அடையும் பேறினைப் பெறுவர் என்பது திண்ணம்.

கவுதாரிமுனை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் பெருமளவில் தென்னைச்செய்கை உண்டு தேங்காய், கிடுகு, மட்டை போன்ற தெங்குப்பொருட்கள் யாவும் இன்றுவரை சங்குப்பிட்டியில் பெருவள்ளங்களில் கொழும்புத்துறை ஊடாகயாழ்ப்பாணத்தைஅடைகின்றன. ஏற்றப்பட்டு பாதை சீராகுமேயானால் இச்சிரமம் தன்னாலேயே நீங்கும்.

பூநகரி கிராஞ்சி என்னும் இடத்தில் கடற்கரையை அண்மித்த இடங்களில் அரசகாணிகள் உண்டு. இந்நிலத்தின்மண் தென்னைச் செய்கைக்கு உகந்ததாகும். ஏற்கெனவே இங்கு ஒரு குடியேற்றத்திட்டம் அமைந்துள்ளது. மேலும் தென்னைச் செய்கைக்கெனக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்க இடமுண்டு. தாம்போதிப் பணி நிறைவேறியதும் இத்திட்டங்கள் நல்ல முறையில் செயற்பட வாய்ப்புண்டு.

மேலும், யாழ். குடா நாட்டில் நாளுக்கு நாள் மக்கள் தொகை கூடி இடப்பிரச்னை அதிகமாகின்றது. குடா நாட்டை விட்டு வெளியேறி பூநகரி, கிராஞ்சி, முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு மக்களைக் குடியேறும்படி தற்சமயம் நிர்ப்பந்திக்க முடியாமல் இருக்கின்றது. காணிப்பங்கீடு செய்தாலும் போக்குவரத்துச் சிரமங்களை எண்ணி அவற்றைக் கைவிடுகின்றனர். நேரான, சீரான பாதை அமையப்போவதால் குடியேற்றத் திட்டங்களில் மக்களுக்கு அக்கறை தோன்றும் என எதிர்பார்க்கலாம்.

மேலும் இப்பொழுது குடா நாட்டில் மூலைமுடுக்கெல்லாம் கல்வீடுகளாக உருவெடுக்கின்றன. வீடுகட்டப்பயன்படும் வெள்ளைமணல் தற்சமயம் மண்கும்பான், அரியாலை போன்ற இடங்களில் எடுக்கின்றனர். கடல் அரிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் இப்பகுதிகளில் மணல் எடுப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.


கவுதாரி முனையில் மண்ணித்தலைவரை ஒரே சீராக நாம் கண்டு வியக்கத்தக்க அளவு மண் மலைகளாகப் பரந்துகாணப்படுகின்றது. மகாதேவா தாம்போதி பூரணப் படுத்தப்பட்டு, பூநகரி கவுதாரி முனை வீதியும் சீராக்கப்பட்டால் இம்மணல் பிறஇடங்களுக்கு எடுத்துச் செல்ல வாய்ப்புண்டு. அத்துடன் இம் மண்பிட்டிகள் அமைந்துள்ள காணிச் சொந்தக்காரர்களுக்கு நினைக்கமுடியாத அளவு வருமானமும் காத்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

## அமைச்சின் நிதிஒதுக்கீடு

1983 ம் ஆண்டு நெடுஞ்சாலை அமைச்சு இப்பாரிய வேலைக்கென முதற்கட்டமாக 30 லட்சருபாய் ஒதுக்கியுள்ளது. இப்பணத்தைக் கொண்டு பாலவேலைகள் உடன் ஆரம்பமாகலாம் என எதிரபார்க்கப்படுகின்றது.

## அலுவலகம்

மகாதேவா தாம்போதி நிர்மாண வேலைக்கெனத்தனியாக ஒரு அலுவலகம், பூநகரி உதவி அரசாங்க அலுவலக வளவில் உள்ள ஒரு கட்டிடத்தில் ஆரம்பித்து, பொறியியலாளர் திரு இராமகிருஷ்ணன் தலைமையில் இயங்கி வருகின்றது




## இலக்கிய உலகம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் உண்டு; கேலிக்கிடமாவதும் உண்டு. ''எனது பழைய எழுத்துக்கள் சிலவற்றை இப்போது நானே படித்துப்பார்த்தால் 'நாமா இப்படி எழுதினோம்'? என்று தோன்றுகிறது.

இப்படித் தனது ''எண்ணங்கள் ஆயிரம்' என்ற புத்தகத்தின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார் மறைந்த கவிஞர் கண்ணதாசன். அருமையான இந்த அனுபவம் சில எழுத்தாளர்களுக்கு ஏற்படுவதுண்டு. அதேநேரத்தில் 'சீ' இவ்வளவு மட்டமாகவா எழுதுகிறோம், என்று சிலருக்குப் பழைய எழுத்துக்களை வாசிக்கும்போதுஎண்ணத்தோன்றும்

## மொழிவாணன்

அலுக்காமல், சலிக்காமல் நமது பத்திரிகைகளில் எழுதித்தள்ளிக் கொண்டுருப்பவர் மொழிவாணன். மறைந்த 'கல்கண்டு' தமிழ்வாணனைக் குருவாகக் கொண்டுருக்கும் இவர், அவரைப் போலக் கைவைக்காத துறையில்லை! சினிமா, கதைகள், துப்பறியும் நாவல், கைரேகை, அதிர்ஷ்ட எண்சாஸ்திரம் என்ற நியூமராலஜி போன்ற பல துறைகளில் எழுதுகிறார். அடிக்கடி புத்தகங்களை வெளியிடுகிறார். தமிழ்வாணன்என்ற மாத சஞ்சிகையைச் சிலகாலம் நடாத்தினார். கடைசியாக வெளியிட்ட நூல்; துர்க்கா. யதார்த்தம், முற்போக்கு, நற்போக்கு எதிலுமே இவருக்கு நம்பிக்கை இல்லை! பரிசுப் போட்டிகளில் இவர் கலந்து கொள்வதில்லை.

''ஐந்துபேர்கள் கதையைப் படித்துப் பரிசளிப்பது எப்படிப் பொருந்தும்? அவர்களின் ரசனையை ஐந்து ஆயிரம் வாசகர்கள் ரசனையாகக் கருதமுடியுமா?'' என்று கூறும் 'மொழி'.

இலங்கையில் புத்தகம் போட்டு வெற்றிகண்ட எழுத்தாளராகத் திகழ்கிறார்.


பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

தேவை

40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்

30-12-83காலை9-00மணிக்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

பாதுகாப்புச்சேவையில் கடமையாற்றியவர்களுக்கும், அண்மைக் கலவரத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

லீடன் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(10734)

கலர் புகைப்படங்களை குறைந்த செலவில் குறுகிய காலத்தில்

PROCESSING AND PRINTING

செய்து நயமடைய நாடுங்கள்!

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

10310

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
ஜெமினி-சரோஜாதேவி
ஸ்ரீதரின்
கல்யாண பரிசு

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

ஹரன் (யாழ் நகர்)
இன்று முதல்
மகத்தான நத்தார் பரிசு
அன்னை வேளாங்கன்னி
தமிழகத்தில் முன்னணி
நட்சத்திரங்கள் இணைந்து
நடித்த வெற்றிச்சித்திரம்

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

றியோ (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
Esape to
Athena

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-சௌகார்ஜானகி
பார் மகளே பார்

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3-வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
(கலர்)
இசை: இளையராஜா

சினிமா ரசிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

2 Days Only

Rajah JAFFNA
Daily 10-30 2-00 4-30
6-30 and 8-30
BATTLE CREEK BRAWL

27 முதல்
10-30, 2-30, 6-00
கமலஹாசன் - ரதி
உல்லாசப்பறவைகள்

பல இடைவெளிக்குப்
பின் மிக விரைவில்
புதுவருடத்தைக்
கொண்டாடத்
திரையிடவிருக்கும்
சிவாஜி-சௌகார் ஜானகி
பாபு (புதிய பிரதி)

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும்பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
சண்டையில் சாவு எந்
நேரமும் வரமுடியும்

Regal (Jaffna)
Grand opening today
Daily 10-30 a.m. 2-15,
4-45, 7-00 p.m. only
LEE MARVIN...in
THE BIG
RED ONE
Action- Packed- Adventure
(A war movie for all age)
?
பயணங்கள் முடிவதில்லை

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

வெலிலி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
குழந்தையும்
தெய்வமும்

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
கணவன்
(புதிய பிரதி)

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அனைவருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
மாதர்களுக்கான
7-வது கடைசி வாரம்
ஊரும் உறவும்
வண்ண ஓவியம்

SCIENCE CENTRE
KARAVEDDY
புதிய வகுப்புகள்: தரம் - 9, தரம் - 10
ஆரம்பம்: 28-12-1983
(மாலை 2-30க்கு)
விடுதி வசதி உண்டு. 10710

Modern Education Centre
KARAVEDDY
புதிய வகுப்புக்கள்
4 ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம் தரம்
G. C. E (A/L) Arts and Commerce (84)
G. C. E. (A/L) Arts and Commerce (85)
ஆரம்பம்: 28-12-1983 (மாலை 2-30-க்கு)
விடுதி வசதி உண்டு. (10711)

T. C. C. குளியலறைத் தளக்கற்களின்
T. C. C BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்.
றெருசோமாபிள் நிலம்
அமைப்பவர்கள்,
SPECIALIST IN TERRAZZO FLOORING
த றெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம்:- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர், யாழ்ப்பாணம். (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர
பல்கலைக்கழகங்களின்
(வெளிநிலை)விரிவுரைகள் -1984/85
புதிய மாணவர்களை அனுமதித்தல்
இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பாடநெறி
களான கலைமாணி, விஞ்ஞானமாணி, சட்டமாணி,
வர்த்தகமாணி ஆகிய பாடநெறிகளுக்கான
தமிழ்மொழிமூல விரிவுரைகள்
01-01-1984ல் ஆரம்பமாகின்றன
க. பொ. த. உயர் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பப்படிவமும்விபரத்திரட்டு ரூ 5/- காசுக் கட்டளையாக/நேரில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி: 01-01-1984
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்
1. எலக்றிக்கல் இன்ஜினியறிங்
6 மாத பயிற்சிநெறி
க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி
கட்டணம் 850/- (முழுப் பயிற்சி நெறிக்கும்)
2. எலக்றிக்கல் வயறிங்
1 மாத பயிற்சி
க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி
கட்டணம் 550/- (முழுப்பயிற்சி நெறிக்கும்)
3. மோட்டோர் றிவைன்டிங்
3 மாத பயிற்சி நெறி
கட்டணம் 600/- (முழுப் பயிற்சி நெறிக்கும்)
ஆரம்பம் 1-1-1984
விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

சி. நா. தமிழ்மகன் பீ. ஏ.
அவர்களிடம்
[கொக்குவில் நந்தகுமார் ஆசிரியர்]
கல்வி கற்க வாருங்கள்
முன்நாள்களில்:
[1] யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுவலக நிர்வாகப் பகுதிநேர விரிவுரையாளரும், [2] கொக்குவில் இந்துக்கல்லூரி, [3] கல்முனை/நிந்தவூர் அரசினர் முஸ்லீம் மகளிர் வித்தியாலயம் [4] மன்னார்/வங்காலை மகாவித்தியாலயம் [5] மன்னார்/அடம்பன் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியருமான
அநுபவ ஆற்றல் ஆராய்ச்சி
நிறைந்த ஆசிரியர்

| க. பொ. த. உயர்தர வகுப்பு (11ஆம் 12ம் வகுப்புகள்) | க. பொ. த சதாரண வகுப்பு (9ஆம் 10ஆம் வகுப்புகள்) |
|---|---|
| 1. பொருளியல் | 1. வர்த்தகமும் கணக்கியலும் |
| 2. அரசறிவியல் | 2. சமூகக்கல்வி |
| 3. தமிழ் | 3. தமிழ் |

1984 தை மாதம் தொடக்கம் வகுப்புகள் நடைபெறும்.
அண்மைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதாரச் சிரமிகுள் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு இலவச வகுப்புகள் நடத்தப்படும்.
தொடர்பு கொள்ளும் முகவரி:
சி. நா. தமிழ்மகன் பீ. ஏ.
33, கலட்டுமுந்தன் ஒழுங்கை, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
10527

யாழ் மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகள்
ஆகியவற்றை உத்தரவாதத்துடன் சிறந்த முறையில்
உங்கள் இல்லத்தில் அல்லது எங்கள் வேலைத்தலத்திற்கு
கொண்டுசென்று கைதேர்ந்த வல்லுனர்களால்
பழுதுபார்ப்பதற்கும்
குளிர்சாதனப்பெட்டி பழுதுபார்ப்பதற்குத் தேவையான
சிறந்த உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவு
பெற்றுக்கொள்வதற்கும்
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்:
லீலா என்ஜினியரிங் வேக்ஸ்
இல. 147, கே. கே. எஸ் வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தொலைபேசி: மாவிட்டபுரம்: 3
தலைமை அலுவலகம்;
இல. 400, கே சிறில் சி. பெரேரா மாவத்தை,
கொழும்பு 13. தொலைபேசி: 25933
(10632)

தொழில் உல்லாசம் சமயம்
சகல வகையான வெளிநாட்டுப்பயணங்களுக்கு
நாடுங்கள்
PYRAMID AIR SERVICES
LTD.
2nd Floor, Munsoor Building, Main Street Colombo II
(காண் மணிக்கூட்டுக் கருகாமையில்)
அனுபவம் வாய்ந்த ஆலோசனை
சகாயவிலையில் எல்லா நாடுகளுக்கும்
பயணச் சீட்டுக்கள்
பயணக் காசோலைகள்.
தொல்லையற்ற; நிம்மதியான பயணத்திற்கு
தொடர்புகொள்க:
தொலைபேசி: 549154, 549806
10577

## கிறிஸ்மஸ் பண்டிகையை

# "வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்துக்கொண்டாடவும்"

## அங்கிலிக்கன் திருச்சபை பிரதமகுரு

(அரியாலை)

''தற்கால சூழ்நிலையில் கிறிஸ்மஸ் கொண்டாடலாமா? என்று சிலர் கேட்கலாம். ஆனால் அந்தகார உலகத்திற்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாக வந்த கிறிஸ்து பெருமானின் பிறப்பை ஒரு கிறிஸ்தவன் கொண்டாடாமல் இருக்கமுடியாது. அன்பின் சொரூபியாக சமாதான பிரபுவாக வந்த அவரின் பிறப்பை இந்தநாட்களில் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது. ஆனால் உடையலங்காரம் பெருவிருந்துகள், கூத்துகள் என்பவற்றைக் கொண்டாடுவதைக் குறைக்கவேண்டும்.''

இவ்வாறு நல்லூர் பரிசுத்த யாக்கோபு தேவாலய பிரதம குருவான அருட்திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- ''மற்றவர்களுக்கு கொடுப்பதிலும், மற்றவர்களைச் சந்தோசப்படுத்துவதிலுமே கிறிஸ்மஸ் ஆசீர்வாதம் அடங்கியிருக்கிறது. நமது வாழ்க்கையைப் பரிசோதித்து அதில் கிறிஸ்தவ அழைப்புக்கு விரோதமான யாவற்றையும் அகற்றத் தீர்மானித்து கிறிஸ்மஸ் தினத்தன்று ஆலயத்தில் ஆராதித்து நமது இருதயத்தில் கடவுளை இருக்கச் செய்வதே கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் சிறப்பம்சமாகும்.''

(கி)

# மரண அறிவித்தல்

## து. நாகேஸ்வரி

துரைராசா நாகேஸ்வரி காலமானார். இவர் துரைராசா (துரை அன் கோ, யாழ்ப்பாணம்) வின் அன்பு மனைவியும், தயாநந்தியின் அருமைத் தாயாரும், ஐ. கார்த்திகேசு (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், வேலணை) மகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 232, நாவலர் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து 25-12-83 ஞாயிறு மாலை 4 மணிக்கு இறுதிக் கிரியைக்காக வில்லூன்றி மையானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

232, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (10774)

# மரண அறிவித்தல்

## V. R. செல்வராசா

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன முகாமையாளரும், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியை இன்பமணியின் கணவரும், சுதாகரன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), தபித்தா (சட்டக் கல்லூரி), சுதர்மினி, பாமினியின் தகப்பனுமான விக்டர் இராசையா செல்வராசா காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பருத்தித்துறையில் இன்று ஞாயிறு 25-12-83 பிற்பகல் நாலு மணிக்கு நடைபெறும்.

மணிகொட்
கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (10773)

# மரண அறிவித்தல்

## திருமதி. அக்னேசகன்னி சந்தியாப்பிள்ளை

**தோற்றம்: 17-8-1941 மறைவு: 15-12-1983**

திருமதி அக்னேசகன்னி சந்தியாப்பிள்ளை அவர்கள் 15-12-83ல் லண்டனில் காலமானார். இவர். டாக்டர் சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், மனுவேற்பிள்ளை றெஜீனா தம்பதிகளின் மூத்த செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற டொமிங்கோ, மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அல்போன்ஸ் அரியநாயகம் (பிரான்ஸ்), அன்ரனி [பிரான்ஸ்], அலோசியஸ், அன்னராணி [சட்டத்தரணி], அமிர்தநாதர் றூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இராக்கினியம்மா ஞானப்பிரகாசத்தின் அன்பு மச்சாளும், செபமாலையம்மா, அருளானந்தம், பற்றிமா, ஜோர்ஜ் (கடற்றொழில் பரிசோதகர், மட்டக்களப்பு, அன்ரனி மரியதாஸ் (பனம்பொருள் உ. வி. கூ. சங்கம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு அண்ணியும், பாக்கியராணி (பிரான்ஸ்), மாகிரேட் (பிரான்ஸ்), வசந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார், அன்னாரின் பூதவுடல் இவரது இல்லத்தில் இருந்து 26-12-83 நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் புனித. சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

15/2, மத்திய கிழக்கு வீதி.
றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். (10765)

# 11 தொகுதிக்கு வேட்புமனு

(கொழும்பு)

வடமாகாணத்தில்காலியாகியுள்ள 11 தொகுதிகளுக்கும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் தினம் ஜனவரி 19-ம் திகதியென ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னேரியாத் தொகுதிக்கும் இத்தினத்திலேயே வேட்பு மனு தாக்கல் செய்யப்படும்.

## ஐம்பது!

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

ரைப்பற்றிப் பல தேசங்களில் பிற்காலத்தில் சொற்பொழிவாற்றினேன். இரதல்லாவற்றுக்கும் அத்திபாரம் மத்திய கல்லூரியில் பதினைந்தாம் வயதில் நான் வாசித்த கட்டுரைதான்.

### நமது கடல்களில் அரிசிக் கப்பல்கள்

எனது வீடு வண்ணார் பண்ணையில் ஆதலால் மதியான உணவு கல்லூரிக்கு அணித்தே ஏதாவது ஒரு போசனசாலையில் சாப்பிட வேண்டியிருந்தது. நான் பிற நாட்டிற்குப் போவதற்கு முன் சைவச்சாப்பாடு மாத்திரம் தான் உட்கொண்டேன். இதற்காக ஒரு சைவச்சாப்பாட்டுக்கடையைத் தேட நேர்ந்தது. கடைசியில் ஒரு சைவ போசனசாலை கிடைத்தது. இது பாங்ஷால் வீதிக்கும் (Bankshall Street) கடற்கரை தெருவுக்கும் (Beach Road) நடுவே இருந்தது. இந்த இடத்திலே பல நெல், அரிசிக்கிட்டங்கிகள் இருந்தன. அரிசி மூடைகள் ஏற்றுவது, இறக்குவது, கணக்குப் பார்ப்பது எல்லாம் என் கவனத்திற்கு வந்தன. சாப்பாட்டுக்குப்பிறகு அரைமணி நேரமிருந்ததால் இவற்றையெல்லாம் கவனிக்கக்கூடியதாயிருந்தது. கிட்டங்கி முதலாளிமாருடனும் கணக்குப் பிள்ளைகளுடனும் உரையாடினேன். இந்த அனுபவம். பிற்காலத்தில் அரசாங்க சேவையில் உணவுப்பொருள்கள் களஞ்சியங்களை [Stores] மேற்பார்வை செய்வதற்கு உதவியது. கிட்டங்கிக் குந்திலிருந்து பார்த்தால் சில காலங்களில் மண்டைதீவுக்கு அப்பால் கடலிலே பல உருவங்கள் தெரியும். இதுபற்றி விசாரித்தபொழுது இவையெல்லாம் றங்கூனிலிருந்து அரிசியை எங்கள் மாலுமிகளே கொண்டுவந்த சிறு கப்பல்கள் என்று தெரியவந்தது கப்பல் ஓட்டிய தமிழனின் பெருமையை பதிது வயதிலே நான் உணர்ந்தேன்.

### இடைவெளியை நிரப்பவேண்டும்

அக்காலத்துக் கல்லூரிகளில் மத்திய கல்லூரி பலவிதத்திலும் ஒரு சிறந்த கல்லூரியாக விளங்கிற்று நல்ல ஆசிரியர்கள் இருந்தார்கள். கல்வி புகட்டியதுடன் மட்டும் விடாமல் மாணவர் எதிர் காலத்திற்கு அவர்கள் உற்சாகம் அளித்தார்கள்; பொதுஅறிவு புகட்டினார்கள். நாட்களும் அடக்கமான மாணவர்களாக இருந்தோம். ஆசிரியர்களும் மாணவர்கள் மரியாதை கொடுக்ககூடிய முறையில் கல்வி கற்றுக்கொடுத்தார்கள்; வாழ்ந்தார்கள். பழைய கல்வி முறையையும் புதுக்கல்வி முறையையும் பார்க்குமிடத்து அக்காலத்தில் படித்துக்கொண்டு போகும் பொழுது பரீட்சைகள்வந்தன. அவை ஒரு விதத்தில் தேவையாயிருந்தன. ஆனால் இப்பொழுதோ பரீட்சைக்காகவே மாணவர்கள் படிக்கிறார்கள். இதில் பழையதிற்கும் புதியதிற்கும் ஒரு இடைவெளியிருக்கிறது. இதை எதுவிதத்திலும் நிரப்ப வேண்டும். பரீட்சை மோகத்தோடு சிறிதாவது சிந்தனையும் சேர்ந்தால் எங்கள் தலைசிறந்த பலமாகிய மூளை வலிமையைப் பேணிக் கொள்ளலாம்.



## வர்த்தக ஒலிபரப்பின் முதுகெலும்பாக விளங்கியவர்

(மானிப்பாய்)

"திரு. எஸ்: பி. மயில்வாகனன் லண்டனிலே காலமானார் என்பதைக் கேள்விப்பட்ட வானொலி நேயர்கள் அனைவருமே வேதனைப்பட்டார்கள், அந்த அளவுக்கு அவர் வாழ்ந்த காலத்தில் நேயர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறார். இன்றைய இளைய தலைமுறையினர் மயில்வாகனனைப் பற்றி அதிகம் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் ஒரு காலத்தில் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் முதுகெலும்பாக அவர் விளங்கினார்''

காலஞ்சென்ற திரு. எஸ். பி. மயில்வாகனனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 'தமிழ் ஒலி' வானொலி நேயர் மன்றம் யாழ். நகரில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றிய எழுத்தாளர் திரு. வெ. முருகமூர்த்தி அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மன்ற அமைப்பாளர் திரு. எஸ். உமாகாந்தன் தலைமை தாங்கினார். திரு. தம்பிஐயா தேவதாஸும் பேசினார்.

## ஜூலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கு என்ன நடந்தது?

இவ்வாறு பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தசநாயக்கா.

புனரமைப்புவரி சட்டமூலம் மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:- காடையர்கள் நாட்டை அழித்துவிட்டார்கள். பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விட்டனர். வர்த்தகம் மீண்டும் தலைதூக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்றார்.

## வடக்கு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்படவுள்ள பத்துக் கட்சிகளில் கூட்டணி, தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், கம்யூனிஸ்ட். சமசமாஜக்கட்சிகள், இ. தொ. கா. என்பன இணைப்புக்குஆதரவு தெரிவித்துள்ளன.

பிரதான கட்சிகளான சுதந்திரக்கட்சியும் மக்கள் ஐக்கியமுன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள் சிலரும் இணைப்புக்கு இதுவரை பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## அகதிகள் குடும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளும் நிவாரண நிதி வழங்கப்பட்டன. மேலும் இவர்களுக்கு இரு தடவைகள்பெறக் கூடியதான உணவுப் பொருட்களும் வழங்கப்படும் எனசமூக சேவை அதிகாரி தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட முகாம்களில் மேலும் 4,870 பேர் தங்கி இருக்கின்றனர். இவர்களுக்கு ஒரு நாளைக்கு தலா 10 ரூபா வீதம் உணவு வகைகள் வழமைபோல் வழங்கப்பட்டு வருகின்றன.

அகதிகள் முகாம்களைவிட்டு வெளியேறியவர்களில் சிலர் தங்கள் சொந்த இல்லங்களுக்கு சென்றுள்ளனராம். மற்றுமபலருக்கு குடியேற்றத் திட்டங்களில் வீடு வசதிகளையும் சுயதொழில்களையும் சமூகசேவை ஸ்தாபனங்கள் செய்துகொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சோமசுந்தரம்

வேலணை மேற்கைச் சேர்ந்த ஐக்கிய வியாபாரச் சங்க முன்னாள் காசாளர் பொன்னம்பலம் சோமசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் பொன்னம்பலம் வாலாம்பிகையின் அன்பு மகனும், நீலாம்பிகையின் அன்புக் கணவரும், கணேசரத்தினம், மரகதம், திருமணி (கோண்டாவில் மின்தறி நிலையம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கம், திருஞானசம்பந்தபிள்ளை, பவளவல்லி, தவமணி, ஆகியோரின் சகோதரரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணியளவில் தகனகிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். (10776)

# மரண அறிவித்தல்

## திருமதி பூவதி அம்மா இரத்தினம்

ஊர்காவற்றுறை கரம்பொன் தெற்கு திருமதி பூவதி அம்மாஇரத்தினம் காலமாகிவிட்டார் இவர் இரத்தினம் (V.G. Sons கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தராணி, பத்மராணியின் தாயாரும், விக்னேஸ்வரனின் மாமியாரும், தினேஸ்சின் அம்மம்மாவும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, செல்லத்துரை, கோபாலபிள்ளை, செல்வநாயகம் (கலா டிறேடிங் கம்பனி-கொழும்பு), திருநீலகண்டன் (றமோனா பிறிண்டிங்-கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 25-12-83 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கரம்பொன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். (10775)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ... வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu- P. O.Box, 49, Telephone, 22389 — 24126.